கோகுலம்

GOKULAM அக்டோபர் '95

ரூ. 5.00



TAMIL NADU PEOPLE'S BENEFIT FUND (PURASAWALKAM) LTD.,

79, Perambur Barracks Road, Purasawalkam, Madras - 600 007.
Central Government Approved (Reg. No. 18-21907/91) ☎ 6414536, 5323360

DEPOSIT SCHEME

	46 Days	3 Months	6 Months	1 Year	2 Years	3 Years	5 Years
FIXED DEPOSIT	15%	16%	17%	18%	19%	20%	21%

21% FOR SENIOR CITIZEN SPECIAL SCHEME

for Rs. 10,000/- and above 1 Year
21% for Rs.50,000 and above 5 Years-for all

Your Deposit Doubles in 42 months Triples in 70 months.

TNPBF HAPPY DAY MONEY BACK SCHEME	Pay Rs. 1000 on your happy day continuosly for 4 years and take Back Rs. 1250- every year on your happy day from the 5th year onwards for life long.

CASH CERTIFICATE	Rs.	1 Year	2 Year	3 Year	42 Months	70 Months	84 Months
	1,000	1,195	1,450	1,760	2,000	3,000	4,000
	5,000	5,975	7,250	8,800	10,000	15,000	20,000

"TAMIL MAHAL SELVAKALANCHIZAM" SCHEME

CASH CERTIFICATE	Rs.	10 Years	15 Years	18 Years
	1,000	6,920	18,900	30,000
	5,000	34,500	90,000	1,40,000
	10,000	69,000	1,80,000	2,80,000

"TAMIL ARASAN PORKUVIYAL" SCHEME

CASH CERTIFICATE	Rs.	15 Years
	7,500	1,30,000
	9,000	1,60,000

"SENTAMIL SELVAKUVIYAL" SCHEME

Rs.	21 Years
500	40,000
250	20,000

மங்கையர் திருமண திட்டம்

மாதம் ரூ. 100/- வீதம் 60 மாதங்கள் மட்டும் செலுத்தி 20ம் ஆண்டு முடிவில் ரூ. 1,50,000/- பெறலாம்.

கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ. 325 வழங்கப்படும். சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்.

வட்டி வீதம் ரூ. 1.85

SAVINGS DEPOSIT INTEREST RATE 10.5% P.A

கொடுக்கல் வாங்கல் ரூ.1/- செலுத்தி பங்குதாரர்களாகிறவர்களிடம் மட்டும்

WE WORK ALL DAYS

Working Hours : Week Days: 8.30 a.m. to 5.00 p.m. Sunday: 8.30 a.m. to 1.00 p.m.

V. KRISHNAMOORTHY B.A., B.L.,	A. THIAGARAJAN M.A.,	R.SUBRAMANIAN B.SC., B.L.,
Secretary	Executive Director	President

கோகுலம்

1995 அக்டோபர்
மாத இதழ்
மலர் : 13
இதழ் : 9



உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

இந்த இதழில் வாண்டுமாமாவின் சித்திரத் தொடர் மரகதச்சிலை முடிவடைகிறது. விறுவிறுப்புக்குன்றாத இதன் கதைப் போக்கையும், திரைப்படம் பார்ப்பது போன்ற ஒரு பிரமிப்பைத் தந்த ஓவிய அமைப்பையும் ஏராளமானவர்கள் பாராட்டி எழுதியுள்ளார்கள். இதே போல், மதிஒளியின் தொடர்கதையான புவனா தேடிய புதையலையும் புகழ்ந்து ஏராளமாகக் கடிதங்கள் வருகின்றன. ஒவ்வொரு இதழிலும் வெளிவரும் வித்தியாசமான போட்டிகளையும், தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கும் முறையையும் கூட பல பேர் புகழ்ந்து தள்ளி எழுதியிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் தனித்தனியாக நன்றி கூற இயலாமையால் இதன் வாயிலாகவே நன்றி தெரிவிக்கிறேன்.

வெறும் பாராட்டுக் கடிதங்களை எழுதுவதுடன் உங்கள் பணி முடிந்து விடுவதில்லை. கோகுலத்தை உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்குக் காட்டி, அவர்களையும் காசு கொடுத்து வாங்கிப் படிக்க வையுங்கள்.

பண்டிகை, பிறந்த நாட்களின் போது நாம் பரிசு பெறுவதை விட, வசதி இல்லாதவர்களுக்கு நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும். பரிசு பெறுவதை விட, பரிசு அளிப்பதில் உள்ள மகிழ்ச்சியே தனிதான் என்பதை விளக்கும் "இன்றே தீபாவளி!" கதை இந்த இதழில் வெளியாகிறது. உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

வாசகர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துகள்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,


ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

கோகுலம்

1995 அக்டோபர்

இந்த இதழில்...



* முயலை எப்படித் தூக்க வேண்டும்? - பக்கம் 5

* மரகதச் சிலை பக்கம் 33 (வண்ணச் சித்திரத் தொடர்)




* பறவைகளும் கூடுகளும் - பக்கம் 17 (சித்திர அறிவியல்)



அட்டையில் : கோகுல், வி. விக்ரம்,
கே. உத்ரா, திருமதி சித்ரா
வண்ணப்படம் : ராஜநாராயண்

* சுயஉருவம் - பக்கம் 77
(படக்கதை)





அன்றிலிருந்து இன்று வரை முதல் தொகுதி- வாண்டுமாமா. பக். 76 ரூ. 25/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 600 017.

தகவல் நூல்களைத் தருவதில் மிகவும் புகழ் பெற்ற ஆசிரியரின் தரமான படைப்பு இது. செய்திப் பரிவர்த்தனை, விளக்குகள், விசிறிகள், நங்கூரம், சர்க்கஸ், அச்சுக்கலை போன்று இருபது தலைப்புகளில், இவை எப்படித் தொடங்கின, இன்று வளர்ந்துள்ள நிலை என்ன என்பதை ஆசிரியர், தெளிவான நடையில் விளக்கியுள்ளார். செல்லப் பனின் படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன பயன் மிக்க படைப்பு தம்பி தங்கைகளுக்கு மட்டுமல்ல, வினாடி வினாவில் பங்கேற்பவர்களுக்கும், நடத்து பவர்களுக்கும் கூடப் பெரிதும் உதவும் புத்தகம்.



உங்கள் நூலகம்

முத்து நம் சொத்து, பூவை அமுதன், பக். 152, ரூ. 27/- சஞ்சீவியார் பதிப்பகம், 2, 6வது கிராஸ் தெரு, இரண்டாவது செக்டார், 2 வது தளம், டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை - 24.


கோகுலத்தில் தொடர்கதையாக வந்த ஒரு கிளைப் பறவைகளை மறந்திருக்க மாட்டீர்களே? அதை வழங்கிய ஆசிரியரின் அருமையான நாவல் தான் இது. நல்ல செயல்களை வலியச் சென்று செய்து, எல்லோருக்கும் உதவி, துணிச்சலாக இருந்து பள்ளியில் நல்ல பெயர் எடுக்கும் முத்து, பணத்திமிர் பிடித்த மூர்த்தியின் வெறுப்புக்கு இலக்காகி, இறுதியில் அவனையே திருத்தி உயர்த்தும் கதை. விறுவிறுப்புக்குக் குறைவில்லை. எழுதியவருக்குப் பெருமை தரும் படைப்பு. ராமுவின் ஓவியங்கள் நன்கு தரப்பட்டுள்ளன.

நமது உடல், தொகுப்பு என். செல்வநாதன், டாக்டர் ஆர் பாரதி செல்வன், பக்56, ரூ.20/- சயன்ஸ் பப்ளிகேஷன்ஸ், 6, ஏ.ஆர்.கே. காலனி. (முதல் தளம்), எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.

நமது உடலுறுப்புகள் செயல்படும் விதம், அவைகளில் உள்ள புதுமைகள் போன்றவை மிகவும் வியக்கும் வண்ணம் இந்தப் புத்தகத்தில் தக்க படங்களுடன் மிக அருமையாக விவரிக்கப்பட்டுள்ளன. உடல் உறுப்புகளின் இயக்கத்தை இந்த அளவுக்கு படிக்குச் சுவை குன்றாத வண்ணம் தந்துள்ள ஆசிரியர் களை எத்தனை, பாராட்டினாலும் தகும். சிறுவர் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்துப் பயன் பெறவேண்டிய புத்தகம். அட்டை சிறிது கனத்ததாக இருந்திருந்தால் மிகவும் நன்மை. அதிகமாகப் பயன் படுத்தப் போகிறவர்கள் சிறுவர் அல்லவா?)

உள்ளத்தால் உயர்ந்தவன், புவனை கலைச்செழியன், பக் 132, ரூ. 28/- குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணா நகர், மூவரசம்பட்டு அருகில், சென்னை - 600 091.

கோகுலம் வாசகர்களுக்குத் தனது தரமான சிறுகதைகள் மூலம் ஏற்கனவே நன்கு அறிமுகமாகியுள்ள ஆசிரியரின் அருமையான நாவல் இது. அனாதையாகி விடும் தன்மான உணர்வு கொண்ட சிறுவன் சொக்கலிங்கம்தான் இதன் கதாநாயகன். இவனுக்குப் படிப்படியாக ஏற்படும் சோதனைகள், அவற்றை அவன் எதிர்கொண்டு கடக்கும் விதம், துன்பங்களைச் சந்திக்கும் முறை இறுதி வெற்றி ஆகியவை படிப்போருக்குச் சிறிதும் அலுப்புத்தட்டாது நாவலைக் கொண்டு சென்றுள்ளது, ஆசிரியரின் திறமையைக் காட்டுகிறது. எல்லாப்பாரங்கம்மாள் பரிசு பெற்ற நூல் என்பது இதன் சிறப்பை மேலும் உயர்த்துகிறது.



முயலை எப்படித் தூக்க வேண்டும்?

ரேவதி

பாபு வரிசையில் நின்று கொண்டிருந்தான். எப்பொழுது தன்னுடைய முறை வரும் என்று அவன் துடித்துக் கொண்டிருந்தான். வரிசை ஆமை வேகத்தில் நகர்வது போலவும், கவனித்துக் கொண்டிருந்தவர் வேண்டுமென்றே மிக மிகத் தாமதமாகச் செயல்படுகிறவர் போலவும் அவனுக்குத் தோன்றியது.

அப்பாடி! ஒருவழியாக அவனுடைய முறை வந்தது.

"என்ன வேணும் தம்பி?"

"மைனா, இல்லைன்னா கிளி"

"தம்பி, பறவைகளையெல்லாம் எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்களே? கொஞ்ச நேரம் இருந்தேன்னா, யாராவது திருப்பிக் கொண்டு வந்து தரலாம். உனக்குத் தரேன். என்ன சொல்றே? காத்திருக்கியா? இல்லே வேற ஏதாவது எடுத்துக்கிட்டுப் போறியா?"

"முயல் குட்டி இருக்கா?"

"இருக்கே. இதோ தரேன்," என்று திரும்பிய செயலாளர், "தம்பி, முயலை வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போகப் போறியா, இல்லே இங்கேயே வைச்சு விளையாடப் போறியா?" என்று கேட்டார்.

"வீட்டுக்குத்தான் கொண்டு போகப் போறேன். இதோ பச்சை அட்டை."

புத்தகங்களுக்கென நூலகங்கள் இருப்பது போல், பறவை மிருகங்களுக்கு என அந்த விலங்ககம் செயல்பட்டு வந்தது. எல்லாவிதமான செல்லப் பிராணிகளும் பறவைகளும் அங்கே இருந்தன. உறுப்பினராகி அங்கேயே பெற்று விளையாடலாம். கொஞ்சம் அதிகம் சந்தா கட்டி வீட்டுக்கும் எடுத்து வரலாம். வீட்டுக்கு எடுத்துப் போக பச்சை அட்டை. அங்கேயே விளையாட நீல

அட்டை. சந்தா கட்டினால் உடனே அட்டை கிடைத்து விடாது. விலங்குகளை எந்த அளவுக்கு நேசிக்கிறார்கள், அவைகளைத் துன்புறுத்தாது இருக்கிறார்களா என்பதையெல்லாம் கவனித்து விட்டுப் பிறகே சந்தாவை ஏற்பார்கள்.

சதுரமான ஒரு மூங்கில் கூண்டை செயலாளர் எடுத்து வந்தார். அதில் கண்களை உருட்டி உருட்டி விழித்தபடி ஒரு வெள்ளை முயல் குட்டி இருந்தது.

"எப்படி எடுத்துக் கொண்டு போகப் போற தம்பி?"

"சைக்கிள் கேரியர்ல வைச்சுக் கட்டி எடுத்துக்கிட்டுப் போய்டுவேன்."

பாபு கையெழுத்துப் போட்டு விட்டு அடக்க முடியாத ஆசையுடன் முயல் கூண்டைத் தூக்கிக் கொண்டு நடந்தான். வீட்டுக்கு எப்போ போகப் போறோம். எப்போ கூண்டைத் திறந்து, முயல் குட்டியைத் தூக்கி அதன் மென்மையான பட்டு உடலை கன்னத்தில் படும்படி வைத்துக் கொஞ்சப் போகிறோம் என்ற துடிப்புடன் விரைந்தான்.

ஆனால் அடுத்த மூன்று மணி நேரம் கழித்து பாபு அவசரம் அவசரமாக முயல் குட்டியுடன் திரும்பி வந்தான். சதுரக் கூண்டைக் காணவில்லை. முயல் குட்டியின் காதைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வந்தான். முகத்தில் ஒரே அருவருப்பு!

"என்ன ஆச்சு தம்பி! கூண்டு எங்கே?"

"அந்தக் கூண்டைக் கழுவிக் காய வைச்சிருக்கிறேன் சார். சாயங்காலம் கொண்டு வந்து தந்து விடுகிறேன். முதல்ல இந்த அசிங்கம் பிடித்த சனியனை வாங்கிக்கிங்க."

பதறிக் கொண்டே ஓடி வந்த பணியாளர் ஒருவர், "தம்பி தம்பி. முயலை இப்படிக் காது நுனியைப் பிடித்துத் தூக்கக் கூடாது தம்பி. காது ஜவ்வு பாதிக்கும். காது ஆரம்பமாகும் இடத்தைக் கையில் பிடித்து, முயலின் அடிப்பாகத்தில் இன்னொரு கையைத் தாங்கிக் கொண்டு தூக்க வேண்டும்" என்றார்.

"இந்த அழகு முயலைத் தொட்டால் கூட அசிங்கம். இந்தாங்க வாங்கிக்கிங்க" என்று முயல் குட்டியை அவரிடம் அளித்தான் பாபு.

"என்ன ஆச்சு தம்பி? எத்தனையோ ஆசையா வாங்கிக்கிட்டுப் போனியே?"

"ஆமாம் சார். ரொம்ப ரொம்ப ஆசையா வாங்கிக்கிட்டுத்தான் போனேன். அதுக்கு காரெட், கோஸ், கீரை இவையெல்லாம் தந்தேன். சாப்பிட்டது. கொஞ்சினேன். பந்தை உருட்டி விளையாடியது. பின்னங் காலால் நின்று ஆட்டம் போட்டது. எங்க அப்பா போட்டோ கூட எடுத்தார். ஆனால்... ஆனால்..."

"என்னப்பா ஆனால்...?"


"இந்த முயல் குட்டி, புழுக்கை புழுக்கையா மலம் கழித்தது சார்."

"இருக்கட்டுமே. மலம் கழிக்காத உயிரினங்கள் உலகத்தில் கிடையாதே தம்பி. இதுக்காகவா இத்தனை அருவருப்பு?"


"அதில்லை சார். மலம் கழித்ததற்காக எனக்கு அருவருப்பு இல்லை சார். கழித்த புழுக்கையை எடுத்து எறிந்து சுத்தப்படுத்துவதற்குள், இது அத்தனையையும் மறுபடி தின்று விட்டது சார்! இந்த அநியாயத்தை இதுவரை நான் கேள்விப்பட்டதே இல்லை சார்."

செயலாளர் அமைதியாக பாபுவைப் பார்த்தார்.

"தம்பி, தவறு உன் மேல் இல்லை. எங்களுடையதுதான்.



எந்த விலங்கை விரும்பி எடுத்துக் கொண்டு போகிறார்களோ, அவைகளைப் பற்றிய வாழ்க்கை முறையை நன்றாகக் கூறி அனுப்பவேண்டும் என்று நான் வற்புறுத்துவதை அமைப்பாளர்கள் கேட்பதில்லை. ஆசையோடு பிள்ளைகள் வருகிறார்கள். அவர்கள் கேட்பதைக் கொடுத்தனுப்புங்கள் என்று கட்டாயப் படுத்துகிறார்களே தவிர, பிள்ளைகள் தாங்கள் எடுத்துக் கொண்டு போகும் விலங்கின் வாழ்க்கை முறையைப் பற்றி அறியக் கூடிய வாய்ப்பை அவர்களுக்குத் தருவதில்லை. அதன் விளைவுதான் இது." என்று பெரிதாக விளக்கிய செயலாளர், "தம்பி முயல்கள் தாங்கள் குழிக்



அறிவியல் உண்மைகள்

* முயல்கள் பாலூட்டி (Oryctolagus cuniculus). சுத்த சைவம்.

* குழிமுயலுக்கு Rabbi என்றும், காட்டு முயலுக்கு hare என்றும் பெயர்.

* குழிமுயலின் முன்கால்கள் குட்டையானவை. அதனால் இவை குதித்துக் குதித்துத் தாவும். வீட்டில் வளர்க்கப்படுவது இதுவே. பெரும்பாலும் வெள்ளை நிறம். சில நாடுகளில் மட்டுமே காணலாம்.

* காட்டு முயலின் கால்கள் நான்கும் ஒரே அளவானவை. குடுகுடுவென்று ஓடும். உலகெங்கும் பரவியது.

* இறைச்சிக்காகவும், பட்டு உடலுக்காகவும் இரண்டுமே வளர்க்கப்படுகின்றன.

* உடலைப் பட்டுப் போல் மென்மையாக மினுமினுப்புடன் வைத்துக் கொள்ள வைட்டமின் 'பி' சத்தும், அமினோ அமிலங்களும் இவைகளுக்குத் தேவை. இவைகளை இவை நேரடியாகப் பெற இயலாது. எனவே இவை வெளியிடும் மலப் புழுக்கைகளில் இந்தச் சத்து நிறைந்திருக்கும். அதனால் இவை, தங்கள் மலப் புழுக்கைகளைத் தாங்களே மறுபடி தின்று விடுகின்றன. இது தவிர்க்க இயலாதது. இயற்கை அன்னையின் பரிசு இது. இவைகளை இப்படி உண்ண விடாது செய்து விட்டால், இவைகளின் மென்மையான பட்டு முடி உதிர்ந்து தோல் விறைப்பாகி இவை இறந்து விடும்.

கும் புழுக்கைகளைத் தாங்களே தின்று விடும் வழக்கம் உடையவை" என்றார்.

"நான் கேள்விப்பட்டதே இல்லையே!"

"எனக்குப் புரிகிறது. இதனால்தான் எல்லாவற்றையும் தெரிந்து கொண்ட பிறகே எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்கிறேன்."

பாபு தலை குனிந்து நின்றான்.

"தம்பி. இதைப் பார்க்கும் போது நமக்கு அருவருப்பாகத்தான் தோன்றும். ஆனால், முயல்களுக்கு இது தவிர்க்க முடியாதது. பட்டு முயல் என்று புகழ்கிறோமே... அந்தப் பட்டு மேனியை பட்டுப் போல் மெத்மெத்தென்று வைத்துக் கொள்ள முயல்களுக்கு வைட்டமின் பி-சத்தும், அமினோ அமிலங்களும் அவசியம் தேவை. இவைகளை அவைகளால் நேரடியாகப் பெற்றுக் கொள்ள இயலாது. வெளியே வரும் புழுக்கைகளில் இந்தச் சத்துகள் நிறைந்திருக்கும். அதனால் அவை புழுக்கைகளை மறுபடி தின்று விடும். இது இயற்கையின் வினோதங்களில் ஒன்று."

"ஐயா. பெரிய தவறு செய்து விட்டேன். இப்பொழுது எனக்கு மனது சமாதானமாகி விட்டது. நான் இந்த முயலை மறுபடி எடுத்துச் செல்ல அனுமதிப்பீர்களா?"

"தம்பி. நீ எடுத்துச் சென்றது குழி முயல் இனத்தைச் சேர்ந்தது. செல்லப் பிராணியாக வளர்க்க இது ஏற்ற இனம். பெரும்பாலும் தூய வெண்மையாக, மெத்து மெத்தென்ற உடலுடன் இருக்கும். தரையில் குழிதோண்டி அதற்குள் வாழ விரும்பும் இது. குட்டையான முன் கால்கள் உடையது. இது குதித்துக் குதித்து ஓடுவது பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்."

"வேறு இனங்கள் கூட உண்டா ஐயா?"

"உண்டு. இன்னொரு இனம் காட்டு முயல். நான்கு கால்களும் ஒரே அளவாக இருக்கும். வேகமாக ஓடும். வேட்டை நாய்கள் பிடிப்பது இவைகளையே. காட்டு முயல் உலகின் பல பாகங்களிலும் உள்ளன. ஆனால் குழி முயல் சில பகுதிகளில் மட்டுமே இருக்கிறது."

பாபு, குட்டி முயலின் அடியில் ஒரு கையைக் கொடுத்து, காதுகளின் அடிப் பாகத்தைப் பிடித்து எடுத்துக் கொண்டு கிளம்பினான்.



நன்றியைக் காட்டு..!

காட்சி:1

(தலைமையாசிரியரின் அறை. தலைமை ஆசிரியர் அமர்ந்திருக்க கோதை வருகிறாள்)

கோதை: (வந்து கொண்டே) வணக்கம் சார். பள்ளி முடிந்து போகும் போது, வந்து பார்க்கச் சொன்னீர்களாமே?

த. ஆசிரியர்: ஆமாம் கோதை. நம்ம பள்ளிக்கு இது பொன்விழா ஆண்டாச்சே? மாணவ மாணவியரின் இலக்கியத் திறமைகளைக் கண்டு பிடித்து ஊக்குவிக்க ஒரு கவிதைப் போட்டி வைத்திருக்கிறோம்.

கோதை: இது ஏற்கனவே தெரிந்ததுதானே சார்? ' அறிவிப்புக்கூட வந்ததே? கடைசி தேதி கூட முடிந்து விட்டதே?

த. ஆசிரியர்: ஆமாம். போட்டிக்கு வந்த இருநூறு கவிதைகளைப் பரிசீலித்து சிறந்தவற்றை நடுவர்களுக்கு அனுப்பி வைக்க உன் உதவி தேவைப்படுகிறது கோதை. நீ கவிதை எழுதவில்லை என்றாலும், சிறந்த கவிதைகளைக் கண்டுபிடித்து அவற்றின் இலக்கியச்சுவையை எல்லோரும் அனுபவிக்கும்படி செய்வதில் திறமையானவள் என்பதை இலக்கியக் கூட்டங்களில் பார்த்திருக்கிறேன். அதோடு கூட, நீ நடுநிலையாக இருந்து விருப்பு வெறுப்பு இன்றித் தீர்ப்பு வழங்கக் கூடியவள் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை. அதனால்தான், நானே செய்ய வேண்டிய இந்தப் பொறுப்பை உன்னை நம்பி ஒப்படைக்கிறேன். இது இரகசியமாக இருக்கட்டும்.

கோதை: உங்கள் நம்பிக்கைக்கு முற்றிலும் ஏற்றவளாக நடந்து கொள்வேன் சார்.

த.ஆசிரியர்: இன்று இரவு எட்டு மணிக்குமேல் வீட்டுக்குப் போகும் வழியில் நானே கவிதைகளைக் கொண்டு வந்து தருகிறேன். எல்லாவற்றிற்கும் டம்மி எண் கொடுத்து, பதிவு செய்து கொண்டு, பிறகு பரிசீலிக்க ஆரம்பியம்மா. ஐம்பது கவிதைகளைத் தேர்வு செய். அது போதும்.

கோதை: நல்லது சார். நான் வரேன்(போகிறாள்)

காட்சி:2

(இரவு நேரம். கோதையின் வீடு. முன் பக்க அறை. கோதை போட்டிக் கவிதைகளைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறாள். கதவை யாரோ தட்ட, கோதை சென்று

திறக்கிறாள். புவனா உள்ளே வருகிறாள்)

புவனா: என்ன கோதை இப்படி வியப்புடன் பார்க்கறே! அம்மாவுக்கு மாத்திரை வாங்கிக் கொண்டு போறேன். மாத்திரை தீர்ந்து போச்சுன்னு இப்பத் தான் சொன்னாங்க. சோதனையா உங்க வீட்டுக்கு எதிரே வந்ததும் சைக்கிள்ள காத்து குறைஞ்சு போச்சு. சரி, இதை இங்கேயே விட்டுட்டு உன் சைக்கிளை வாங்கிக் கொண்டு போகலாம்னு வந்தேன்.

கோதை: இங்கேயே இரு புவனா. சைக் கிள் சாவியைக் கொண்டு வந்து தரேன். (கோதை உள்ளே போக, புவனாவும் பின்னாலேயே போகிறாள்)

புவனா: (மேசையில் கவிதைகளைப் பார்த்து) என்னடி இது! போட்டிக்கு வந் திருக்கும் கவிதைகள் போல இருக்கே! முதல் பரிசிலனையை நீதான் பண்ணு கிறாயா?

கோதை: இந்தக் கேள்விக்கெல்லாம் பதில்கூறும்படி இருக்கும் என்றுதான் உன்னை அங்கேயே இருக்கச் சொன் னேன்.

புவனா: நான் வந்து பார்த்ததால் இப்போ என்ன ஆயிட்டுது? என் உயிர்த் தோழி, கவிதைப் போட்டிக்கு நடுவராக இருக்கிறாள் என்பது எனக்கு எத்தனை பெரிய பெருமை?

கோதை: சரி, தெரிஞ்சுக்கிட்டே இல்லே? தயவு பண்ணி இதை உன்னோட வைச்சுக்க. வேறு யாருக்கும் தெரியக் கூடாது என்பது தலைமை ஆசிரியரின் உத்தரவு. அதை நான் மீறிட்டேன்.


புவனா: அதனால் என்ன ஆயிட்டது கோதை? டில்லியில் வேலைக்குப் போக இருக்கும் உன் அண்ணாவுக்கு எங்க பெரி யப்பா வீட்டில் தங்கியிருக்க நான்தானே ஏற்பாடு செய்யப் போகிறேன்? உங்கப்பா புதுவீடு கட்டத் தேவைப்படும் இரும்புக் கம்பிகளுக்கும், சிமெண்டுக்கும் எங்க மாமாவிடம் சொல்லித்தானே ஏற்பாடு செய்யப் போகிறேன்?

கோதை: இதையெல்லாம் இப்போ எதற்காகக் கூறுகிறாய் புவனா?

புவனா: காரணமாகத்தான் கோதை. நானும் கவிதைப் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறேன். நீ மனம் வைத்தால் என்னுடைய கவிதையைப் போட்டிக்குத் தேர்வு செய்து நடுவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

கோதை: (திடுக்கிட்டு) புவனா...! நீ என்ன சொல்லுகிறாய்? நான் நடுவு நிலை தவறாதவள் என்ற நம்பிக்கையில் தலைமை ஆசிரியர் இந்த முக்கியப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத் திருக்கிறார். நம்பிக்கைத் துரோகம் பண்ண என்னைத் தூண்டுகிறாயே! இது நியாயமா?

புவனா: என்னமோ பரிசுக்குப் பரிந் துரைக்கும்படியா உன்னைக் கேட்கிறேன்? நடுவர்களின் பரிசிலனைக்கு அனுப்பும் கவிதைகளில் என்னுடையதைச் சேர்த்து



விடு என்றுதானே கேட்கிறேன்? இது எந்த விதத்தில் அநியாயம்? சரி போகட்டும். என்னுடையதை நடுவர்களுக்கு அனுப்பும் படி கூட நீ பண்ண வேண்டாம். நம்ம சுலோ இருக்கிறாளே, எட்டாவது சி பிரிவு. அவளும் கவிதைப் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய கவிதையை நடுவர்களின் பரிசிலனைக்குப் போகாமல் பார்த்துக்கொள். எனக்கு அது போதும்.

கோதை: எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது புவனா. இந்தப் பொறுப்பை ஏன் என்னிடம் தந்தார்கள் என்று

உண்மையாகவே வருத்தப்படுகிறேன். (கண் கலங்குகிறாள்)

காட்சி:3

(புவனாவின் வீட்டுக் கூடம். புவனாவின் அப்பா பத்திரிகை படித்துக் கொண்டிருக்க புவனா வருகிறாள்)

புவனா: அப்பா, இன்றைய பேப்பரில், விளையாட்டுப் பகுதியில் மாவட்டங்களுக்கு இடையேயான கால்பந்துப் போட்டிகளின் முடிவு வந்திருக்கே... இருக்கும்மா. பெரிய மனுஷங்க வீட்டுப் பிள்ளைங்க எல்லாம் இவங்களை ஏதோ ஒரு வகையிலே நன்றிக்கடன் பட்டவர்களாக வளைச்சுப் போட்டு தங்கள் பெயரைப் பரிந்துரைக்கும்படி செய்துட்டாங்கன்னு கேள்விப்பட்டேன்... விளைவைப் பார்த்தால் இது உண்மைன்னும் தோணுது.

புவனா: எத்தனை பெரிய அநியாயம்! நன்றிக்கடன் பட்டவங்கன்னா அதை இப்படியா காட்டவேணும்? நம்ம மாவட்டத்தின் மானமே கப்பலேறிட்டதே! தலைகுனிவா என்ன இருக்கு? கனிப்பட்ட



படிச்சீங்களா?

அப்பா: படிச்சேம்மா. நம்ம மாவட்ட அணியைப் பத்தி நாக்கை வெட்டிக்கும்படி கேவலமா எழுதியிருக்காங்களே! இப்படிப்பட்ட ஒரு அணியை அனுப்பி, தலைகுனிய வைத்ததை விட, திறமையான ஆட்டக்காரர்கள் இல்லைன்னு கைவிரிச்சுட்டு; பேசாம கௌரவமா இருந்திருக்கலாம்னும் எழுதியிருக்காங்களே!

புவனா: இதுக்கு என்னப்பா காரணம்? இவங்களையெல்லாம் யாருப்பா தேர்ந்தெடுக்கறாங்க?

அப்பா: இதுக்குன்னு ஒரு குழுவே நன்றிக் கடனைக் காட்ட வேண்டிய இடம் இதுவல்ல. இது நம்ம மாவட்டத்தின் நற்பெயரைக் காக்க வேண்டிய நிகழ்ச்சின்னு நடுவர்கள் செயல்பட்டிருக்கணும் அப்பா.

அப்பா: நடுவர்கள் அப்படித்தாம்மா நினைச்சிருப்பாங்க. ஆனால், அவர்களுக்கு உதவியவர்கள் அப்படி நினைக்க மாட்டாங்களே? தங்கள் நன்றிக் கடனை இப்படித்தான் காட்டணும்னு அவங்க வற்புறுத்தியிருப்பாங்களே...? நடுவர்கள் "நாங்க இதைச் செய்ய மாட்டோம். உண்மையான திறமையை ஊக்குவிப்பதும், நம்ம

மாவட்டத்தின் நற்பெயரைக் காத்து உயர வைப்பதும்தான் எங்கள் கடமைன்னு" பிடிவாதமா இருந்தா, உதவியவர்கள் அவர்களை சும்மாவா விட்டு வைச்சிருப் பாங்க?

புவனா: இந்த மாதிரி வற்புறுத்தல் களுக்கு நடுவர்கள் அசைந்து கொடுக்கக் கூடாது அப்பா. அதோடு, நன்றிக்கடன் என்பது வேறு, பொதுத் திறமை என்பது வேறுன்னு எல்லோரும் நினைக்கணும். அப்பத்தான் உண்மையான திறமை வெளிப்படும். நாடும் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

அப்பா: ஏம்மா... பெரிசா, இத்தனை இலட்சியம் பேசுகிறாயே... நீ என்னம்மா பண்ணியிருக்கே...? உன் கவிதையைப் பரிந் துரைக்கவும், நீ வெறுக்கும் கலோசனாவின் கவிதையை விலக்கவும் நீ, கோதையிடம் போய்க் கேட்கவில்லை? அவ அண்ணா வுக்கு டில்லியில் நம்ம உறவுக்காரங்க வீட்டில் தங்க ஏற்பாடு செய்யப் போவதை யும், வீடுகட்ட தரமான சிமெண்ட், இரும்பு வாங்கித்தர உதவுவதையும் காட்டி, கோதையை நீ வற்புறுத்தவில்லை? இதே போன்ற நிர்பந்தம் மற்ற நடுவர்களுக்கும் வராது என்பது என்ன நிச்சயம்? இந்தப் போட்டியின் முடிவும் கால்பந்தாட்டப் போட்டியின் முடிவைப் போலத்தான் இருக்கப் போகிறது! போட்டி, போட்டி யாக இருக்கும்படி செய்வது அதில் கலந்து கொள்பவர்கள் காட்டும் ஒத்துழைப்பைப் பொறுத்தது அம்மா.

புவனா: (திகைத்து) அப்பா!

அப்பா: நடுவர்கள் என்பது நடுவு நிலை தவறாதவர்கள் என் பதை உணர்த்தும் சொல். நடுவு நிலை தவறாதவர்கள் என்பவர்கள் பகைவர், அயலார், நண்பர் என்ற எதையும் கருதாது திறமை ஒன்றையே கருதி அளவிடு பவர்களாக இருக்க வேண் டும். இதுதான் நடுவர்களுக் கான அறம் என்று வள்ளுவர் கூடக் கூறியிருக்கிறார். நீ நன்றாகத்தானே கவிதை எழுதுபவள்? இருந்தாலும் அது தரமானதாக இல்லை என்றால் என்ன வாகும்? நிர்பந்தம் காரணமாக அது பரிசு பெற்றுவிட்டது என றால், அதைப் படிப்பவர்கள் உங்கள் பள்ளி, போட்டிக் கான நடுவர்கள் ஆசிரியர் களைப் பற்றி எப்படியெல் லாம் கேவலமாகப் பேசு வார்கள் என்பதை எண்ணிப் பார்த்தாயா? நடுவர்களை தங்கள் கட மையை நேர்மை யாகச் செய்யும்படி விட்டு விட்டால் எல்லாமே வெற்றி யாகிவிடும் அம்மா.

(புவனா தலை குனி



கிறாள்)

அப்பா: காலையில் கோதையின் அப்பாவும் அண்ணாவும் வந்திருந்தார்கள். சிமெண்டும், இரும்பும் வேறு இடத்தில் ஏற்பாடு செய்து கொள்வதாகவும், அதே போல் டில்லியில் தங்கியிருக்கவும் வேறு ஏற்பாடு செய்து கொள்வதாகவும் கூறினார்கள். நான் வற்புறுத்திக் கேட்ட பிறகு காரணத்தைக் கூறினார்கள். நான்தான் உனக்குப் பதில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, இது வேறு, போட்டிவேறு என்று கூறி அனுப்பி வைத்தேன்.

புவனா: (கண்கலங்க) அப்பா, என் தவறு எனக்குப் புரிந்து விட்டது அப்பா. இனி இம்மாதிரி, நன்றிக் கடனைக்காட்டி நடுவு நிலையை தவறி, தகுதி இல்லாதவைகளுக்கு ஆசைப்பட மாட்டேன் அப்பா. இது உறுதி.




அப்பா: உனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்திம்மா. உன் நிர்பந்தம் வருவதற்கு முன்னாலேயே உன் கவிதை அதன் உயர்வு காரணமாக நடுவர்களுக்குப் போக கோதையால் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. கோதை சந்தர்ப்பவாதியாக இருந்தால் உன் நிர்பந்தத்திற்குப் பணிந்து செயல் பட்டதாகக் கூறி, உதவிகளைப் பெற்றிருக்கலாம். ஆனால், நிர்பந்தத்தால் கவிதை தேர்வு செய்யப்படவில்லை என்பதை உணர்த்த, உதவிகளை மறுத்துவிட அப்பாவையும், அண்ணாவையும் அனுப்பியிருக்கிறாள்; நடுவு நிலைக்கு இலக்கணமாக செயல்பட்டிருக்கிறாள்.

புவனா: என் உயிர்த் தோழியான அவளைப் பற்றி எனக்குத் தெரியாததை எங்கள் தலைமை ஆசிரியர் தெரிந்து வைத் திருக்கிறாரே! அவர் நம்பிக்கை பொய் யாகவில்லை. கோதை என் தோழி என்ப தால் நான் பெருமைப்படுகிறேன் அப்பா.


தகுதி என ஒன்றும் நன்றே பகுதியான்
பாற்பட்டு ஒழுகப்பெறின் (குறள் 111)


நன்றே தரினும், நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை
ஒன்றே ஒழியவிடல் (குறள் 113)





வகைப்படுத்துங்கள்; சேராதது எது?

— போட்டி









இங்கே மொத்தம் பன்னிரெண்டு படங்கள் இருக்கின்றன. இவைகளை வகைப்படுத்துங்கள் பார்க்கலாம். ஒன்று மட்டும் எதிலும் சேராது தனித்து இருக்கும். வகைப்படுத்திய பொருள்களையும், தனித்திருக்கும் பொருளையும் ஒரு தபால் கார்டில் எழுதி, கீழே உள்ள முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முகவரிக் கூப்பனில்லாது வருபவை ஏற்கப்பட மாட்டா. முடிவு தேதி 31.10.95. தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப் பேற்காது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய தொடர்பு முகவரியை அவசியம் தர வேண்டும். ஒன்றுக்கு மேல் சரியான விடை இருந்தால் குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.


10 10 10 10 10 10 10 10 10
10
10 ஆசிரியர் கோகுலம்
10 47, ஜவாஹர்லால் நேரு சாலை,
10 ஈக்காடுதாங்கல்,
10 சென்னை - 97.

1950 ஆம் ஆண்டு. குழந்தைக் கவிஞர் அவர்கள் சிறுவர்க்கான மாத இதழ் பூஞ்சோலையை நடத்தி வந்தார். குழந்தைகளுக்காக எழுத வேண்டும் என்ற எழுச்சியை என் போன்ற பள்ளி மாணவர்களின் மனத்தில் பூஞ்சோலை ஊட்டி வந்தது. நண்பர்கள் ஜெ. எத்திராஜனும்,


"இரண்டுமே நாலு நாள் இடைவெளியில் நம்ம கடையில் வாங்கியவை. அவர்கள் பணத்தைக் கேட்கலையே? பதிலுக்கு வேறு புத்தகம் தானே கேட்கிறார்கள்? படிக்கிற மாணவர்கள். கைப்பணத்தைப் போட்டு இலவச நூலகம் நடத்தறாங்க. திருவல்லிக்கேணியில் இருந்து நடந்து வந்து, நம்ம கடையில்தான் புத்தகம்

பறவைகளும் கூடுகளும்

ஆழி



உலகில் சுமார் 8580 பறவை இனங்கள் இருக்கின்றன. ஆனால், அவை கட்டுகிற கூடுகள் ஒன்றைப்போல் ஒன்று இருப்பதில்லை. 8580 வகையான கூடுகள். ஒரு கூட்டை வைத்து அந்தக் கூட்டுக்கு உரிய பறவை என்ன பறவை என்பதைப் பறவை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள்!




பறவைகள் கூடுகட்டுவது அவற்றின் இயல்பூக்கம்—அதாவது, இயற்கையிலேயே ஏற்படக்கூடிய தூண்டுதல் உணர்ச்சி. சில தூக்கணாங்குருவிகளை, அவற்றின் 4 தலைமுறை வரை, கூடுகட்டும் சந்தர்ப்பமே தராமல், கூண்டிலேயே வளர்த்து வந்தார்கள். ஆனால், 5-வது தலைமுறையில் உள்ள தூக்கணாங்குருவிகளுக்குக் கூடு கட்டும் சந்தர்ப்பம் கொடுத்ததும், அவை எல்லா தூக்கணாங்குருவிகளைப்போலவே, இயற்கையாகவே அதேமாதிரி கூடுகள் கட்டின!

உலகில் மிகவும் சிறிய கூடுகட்டும் பறவை கட்டைவிரல் அளவே உள்ள 'ஹம்மிங் சிட்டு'. அதன் கூடு, பாசிகளாலும் சிலந்தியின் நூல்களாலும் அமைக்கப்படுகிறது. முட்டை ஒரு பட்டாணி அளவுதான் இருக்கும்!





பறவைகள் பலவிதமான பொருள்களைக் கொண்டு, பலவகையான கூடுகள் கட்டுகின்றன. 'ஸ்கரப் பௌல்' என்னும் பறவையில் ஓர் இனம், குப்பைக் கூளங்களைக் குவித்துக் கூடுகட்டுகிறது. சில சமயம் இந்தக் கூடு, 6 மீட்டர் உயரமும், 45 மீட்டர் சுற்றளவும் கொண்டதாக இருக்கும்!





மிகவும் பெரிய கூடுகட்டும் பறவை வழுக்கைத் தலை கழுகு. அது ஒரு தடவை சுமார் 3 மீட்டர் குறுக்களவும், 6¼ மீட்டர் ஆழமும் உள்ள கூடு கட்டியது. இதற்கு ஆன குச்சிகள் 2 டன்கள்! அந்தக் கூடு 35 ஆண்டுகளாக இருந்தது!



'அமெரிக்கன் ராபின்' பறவை, களிமண்ணால் கிண்ணம் போன்ற கூடு கட்டுகிறது!

தென் அமெரிக்காவில் உள்ள 'ரூபஸ் ஓவன்' பறவை, மாட்டின் சாணத்தையும், மண்ணையும் கலந்து, உள்ளே கூடாக, ரொட்டி சுடும் அடுப்பு மாதிரி, உருண்டை யாகக் கட்டுகிறது. அதனால் அந்தப் பறவைக்கு 'ரொட்டிக் காரன்' என்னும் பெயரும் உண்டு.







'ஸ்விப்ட் லெட்' என்னும் பறவை, வேறு எந்தப் பொருளைக் கொண்டும் பயன்படுத்திக் கூடு கட்டு வதில்லை; தன் வாயில் சுரக்கும் ஒருவிதப் பசை யைக் கொண்டே கூடு கட்டுகிறது!



'தையற்காரப் பறவை' மரத்தில் உள்ள பச்சை இலை களை ஒன்று சேர்த்து, நாரால் தைத்துத் தன் கூட்டை அமைத்துக் கொள்ளுகிறது.



'ஷெல்டு ராக்' என்னும் வாத்து இனத்தைச் சேர்ந்த பறவை, தன் உடலில், மார்புப் பக்கத்து மெல்லிய இறகுகளை உதிர்த்து அவற்றைக் கொண்டே தன் கூட்டைக் கட்டிக் கொள்ளுகிறது.






நியூஜிலாந்தில் உள்ள 'மட்டன்' பறவை, எல்லா பறவைகளையும்போல கூடு கட்டுவதில்லை. அது தரையில் பொந்து தோண்டிக்கொண்டு அதில் வசிக்கிறது!

மலேசிய மீன்கொத்திப் பறவை, தான் தின்ற மீன்களின் முட்களை ஓரிடத்தில் சேர்த்து வைத்திருந்து அவற்றைக் கொண்டே கூடு கட்டிக் கொள்ளுகிறது!

மயில் மரத்தில் கூடுகட்டுவதில்லை. குச்சிகள், சருகுகள், புல் முதலிய வற்றைப் பரப்பித் தரையில் கூடுகட்டுகிறது.







அரிசோனாவில் உள்ள 'பாலைவன ரென்' பறவை, அங்கே உள்ள முட்கள் அடர்ந்து குத்திட்டு நிற்கும் உயரமான கள்ளி மரத்தின் தண்டின் உச்சியில் கூடு கட்டுகிறது. இந்தக் கூட்டை அதன் எதிரிகள் நெருங்க முடியாது.



'வெள்ளை வால் கடல் கழுகு' ஆண்டு தோறும் புதிதாகக் கூடு கட்டுவதில்லை. ஒரே கூட்டைப் புதுப்பித்துப் புதுப்பித்துச் சுமார் 20 ஆண்டுகள் கூடப் பயன்படுத்தும்!





'பிளமிங்கோ' என்னும் பறவைகள், தனித்தனி இடங்களில் கூடு கட்டுவதில்லை. எல்லா பறவைகளும் சேர்ந்து, ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து, மணலில் பள்ளம் தோண்டி, கூடுகள் அமைக்கின்றன.



நியூகினியாவில் உள்ள 'பொன் பந்தல் குருவி' தன் கூட்டுக்கு மேலே பந்தல் அமைத்து, அதில், பூக்கள், கிளிஞ்சல்கள் முதலியவற்றை வைத்து, அலங்காரம் செய்கிறது. அந்தப் பூக்கள் வாடி விட்டால் அவற்றை அகற்றிவிட்டுப் புதிய பூக்களையும் வைக்கிறது!

'கிரிப்' என்னும் நீர்ப் பறவை, நாணல், மரப் பட்டைகள், காய்ந்த செடி கொடிகள், முதலிய மிதக்கும் பொருள்களைக் கொண்டு, தேங்கிக் கிடக்கும் நீர் நிலைகளில் 'மிதக்கும் கூடு' கட்டுகிறது. அந்தக் கூடு நீரில் மிதந்து போய்க்கொண்டே யிருக்கும் — தெப்பம் மாதிரி!







பிரேஸிலிலுள்ள 'ஹோட்ஸின்' பறவை, நீரோடையின் மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கிளையில்தான் கூடு கட்டும்! ஏனென்றால், அங்கே குரங்குகள் அதிகம். குரங்குகளால் இடையூறு வராமல் அப்படிக் கூடு கட்டும்!

'கோல்டன் ஈகிள்' என்னும் கழுகு வெவ்வேறு இடங்களில் இரண்டு கூடுகள் கட்டும். ஒரு கூட்டில் ஓர் ஆண்டும், மற்றொரு கூட்டில் அடுத்த ஆண்டும் மாற்றி மாற்றி வசிக்கும்!



ஆந்தை சொந்தமாகக் கூடு கட்டிக் கொள்ளுவதில்லை. அது மற்ற பறவைகள் வேண்டாம் என்று விட்டுவிட்டுப்போன பழைய கூடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ளும்!





மதன் கூட...

அன்று ஞாயிற்றுக் கிழமை. மார்க்கெட்டுக்குப் போயிருந்த மதனின் அப்பா வீடு திரும்பிவிட்டார். வந்ததும் வராததுமாக அவர் கேட்ட முதல் கேள்வியே, 'மதன் எங்கே?' என்பதுதான்.

"சனி, ஞாயிறு அவன் வீடு தங்குவானாக்கும்? விடிஞ்சி ஏழு மணிக்கெல்லாம் மட்டையைத் தூக்கிட்டு கிரிக்கெட் ஆடப் போனான். மணி பத்தாகியும் சாப்பிட வரக் காணோம்" - உடல் நலமில்லாமல் படுத்துக் கிடந்த மதனின் அம்மா அங்கலாய்த்தாள்.

அப்பா வீட்டின் நடு ஹாலுக்கு வந்தார். அங்கே தாறு மாறாகக் கிடந்த பொருள்களின் அலங்கோலம் அவர் மனத்தில் ஒருவகை அயர்வை ஏற்படுத்தியது. தான் படுத்துறங்கிய படுக்கையைக் கூட மதன் சுருட்டி வைக்கவில்லை. இரவில் அவன் படித்த புத்தகங்களும் நோட்டுகளும் அடுக்கி வைக்கப்படாமல் சிதறிக் கிடந்தன. முதல் நாள் மாலை அவன் அவிழ்த்துத் தூக்கி எறிந்த சட்டையும் டவுசரும் மூலைக்கொன்றாக அந்த அறையை அசிங்கப்படுத்திக் கொண்டிருந்தன.

"எட்டாங்கிளாஸ் படிக்கிற பையனுக்குக் கொஞ்சமாச்சும் பொறுப்பு வரலையே! நோயாளியாக் கெடக்கிற தன் தாயைப் பத்திக் கவலைப்படுறானா? ஆபீசுக்குப் போய்விட்டு வந்து சமையல் முதல் எல்லா வேலைகளையும் கவனிக்கும் என் மீதாவது இரக்கம் வரக் கூடாதா?" - தனக்குள் நொந்து கொண்டார் அப்பா.

முதல் நாள் ராத்திரி கூட அவனுக்குப் படித்துப் படித்து அறிவுரை சொன்னது அவரது நினைவுக்கு வந்தது.

ஆபீஸ் பைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தார் அப்பா. மலர்ந்த முகத்துடன் தனது புரோகிரஸ் கார்டை நீட்டி, "இந்த வாட்டியும் நாந்தாம்ப்பா கிளாஸ்

குரு. சீனிவாசன்

பஸ்ட்!'' என்று சொல்லிக் கொண்டு, வாயெல்லாம் பல் தெரிய நின்றான் மதன்.

ஆதரவாகத் தட்டிக் கொடுத்த அப்பா, ''வெரிகுட் மதன்: எனக்கு ரொம்பப் பெருமை. படிப்பு மாதிரி மத்த விஷயங் களிலேயும் கொஞ்சம் அக்கறை காட்ட ணும்'' என்று இதமாகப் பேச ஆரம்பித் தார்.

''நான் என்னப்பா செய்யணும்?'' உணர்ச்சி பொங்கிடத் துடித்தான் மதன:

''பெரிசா ஒன்னும் இல்லேப்பா. சின்னச் சின்ன காரியங்களுக்காக மத்த வங்க கைகளை எதிர் பார்க்கக் கூடாது. நம்மாலே முடியுற; நமக்குரிய வேலை களை, நாமே செஞ்சுக்கிடப் பாக்கணும். உதாரணமா, நாம எடுத்துப் பயன்படுத்தற பொருள்களை அதுக்குரிய எடத்துலே திரும்ப வைக்கிறது. நம்ம படுக்கையை நாமே சுருட்டி வைக்கிறது. புத்தகம் பத் திரிக்கைகளைப் படிச்சிட்டு ஒழுங்கா மடக்கி, அடுக்கி வைக்கிறது. இதையெல் லாம் நமக்கு நாமே செய்யலாமில்லே! இதைத்தான் 'செல்ப் ஹெல்ப்'புன்னு சொல்லுவாங்க. மகாத்மா காந்தி சொன்ன சுய தேவைப் பூர்த்திங்கிறதும் இது தாம்ப்பா.''

அப்பா சொன்னதைக் கவனமாகக் கேட்ட மதன், ''இவ்வளவு தானேப்பா? செஞ்சிட்டா போகுது'' என்று ஆமோ தித்து விட்டுச் சென்றான். ஆனால் விடிந் ததும் எல்லாவற்றையும் மறந்து விட்டு, இப்படி விளையாட ஓடி விட்டானே என்று எண்ணிய போது, அவர் மனத்தில் விசனம் தலை காட்டியது.

வாங்கி வந்த வீட்டுச் சாமான்களை எடுத்து வைக்க அலமாரியை நெருங்கி னார் அப்பா. கீழே கிடந்த துணிகளைப் பார்த்து அசந்து போனார். அவை அத் தனையும் மதனின் சட்டை, துணி மணி கள், கஷ்டப்பட்டுத் துவைத்துக் காசு கொடுத்து அயர்ன் பண்ணி வைத் தவை. ஏன் இப்படிக் கலைந்து கசங்கிக் குப்பையாய்க் கிடக்கின்றன?


குழம்பி நிற்கும் அவர் நிலை யைப் புரிந்து கொண்ட மதனின் அம்மா படுக்கையில் இருந்தவாறே, ''நேத்து அவன்தான் ஒன் னொன்னா கலைச்சிப் பொத்தான் இல் லேன்னு தூக்கி எறிஞ்சான். எட்டாங் கிளாஸ் படிக்கிறவன்; ஒரு பட்டன் வச்சித் தைக்கக் கூடப் படிச்சிட்டு வரணுமாக் கும்? அப்படிச் செல்லம் கொடுத்துப் பொறுப்பில்லாமே வளத்துத் தொலைச் சிட்டோம்'' என்று நொந்து சலித்துக் கொண்டாள்.

அதே சமயம் வாசலில், ''அம்மா தேக் கிற துணிகள் இருக்கா?'' என்ற குரல் உரக் கவே கேட்டது. மதனின் அப்பா வாச லுக்கு வந்தார். தள்ளு வண்டியோடு வீதி யில் நின்றவனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயதுதான் இருக்கும்.

''என்னப்பா! நீயா தேய்க்கப் போறே தம்பி?'' - சந்தேகத்துடன் விசாரித்தார் அவர்.

''ஆமாங்க சார். அருமையா அயர்ன் பண்ணுவேன். தேய்ச்சப்புறம் திருப்தி இருந்தா கூலி கொடுங்க'' - அவனது பேச் சில் தொனித்த உறுதியையும் நம்பிக்கை யையும் பார்த்து மதனின் அப்பா வியந்து போய் நின்றார். 'இந்தச் சின்ன வயசில் இவனுக்கு என்ன கஷ்டமோ?' என்று எண்ணியபோது அவர் மனத்தில் இரக்கம் சுரந்தது. உள்ளே சென்று மதன் கலைத் துப் போட்டிருந்த துணிகளை அள்ளிக் கொண்டு வந்து அவனிடம் போட்டு விட்டு, அவனது வேலையை வேடிக்கை பார்க்க வாசலில் உட்கார்ந்தார்.

அந்தத் துணிகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கஞ் சிப் பசை போட



ஆரம்பித்தவன், சற்று வியப்போடு சட்டைகளை அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்தான். பிறகு வாசலில் அமர்ந்திருப்பவரை ஏறிட்டுப் பார்த்து, "சார், இது பூராவும் மதனோட சட்டைகள் மாதிரி இருக்கே! இந்த வீடு மதனோடதா? நீங்க மதனுக்கு அப்பாவா?" என்று கூச்சத்தோடு கேட்டான்.

"ஆமாப்பா. நீ யாரு? எங்க மதனை உனக்குத் தெரியுமா?" என்று ஆச்சரியம் தாளாமல் கேட்டார் அப்பா.

"தெரியுமாவா? மதன் என்னோட கிளாஸ்மேட் சார். அதனால தான் சட்டை அடையாளத்தை வச்சிக் கேட்டேன்" என்று குதூகலத்துடன் பதிலளித்தான் பையன்.

"ஒம்பேரு?" என்று கேட்டவருக்கு, "மாதவன்!" என்று பதில் வந்தது.

"ஏம்ப்பா மாதவா, உனக்கு



அப்பா அம்மா....?"

"இருக்காங்க சார். சனி, ஞாயிறுகளிலே நானும் கொஞ்சம் சம்பாதிக்கிறது அவங்களுக்கு உதவியா இருக்கும் பாருங்க!"

அவனது பேச்சைக் கேட்டு வாயடைத்துப் போய் விட்டார் அப்பா. 'இந்தச் சின்ன வயதில் இப்படியொரு பொறுப்புணர்வா!' என்று வியக்கத் தோன்றியது அவருக்கு. மதனோடு மாதவனை வைத்து ஒப்பிட்டுப் பார்த்த போது, அவர் மனத்தில் விரக்தியும் வேதனையும்தான் மிஞ்சியது. வீட்டு வேலைகள் நினைவுக்கு வர உள்ளே எழுந்து போய் விட்டார்.

கால் மணி நேரம் கழித்து வாசலில் புதிய பேச்சுக்குரல் கேட்டு மதனின் அப்பா வெளியே வர எண்ணினார். விளையாடி விட்டுத் திரும்பி இருந்த மதன், மாதவனோடு பேசிக் கொண்டிருப் பது கேட்டது. அவர்களது பேச்சைக் கேட்கும் ஆவல் எழுந்ததால், கதவின் பின்னே மறைந்து நின்றார்.

"டேய் மாதவா, என்னடா இந்தப் பக்கம்? இந்த வேலை கூட உனக்குத் தெரியுமாக்கும்? - இது வியப்பில் ஆழ்ந்து நின்ற மதனின் கேள்வி.

"என்ன இப்படிக் கேட்டுட்டே மதன்? நான் ஆறாங்கிளாஸ் படிக்கிறப்பவே எங்கப்பாகிட்டே கத்துக்கிட்டேனே? ஒவ்வொரு சனி ஞாயிறும் இருபதோ முப்பதோ சம்பாதிச்சிடுவேன். இந்தப் பக்கம் வரறது இதுதான் பஸ்ட் டைம்."

"படிச்சிக்கிட்டு இந்த வேலையும் பாக்க முடியறதாடா உன்னாலே?" - மதன் தான் கேட்டான்.

"இந்த வேலையை நான் செய்யாட்டி என் படிப்பு எப்பவோ நின்னு போயிருக்கும். எங்க வீட்டு நெலமை அப்படி. என்னோட ஸ்கூல் பீஸ், நோட்டு, புஸ்தகம் எல்லாத்துக்கும் கை கொடுத்து உதவுறதே இந்த வேலைதான் மதன். நமக்குத் தேவையானதை நாமே தேடிக்கிறதுதாம்ப்பா கெட்டிக்காரத்தனம். காந்தித் தாத்தா சொல்ற சுய தேவைப் பூர்த்தி பற்றி நம்ம மாஸ்டர் கூட நமக்குச் சொன்னது நெனவிருக்கா....?" - மாதவன் ஒரு பிரசங்கத்தையே தொடங்கப் போனான்.

"சாரிடா மாதவா; எங்கப்பாவும் அடிக்கடி இதைப்பத்திச் சொல்வாரு. அப்போ வெல்லாம் அது வெறும் கதையாத் தோணிச்சி எனக்கு. ஆனா, இப்போ உன்னைப் பார்த்தப்புறம்தான் எனக்கு நேர் அனுபவமா புரிய ஆரம்பிச்சிருக்கு. இனிமே எங்கப்பா அம்மாவுக்கு நான் ஒரு சுமையாத் தோணமாட்டேன். நீ உன் வேலையைப் பாரு. இப்போ எனக்கும் வீட்லே நெறைய வேலை கெடக்கு!" ஏதோ சபதம் ஏற்பது போல நெஞ்சை நிமிர்த்திப் பேசி விட்டு ஓடிய மதனைப் பார்த்து, மகிழ்ச்சியில் பூரித்துப் போனார் அப்பா. கிணற்றடிக்கு ஓடிய மதனை மறைந்து நின்று கண்காணித்தார்.

என்ன ஆச்சரியம்! மதனும் மாறி விட்டானே! வாளியில் ஊறிக் கொண்டிருந்த துணிகளைத் துவைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். அவனுக்குள் பொறுப்புணர்வைப் புகுத்திய மாதவனை அப்பா மானசீக மாக வாழ்த்தினார். அம்மாவை அழைத்து வந்து மதனின் மாற்றத்தைக் காட்டினார். மகிழ்ச்சியில் அம்மாவுக்குப் பாதி நோய் பறந்தோடிப் போய்விட்டது!



அமெரிக்காவில் முதன் முதலில் பெனான்சா என்ற இடத்தில்தான் தங்கம் கண்டு பிடிக்கப் பட்டது. அப்படிக் கண்டு பிடித்த போது அருகிலிருந்த மக்கள் மிகவும் மகிழ்ந்தனர். அன்றிலிருந்து ''பெனான்சா'' என்ற சொல் அதிக பண வரவு, மகிழ்ச்சி ஆகியவற்றைக் குறிக்கும் சொல்லாக மாறியது.

— தக்கோலம் அ. முஸ்தபா

கொ. மா. கோதண்டம்



கிளை நுனிக்குப் போகாதீங்க!

அந்த மாணவர்கள் மலையடிவார ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தனர். பெரும் பாறைகளும் இடையிடையே மரங்களும் இரு புறக் கரையெங்கும் வரிசையாக இருந்தன.

ஐந்தாறு காட்டுக் கோழிகள் சண்டையிட்டவாறே பாறைகளில் தாவி ஓடிக் கொண்டிருந்தன.

"டேய் நீலன் வராண்டா" என்றான் பரமசிவன்.

எல்லோரும் எழுந்து தலைதுவட்டிக் கொண்டு ஆடைகளை அணிந்து கொண்டனர்.

"என்ன சாமி கூப்புட்டேகளா?" என்றான் வந்த ஆதிவாசிச் சிறுவன் நீலன்.

"ஆமா நீலா. குளிச்சி முடிச்சிட்டோம். கொஞ்ச நேரம், மேல எங்கேயாவது எங்கள கூட்டிப் போயேன். ஏதாவது காட்டுக் காய் கனிகள் உள்ள எடமா போவோம்பா. அங்கேயே டிபனும் சாப்புடலாம்."

ஆண்டியப்பன் சொன்னதும், நீலன், "சாமி கொஞ்சம் வடக்கே போயி ஒரு கல்லு மேல ஏறினா ரெண்டு மலைக்கு ஊடே ஒரு ஏரி இருக்கு. அதங்கரையில பூரா நெல்லிக்கா மரங்க இருக்கு. முத்துன நெல்லிக் காயெல்லாம் கீழே விழுந்து கெடக்கும். எடுத்துத் திங்கலாம் வாரீகளா" என்று கேட்டான்.

நீலன் வழிகாட்ட அவர்கள் கரடு முரடான ஒற்றையடிப் பாதையில் ஏறிக்

கொண்டிருந்தனர்.

"சாமி கீழே பாத்து நடக்கணும். பாதை பூரா மர வேர்களாக இருக்கும். தட்டி கீழே விழுந்தா பாறைகள்ள மோதணும்" – நீலன் எச்சரித்தவாறே முன்னே சென்றான்.

காற்று பலமாக வீசியது. தூறலும் விழுந்தது. அவர்கள் சிறிது நின்றனர். "அங்க பாருங்க வரையாடு புல் மேட்டுல மேஞ்சிகிட்டு நிக்கி."

நீலன் காட்டிய இடத்தில் ஒரு ஆடு மேய்ந்து கொண்டிருந்தது.

"அட அழகா இருக்கே!" என்றான் அகிலன்.

"உஸ் சத்தம் போடாதீங்க ஓடிடும்."

"உய்ய்ய்..."

இராமன் மகிழ்ச்சியால் விசிலடித்தான். திரும்பிப் பார்த்த ஆடு பாறைகளில் தாவி மேலே ஏறி ஓடி விட்டது.

"ஏண்டா விசிலடிச்சி விரட்டினே?" அதட்டினான் பிச்சை.

"மன்னிச்சிருங்கடா. சந்தோசத்துல விசிலடிச்சிட்டேன்."

"பேசாம வந்திங்கன்னா வேற ஏதாச்சும் பார்க்கலாம்."

காற்று சிறிது குறைந்ததும் அவர்கள் புறப்பட்டனர். அடர்ந்த வனம் வந்ததும் வெளிச்சம் குறைந்து இருட்டி விட்டது போல இருந்தது. பயத்தால் அவர்கள் பேசாமல் மெல்ல நடந்து சென்றனர். தூரத்திலிருந்து ஏதோ சத்தம் வேறு பய முறுத்தியது. அடர்வனம் முடிந்து புல் மேட்டைத் தாண்டியதும் ஒரு கடவில் திரும்பி நடந்தனர்.

"அதோ, அங்கதான் ஏரி இருக்கு. இன்னும் கூப்புடு தூரந்தான்" என்றான் நீலன். சிறிது நேரத்தில் அவர்கள் ஏரிக்கரைக்கு வந்து விட்டனர்.

"அடடா தரையெல்லாம் நெல்லிக்காய்களா இருக்கு. கால் வைக்கவே இடமில்லையே."

"மெல்லப் பரந்து நடங்க. பாதத்தால நெல்லிக்காய்களை ஒதுக்கிட்டு மெல்ல நடக்கணும். நெல்லிக்காய்க மேலே கால் வச்சோமுன்னா அது உருண்டு கால் வழுக்கி கீழே விழுந்துருவோம்."

நெல்லிக்காய்கள் தரையெங்கும் பரவிக் கிடந்தன. மரங்களில் வேறு கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்கின. அதன் கனத்தால் கிளைகள் கீழ்நோக்கி வளைந்திருந்தன. ஏரியில் தண்ணீர் நிறைந்திருந்தது. இலைகளும் கிளைகளும் விழுந்து தண்ணீர் கறுத்திருந்தது.

அவர்கள் பாதங்களால் தரையை உரசிக் கொண்டு கால்களை விலக்கியவாறு மெல்ல நடந்து சென்றனர். ஒரு சின்னப் பாறையில் உட்கார்ந்து கொண்டனர்.

"அடேயப்பா! இந்தக் காய்களை எடுத்துப் போயி சந்தையிலே வித்தா ஒரு வீடே கட்டிடலாம் போலிருக்கே?"

"ஆளுக்கு ஒரு சாக்கோ பையோ கொண்டு வந்தமா வீட்டுக்காவது எடுத்துப் போகலாம்."

"நெல்லிக்கா ரொம்பச் சத்துள்ள தாமே?"

"ஆமாம். ஒரு நெல்லிக்கா ரெண்டு ஆப்பிளுக்கு சமமாமே!"

"ஆமாமா. ஆறு ஆரஞ்சிப் பழங்களுக்கு சமமானதாம்."

"நெல்லிக்கா வடை செஞ்சி சாப்புட்டா எவ்வளவு ருசியா இருக்கும் ஆகா!"

"இதைச் சாப்பிட்டா ஆயுள் அதிகமாகுமாமே?"

"ஆமா. அதுக்குத்தான் அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி தந்தாரு."



''அப்ப நெல்லிக்காய்க்கு ஒரு வர லாறே உண்டுன்னு சொல்லு.''

''சாமி, இத காய வைச்சு சூரணம் செஞ்சு சாப்புடலாம். லேகியம் செஞ்சு சாப்புடலாம். நாலாசத்து கூடும். பசி யெடுக்கும். நோய்களே வராது சாமி.''

அவர்கள் பேசிக் கொண்டே முற்றிய காய்களை எடுத்துக் கடித்துச் சாப்பிட் டனர்.

''உப்பும் மிளகாப் பொடியும் இருந்தா ஒரு வெட்டு வெட்ட லாமே?''

''அப்படிச் சாப்புட்டா இதுல உள்ள சத்து குறைஞ் சிடும் சாமி. அதஅத அந் தந்த ருசியிலேயே சாப்புடுறதுதான் நல்லது சாமி.''

நீலன் இப் படிச் சொல்லி விட்டு ஒரு கிளையை எட் டிப் பிடித்து உலுப்பினான். நெல்லிக்காய் கள் ''பொலபொல''வெனக் கீழே விழுந் தன. அவற்றைச் சேர்த்து எடுத்து பாறை யில் வைத்துக் கல்லால் அடித்தான். கொட்டைகளை எடுத்து எறிந்து விட்டு ஓடிச் சென்று கூக்க வாழைகளைப் பறித்து வந்து மடக்கி



தொன்னைகள் செய்து ஆளுக்கு ஒன்றாய்க் கொடுத்தான். ஒரு துண்டை வாங்கி அடித்து வைத்ததை அதில் போட்டுப் பிழிந்து தொன்னைகளில் ஊற்றினான்.

"நெல்லிச் சாறு குடிங்க சாமி. ரொம்ப ருசியா இருக்கும்" என்றதும் மாணவர்கள் அப்படியே குடித்து விட்டு, "அற்புதம் நீலா! எல்லாம் உன் கைராசி" என்று அவனைப் பாராட்டினர்.

"போகும் போது உங்க துண்டுகள்ள முடிஞ்சி கொண்டு போகலாம் சாமி."

"அப்படியே செய்யலாம் நீலா. இந்த ஏரியில குளிக்கலாமா?"

ஒரு மாணவன் கேட்டதும் நீலன் பரபரப்படைந்தான். "வேண்டாம் சாமி. இங்கேயெல்லாம் குளிக்கக் கூடாது. கிழே போய்க் குளிக்கலாம்."

"எதுக்குப்பா இங்க குளிக்க வேண்டாங்கறே?"

"வேண்டாண்ணா கேளுங்களேன்."

"நான் குளிக்கத்தான் போறேன்" – ஒரு மாணவன் பிடிவாதமாகக் கூறி சட்டையைக் கழற்றினான்.

"இப்படியெல்லாம் செய்வீங்கன்னா இனிமே யாரையும் எங்கேயும் கூட்டிப் போக மாட்டேன் சாமி."

"சரிப்பா. நீ சொன்னதைக் கேக்குறோம் உடனே கோபிச்சுக்காதே. ஆமாம், அடிக்கடி ஏரிக்கரையையே சுத்தி சுத்திப் பாக்குறயே,'இங்க புலி கிலி வருமாப்பா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. வாங்க அந்தக் கல்லால மரத்துப் பாறையில போய் உட்கார்ந்து பேசுவோம். அங்க இருந்து பாத்தா ஏரிபூரா அழகா தெரியுஞ் சாமி."

அவர்கள் அங்கு சென்று பாறையில் ஏறி அமர்ந்து கொண்டனர்.

பாறையை ஒட்டி ஒரு பெரிய கல்லால மரம் கிளைகளை அகன்று பரப்பி நின்றது. கிளைகளிலிருந்து பாம்புகள் போல ஒற்றை விழுதுகள் சரஞ்சரமாய் தொங்கிக் கொண்டிருந்தன.

"இதுல ஊஞ்சலாடலாமே?" என்றான் ஒருவன்.

"வேண்டாம் சாமி என்று நீலன் கூறியதை ராமன் கேட்கவில்லை. வழுக்கிடுச்சின்னா ஏரியில விழணும்."

"மரமேறி உலுப்புறேன். பொறுக்குங்க.

துண்டுகள்ள முடிஞ்சி வையுங்க" என்ற வாறே ராமன் மளமளவென்று மரத்தி லேறி கிளைக்கு வந்து உலுப்பினான். மழைத் துளிகள் சடசடவென விழு வதைப் போல் முற்றிய காய்கள் கீழே விழுந்தன. மற்ற மாணவர்கள் அவற்றைச் சேகரித்தனர்.

"சாமி நல்லா புடிச்சிக்கோங்க. ஞாபகம் கிளை நுனிக்கு போகாதீங்க" – நீலன் எச் சரித்தான். நீலனும் குனிந்து காய்களைப் பொறுக்கும் போது ராமன் கிளையில் மேலும் ஊர்ந்து வந்தான்.

'படபடா'ரென்று கிளை முறிந்த சப்தமும், 'தொபீ'ரென்று ராமன் ஏரியில் விழுந்த சத்தமும் கேட்டு அவர்கள் அதிர்ச்சியில் 'ஐயோ' என்று அலறினார் கள்.

"சாமி முதலை வருது!" நீலன் கத்தினான்.

ஏரியில் ஆள் விழுந்த சத்தம் கேட் டதும் எதிர்க் கரையில் புல் மறைவில் மறைந்திருந்த முதலை 'குபுக்'கென்று தண்ணீரில் பாய்ந்தது. வாயைத் திறந்த வாறு ராமன் உள்ள இடத்திற்கு வேகமாக வந்து கொண்டிருந்தது.

முரடான உடம்பும், துருத்திய கண் களும், பயங்கரமான பற்களும், வரும் வேக மும் கண்ட அவர்கள் பயத்தால் அலறி னார்கள்.

பாறையிலிருந்த நீலன் தொங்கும் கல்லால் மரத்தின் வலுவான ஒற்றை விழு தைப் பிடித்துக் கொண்டு எவ்வித் தாவி ஏரிப்பக்கம் 'சர்'ரென்று போனான்.

"சாமி எங்காலைப் புடிச்சுக்கோங்க."

ராமன் கைகளை நீட்டிப் பிடிக்க முயன்றான். அதற்குள் நீலன் அந்தப் பக் கம் போய்த் திரும்பினான். மறுபடியும் எவ்வித் தாவினான்.

"புடி" நல்லாப் புடி, 'புடிச்சிக்கோ' எல்லோரும் ஆளாளுக்குக் கத்தினார்கள்.

ஊஞ்சலாக வந்த நீலனின் கால்களை நீரிலிருந்த ராமன் தாவிப் பிடித்துக் கொண்டான். விழுது கரைக்குத் திரும் பியது. ராமனின் பாதி உடம்பு நீரிலேயே உரசிக் கொண்டு வந்தது. அருகில் வந்த தும் மற்றவர்கள் ராமனைப் பிடித்துக் கரையேற்றினார்கள். ஆள் அகப்பட வில்லை என்றதும் முதலை தண்ணீருக் குள் மூழ்கிச் சென்று விட்டது. ராமன் அதிர்ச்சியால் மயங்கிக் கிடந்தான். மற்ற வர்களை விலகச் சொல்லி விட்டு துண்டை வாங்கி ராமன் முகத்தில் நீலன் விசிறினான்.

"நல்லவேளையா ஆபத்துல டார்ஜான் மாதிரி இவன் உகரைக் காப்பாத்துனே நீலா. உனக்கு நாங்க எல்லோரும் நன்றிக் கடன் பட்டுருக்கோம்பா."


"நீதாம்பா உண்மையிலேயே அந்த ஆதிமூலன். முதலை வாயிலிருந்து கஜேந் திரனை மீட்ட கண்ணன் மாதிரி இன் னக்கி எங்க ராமனை முதலைகிட் டேயிருந்து காப்பாத்திட்டே."

"சரியாச் சொன்னே. நீலன்தான் ஆதி மூலன்."

மெல்லக் கண்விழித்த ராமன் நீலனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். எல் லோருடைய கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது.

"சாமி. இந்த ஏரியில முதலை இருக் குன்னுதான் உங்கள குளிக்க வேண்டா முன்னு சொன்னேன்" என்ற நீலனை அவர்கள் அன்பொழுகப் பார்த்தார்கள்.

சேர்த்த நெல்லிக்காய்களை துண்டு களில் கட்டிக் கொண்டு எல்லோரும் இறங்கி நடந்தார்கள்.



''நெய் ரோஸ்ட்னு சொன்னாங்க, நெய் வாசனையே இல்லையே...?''

''ஒருவேளை பொய் ரோஸ்ட்டா இருக் குமோ...?''


– சீர்காழி. வி. ரேவதி

''எங்க பள்ளிக்கூடத்தில் ஐந்து எலிகள் சேர்ந்து பூனைக்கு மணி கட்டுகிற கதையை நாடகமாக நடிக்கப் போறோம்.''


''நாடகத்துக்கு என்ன பெயர் வைச்சிருக் கீங்க?''


''பாஞ்ச் எலி சபதம்.''


– எஸ். தட்சிணாமூர்த்தி



கேளுங்கள் சொல்லப்படும்







• பழைய புத்தகங்களின் காகிதங்கள், நோட்டுகளின் காகிதங்கள் ஆகியவை நாளாக ஆக வெள்ளை நிறத்தை இழந்து மங்கலாகி விடுகின்றனவே! இதற்கு என்ன காரணம்? - வி. சுமதி, ஆம்பூர்.

காகிதங்களை வெண்மையாக்க எத்தனையோ விதமான ரசாயனக் கலவைகளைச் சேர்க்கிறார்கள். நாளாக ஆக இவை மறைந்து விடுகின்றன. இதன் காரணமாகவே காகிதம் வெள்ளை நிறத்தை இழந்து மங்கிவிடுகிறது.

• பேரிக்காய் நம் நாட்டுப் பழமா? இதை வெறும் பழமாகத்தான் பயன்படுத்தலாமா? - தா. கிருஷ்ணமூர்த்தி, குடியாத்தம்.

பேரிக்காய் தென் இந்தியாவில் நீலகிரி, கோடை, சேர்வராயன் மலை, காந்தமலை போன்ற மலைப் பகுதிகளில் பயிராகிறது. இது மரத்தில் காய்க்கும் காய். இதன் மலர்கள் வெண்மையாக பார்க்க மிக அழகாக இருக்கும். பேரிக்காயின் தாயகம் மேற்கு ஆசியா. இது ஆப்பிள் இனத்தைச் சேர்ந்தது. நாம் இதைப் பழமாகத் தின்கிறோம். அவ்வளவே. ஆனால், இதை ஐரோப்பாவில் சமையலுக்குப் பயன்படுத்துகிறார்கள். பழரசம் தயாரிக்கிறார்கள். இதில் இருந்து மது கூடத் தயாரிக்கிறார்கள். பேரிக்காய் மரத்தில் இருந்து வேலைப்பாடு மிக்க பொருள்களைச் செய்கிறார்கள். பேரிக்காயில் பல கலப்பு இன வகைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

• Hologram என்பது என்ன? - கி. கண்ணபிரான், கோவில்பட்டி.

Hologram என்பது ஓர் ஒளிப்பதிவு முறை. முப்பரிமாணப் படங்களை (Three dimensions) பிரதியெடுக்க இந்த முறை பெரிதும் துணைபுரிகிறது.

• கேட்கும் கருவியான Hearing Aidடை யார் கண்டு பிடித்தார்கள்? -கா. அந்தோணி சாமி, பாளையம்கோட்டை.

டெலிபோனைக் கண்டு பிடித்த அலெக்சாண்டர் கிரகாம் பெல், தனது ஆராய்ச்சியின் மூலம், மின்சார கேட்கும் கருவி ஒன்றை அமைப்பது சாத்தியமானதே என்று நிரூபித்தார். இதன் அடிப்படையில் 1901 ஆம் ஆண்டில் நியூயார்க்கைச் சேர்ந்த Miller Reese Hutchinson என்பவர் முதலாவது காது கேட்கும் கருவியைச் செய்து காட்டினார். இது ஒரு பெரிய டிரான்ஸிஸ்டர் அளவுக்கு இருந்தது. டெலிபோனில் கேட்கும் கருவியின் அளவுக்கு இதன் கேட்கும் பகுதி இருந்தது. 1935 ல், ஏ. எட்வர்டு ஸ்டீவன் என்பவர்தான்

காந்தி விமானத்தில் பயணித்தாரா?

சின்ன கருவியைக் கண்டு பிடித்தார். இப்பொழுது உள்ள 'மினி டிரான்ஸிஸ்டரைஸ்டு' அளவு கருவிகள் 1952 ல் வெளிவரத் தொடங்கின.

• அண்டார்க்டிகாவும், ஆர்டிக்கும் ஒன்று தானா? - நா. தனுஷ்கோடி, கிருஷ்ணாபுரம்.

சரியாப் போச்சு போ! இரண்டும் வெவ்வேறு துருவங்கள். அண்டார்க்டிகா பூமியின் தென் கோடியில் உள்ள துருவப் பிரதேசம். ஆர்ட்டிக் என்பது பூமியின் வட கோடியில் உள்ள நீர்க்கடல் பகுதி.

• சூரிய கிரகணத்தின் போது, வானில் நட்சத்திரங்கள் இருப்பதைக் காண முடியுமா? - தூ. மணி எஸ். பாரதி.

வானம் தெளிவாக இருந்தால், சக்தி மிக்க நட்சத்திரங்கள் சிலவற்றைக் காண இயலும் என்கிறார்கள் அறிவியலார். காணக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதுவரை இப்பொழுது உறுதி!

• யானைக்கு வெள்ளை நிறம் பிடிக்காது என்பது உண்மைதானா? - எ. குணபாண்டி, விருதுநகர்.

உண்மையே. இதன் காரணமாகவே காட்டுக்குள் செல்பவர்கள் வெள்ளை உடையைத் தவிர்க்கிறார்கள். யானைப் பாகன் வெள்ளை உடை அணிவதில்லை. யானைகள் அதிகம் வாழும் சரணாலயப் பகுதிகளில் உள்ள மைல் கல்களுக்கும் கூட மஞ்சள் வண்ணமே பூசுகிறார்கள்.

• கடலில் விமான நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளனவா? - டி. மாலா, டி. கலா, எருக்கஞ்சேரி.

இதுவரை இல்லை. ஆனால் போர்த்துகீசிய அரசு, தனக்குச் சொந்தமான 'மேகோ' என்ற தீவின் கடற்கரையை ஒட்டி ஒரு பிரம்மாண்டமான கடல் விமான நிலையத்தை அமைத்து வருகிறது.

• யானைத் தந்தங்கள் வெண்மையாகத்தானே இருக்கும்? கறுப்பு கூட உண்டு என்கிறாரே என் மாமா? - கோ. கமால், கோவை.

இந்திய யானைகளின் தந்தம் வெண்ணிறமானதே. ஆனால் ஆப்பிரிக்க யானைகளில் கறுப்பு தந்தம் உடையவை உள்ளன.

• நம் தேச பிதா காந்தியடிகள் விமானப் பயணத்தை மேற் கொண்டதில்லை என்று என் நண்பன் கூறுகிறான். நான் இருக்காது என்று பந்தயம் கட்டியிருக்கிறேன். அக்டோபர் இதழுக்குள் பதில் கூறிவிடுங்கள். - கோ. ரமணி, கடலூர் - 2.


உங்கள் நண்பன் விஷயம் அறிந்தவனாகத் தோன்றுகிறான். காந்தியடிகள் ஒருமுறை கூட விமானத்தில் பயணம் செய்யவில்லை என்பது முற்றிலும் உண்மை. பந்தயத்தில் தோற்றுவிட்டீர்கள். உங்கள் பந்தயம் காரணமாகப் புதிய ஒரு தகவலை அறியும்படி வைத்த பந்தயத்திற்கு நன்றி!

• பட்டாம்பூச்சியை உணவாக்கிக் கொள்பவர்களும் இருக்கிறார்களா? இவை விஷமுள்ளவையா? - கா. தம்புசாமி, திருவள்ளூர்.

நான் அறிந்தவரை பட்டாம்பூச்சிகளைத் தின்போர் இருப்பதாகத் தெரியவில்லை. உலகில் உள்ள பட்டாம்பூச்சிகளில் Monarch என்ற வகைப் பட்டாம்பூச்சி இனம் மட்டுமே நச்சுத்தன்மை உடையது. மற்றவை எல்லாமே தீங்கற்றவை.

• ஒருவரே இரண்டு வெவ்வேறு துறைகளுக்காக நோபல் பரிசு வாங்கியவர்கள் இருக்கிறார்களா? - தா. தன்னகோபால், தரங்கை.

இருக்கிறார்களே. Linus Pauling வேதியியலுக்காகவும், அமைதிக்காகவும் இருமுறை நோபல் பரிசு பெற்றார். ஆனால் இரண்டும் வெவ்வேறு ஆண்டுகள்.







சே ர ந ம் பி

நான்கு மாத நிபந்தனை!



பூங்குன்றம் கிராமம்.

அங்கே இயற்கை அன்னை தன் அழகை தாராளமாக வாரி வாரி வழங்கியிருந்தாள். அந்த ஊர் மக்கள் நல்லவர்கள்; நாணயமானவர்கள்; நல்ல உழைப்பாளிகள். அப்படிப்பட்ட மக்களிடையே விதிவிலக்காக அவ்வூர் பண்ணையார் மட்டும் இருந்தார். அவரிடம் எப்பொழுது போனாலும் வேலை கிடைக்கும். ஆனால், அவரிடம் யாரும் நான்கு மாதங்களுக்கு மேல் தங்கி வேலை பார்க்க மாட்டார்கள். காரணம், பண்ணையார் வேலைக்கு வருபவர்களிடம் ஈவு இரக்கம் சிறிதும் இன்றி மிகக் கடுமையாக வேலை வாங்குவார். அவரிடம் வேலைக்கு வந்து விட்டால், குறைந்தது நான்கு மாதங்களுக்கு முன்பே கூறினால் தான் விலகலாம். அப்படி ஒரு நிபந்தனையை பண்ணையார் விதித்து வந்தார். பண்ணையாரைப் பற்றி உண்மை தெரியாதவர்கள் இப்படி வந்து சிக்கிக் கொண்டு, நான்கு மாதங்கள் வரை படாதபாடுபட்டு வேலை செய்து விலகிக் கொள்வார்கள்.

இப்படிப் பண்ணையாரிடம் மாட்டிக் கொண்டவர்களுள் சிவஞானமும் ஒருவர். இவர் பாம்பு வைத்தியம் செய்பவர். பக்கத்து ஊர்க்காரர். வறுமை காரணமாக இவர் பண்ணையாரிடம் வேலைக்குச் சேர்ந்தார். பண்ணையாருக்கு வைத்தியம் செய்வது மட்டுமல்லாமல், அவர் வேண்டுமென்றே இட்ட பல வேலைகளையும் செய்யும்படி ஆயிற்று. சிவஞானம் நான்கு மாதங்கள் படாதபாடுபட்டு வேலையிலிருந்து விலகிக் கொண்டார். ஒருநாள் பண்ணையாரைப் பாம்பு கடித்து விட்டது. சிவஞானத்திடம் கொண்டு போனார்கள். "எப்படியாவது எனக்கு வைத்தியம் பண்ணி என்னைப் பிழைக்க வையுங்கள்" என்று வேண்டிக் கொண்டார் பண்ணையார்.


"உங்களைப் போன்றவர்களுக்கு வைத்தியம் பண்ண வேணும் என்றால் குறைந்தது நான்கு மாதங்களுக்கு முன்பே சொல்ல வேண்டுமே?" என்றார் சிவஞானம்.

ஊரார் சிவஞானத்தின் நிபந்தனையை ஆதரித்தனர். பண்ணையாருக்குத் தன் தவறு தெரிந்தது. "இனி யாரையும் கொடுமைப்படுத்த மாட்டேன். நான்கு மாதங்களுக்கு முன்பே கூறினால்தான் வேலையில் இருந்து விலகலாம் என்று நிபந்தனை போட மாட்டேன்" என்றார்.

சிவஞானம் மகிழ்ந்தார்.

— பா. பிரதாபன்



ஆதித்தா! உன் கதையெல்லாம் எனக்குத் தெரியும். மந்திரவாதி நீல கேசியின் அக்கிரமங்களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். அதற்கு உன் வாளும் வலிமையும் மட்டும் போதாது. நீலவேணி என்னும் பறக்கும் குதிரை யை அடக்கி அடிமைப்படுத்தினால் தான உன் எண் ணம் ஈடேறும்.
முனிவரின் யோசனைப்படி, நிர்மலா - பத்மினி இருவரையும் அவர் பொறுப்பில் விட்டு, ஆதித்தனும் காளியும் நீலவேணியைத் தேடிக் கிளம்புகிறார்கள்.
மரகதச் சிலை – 5
கதை : வாண்டுமாமா
சித்திரம் : ரமணி
காடு, மலை, வனம், வனாந் திரங்களை எல்லாம் கடந்து வந்துவிட்டோம். முனிவர் குறிப்பிட்ட ஜ்வ லிக்கும் தாமிர மலையைக் காணவில் லையே. ஒருவேளை வழிதவறி விட்டோமோ?
வழிதவறவில்லை. அதோ அவர் கூறிய பளபளக்கும் கண்ணாடி ஆறு தெரிகிறது பார்.... வா, போகலாம்...
காளி, இந்தக் கண்ணாடி ஆறு நம்மைக் காலனுக்கு விருந்தாக் கிவிடும் போலிருக்கிறதே. பதித்த கால்களை எடுக்க முடியவில்லையே!
மனத்தைத் தளரவிடாதே ஆதித்தா. இது ஆறல்ல. பளபளக்கும் பயங்கரச் சதுப்புநிலம். இப்போது நாம் புதை குழியில் சிக்கிக் கொண்டிருக்கிறோம்.
ஐயோ, காளி! வரவர என் உடல் சக தியினுள் அமிழ்ந்து கொண்டிருக் கிறதே?



சதுப்புநிலப் புதைகுழியில் சிக்கித் தவித்த காளிக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றுகிறது. நிற்பதினால் உடலின் கனமெல்லாம் ஒரே இடத்தில் அழுந்துகிறது. ஆகவே கனம் பரவலாகப் படியக் குப்புறப் படுத்து நீந்தினால்? முயற்சி பயனளித்தது.
அப்பாடா! ஆற்றைக் கடந்து விட்டோம்.
பிறகு இருவரும் தாமிர மலைச் சாலை அடைகின்றனர்.
ஆதித்தா, அதோ பார்த்தாயா? குதிரைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி முன்னால் போகிறதே வெண்மை நிறப் புரவி - அதுதான் நீலவேணி....


காளி! குதிரை என்றால் இதுவல்லவா குதிரை! பாலின் நிறம் - மின்னலின் வேகம் - உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உடலமைப்பு.... ஆஹா!
மலையுச்சியிலே அது நிற்கும் கம்பீரத்தைப் பார்த்தாயா? அதை அடக்கி நாம் வசப் படுத்திவிட்டோமானால்....
நீர் அருந்தப் போகிறது. அதைப் பிடிக்க இதுவே சரியான தருணம். ஆதித்தா உன் வலிமையைக் காட்ட வேண்டிய வேளை வந்துவிட்டது....
அடேயப்பா! என்னமாய்த் திமிறுகிறது! என்ன பலம்! என் உடலின்தசை நார்களெல்லாம் தெறித்துவிடும் போலிருக்கிறதே, இதன் இழுப்பு!
பிடியைத் தளரவிடாதே. தப்பினால் பிறகு அதை நம்மால் பிடிக்கவே முடியாது... ம்... இழு... ம்!
இன்னொரு கயிற்றினால் நானும் அதைக் கட்டிவிட்டேன். கயிறுகளை அது அறுத்துக் கொண்டு தப்புமுன் ஆதித்தா! நீ அதன்மீது ஏறிக் கொள்.


காளியின் யோசனைப்படி ஆதித்தன் குதிரை மீது தாவியேறுகிறான்.
கீழே தள்ளிவிட்டதே! நல்லவேளை, அதை மரத்தோடு பிணைத்துவிட்டாய்... சபாஷ்!
காளி! நீலவேணியைப் பிணைத்திருக்கும் இரு கயிறுகளையும் துண்டித்துவிடு... ம்... சீக்கிரம்...!
பிறந்தது முதல் மனிதனின் ஸ்பரிசமே படாத அற்புதக் குதிரை நீலவேணி, தன் முதுகில் ஒருவன் ஏறி அமர்ந்ததும் வெறிகொண்டு ஆகாயத்தில் பறக்க ஆரம்பிக்கிறது....
வான முகடு முட்டப் பறந்து, மேலும்கீழுமாகப் பாய்ந்து தன் மீதுள்ள மனிதனைக் கீழே தள்ள முயன்று, முடியாமல் களைத்தது நீலவேணி. ஆதித்தனுக்கு மூச்சு முட்டினாலும்கூட, அதன் பிடரிமயிரைப் பற்றியுள்ள தன் பிடியை விடவில்லை.
பறந்து பறந்து களைத்துச் சோர்ந்து போன போது, ஆதித்தன் அதை அன்போடு தடவிக் கொடுத்தான். அவன் அன்புக்கு அடிமையாகிப் பணிந்தது அந்த அதிசயக் குதிரை. அவனை நினைத்த இடத்துக்குத் தூக்கிக் கொண்டு பறக்கவும் சித்தமாக இருந்தது.


முனிவரின் ஆசிரமத்தை அடைகிறார்கள்....
உங்கள் அருளும் ஆசியும் நீலவேணியை வசமாக்க உதவின. அதே போல நீலகேசியை வெற்றிகொள்ளவும் உங்கள் அருள் வேண்டும்.
ஆதித்தா! உன் பக்கம் தர்மம் இருக்கிறது. வெற்றி உனக்கே. போய்வா...
விந்தைக் குதிரை விண்ணிலே மின்னலெனப் பாய்ந்து பறந்தது நீலகேசியைத் தேடி....
பறக்கும் குதிரை மீதேறி வருகிறீர்களா? வாருங்கள்.... வாருங்கள்!...ஹ....ஹா!


பறக்கும் குதிரை நீலவேணி ஆதித்தன் முதலானோரை, மந்திர வாதி நீலகேசியின் கோட்டைமுன் கொண்டுபோய் இறக்குகிறது. மற்றவர்களை அங்கேயே இருக்கச் செய்து, தான் மட்டும் கோட்டை மீது பறந்து சென்று நிலைமையை அறிந்து வரத் தீர்மானிக்கிறான் ஆதித்தன்.
நீங்கள் மட்டும் தனியாகப் போக வேண்டாம். நானும் உங்களுடன் வருகிறேன். நீலகேசி மாயக்காரன். மறைந்திருந்து தாக்குவான்.
ஆதித்தன் நிர்மலாவின் வேண்டுகோளை ஏற்கவில்லை.
என் அன்புக்குரிய மிருகமே! இத்தனை நாள் நான் உன்னைப் பேணி வளர்த்ததற்குப் பலன் தரும் வேளை வந்துவிட்டது. கோட்டைக்கு வெளியே உன்னைக் காண ஒருவன் காத்திருக்கிறான், போ!


என்ன கோரமான உருவம். நீலகேசியின் விநோத சிருஷ்டி போலும்...
ஆதித்தனை நோக்கிச் சீறுகிறது யாளிமுகச் சிங்கம்.
விஷம் கலந்த அதன் மூச்சுக் காற்றின் வேகம் தாங்காத ஆதித்தன் மூர்ச்சையாகிக் குதிரை மீதிருந்து தலைகுப்புற விழுகிறான்.
அழாதே நிர்மலா! ஆதித்தனின் உயிருக்கு ஓர் அபாயமும் இல்லை. காயங்களை ஆற்றும் பச்சிலைகளைக் கொண்டு வருகிறேன் தைரியமாக இரு.
குள்ளன் காளி சிகிச்சை அளிக்கிறான்.
உன் நன்றியை நல்லபடியாகக் காட்டிவிட்டாய். சபாஷ்!



கவலைப்படாதீர்கள். இம்முறை அந்த மிருகத்தைக் கொல்லாமல் திரும்பமாட்டேன். முனிவரின் அருள் கிடைக்கும்.
அக்கொடிய யாளிமுகச் சிங்கம் விடும் விஷக் காற்று ஜ்வாலையாக வீசி, பல காத தூரத்துக்கு யாரையுமே அண்டவிடாமல் செய்கிறதே, போதாக் குறைக்கு வாலிலே உள்ள பாம்பு வேறு. நான் இப்படி உட்கார்ந்திருக்கக் கூடாது...
என்னாலான உதவி எதையாவது செய்தே ஆகவேண்டும்.
நெருப்புக் காற்றை உமிழும் மிருகத்தின் பாம்பு வாலைத் துண்டிக்க முயன்ற குள்ளனை, அந்தப் பாம்பு சுற்றி வளைத்துக் கொள்கிறது.



ஐயோ, இது கக்கும் விஷ ஜ்வாலையைத் தாங்க முடியவில்லையே...
காளியின் ஓலம் கேட்ட பத்மினி, தன் வில்லை வளைத்துப் பாம்பின் தலைக்குக் குறி பார்த்து அம்பை விடுகிறாள்.
ஆனால் அதற்குள் பாம்பு, தன் விஷப் பற் களைக் குள்ளனின் உடலில் பதித்துவிடுகிறது.
ஐயோ, காளி! உனக்கு இந்தக் கதி ஏற்பட வேண்டுமா?
யாருடைய கண்ணீராலும் கதறலாலும் காளியின் உயிரைக் காப்பாற்ற முடிய வில்லை.
காளியின் பிரிவு, ஆதித்தனிடம் ஆக்ரோஷத்தை உண்டாக்க, ஆவேசமுடன் போரிட்டு மிருகத் தின் உடலில் ஈட் டியைப் பதிக் கிறான்.


அந்த விந்தை மிருகம்
இறந்த அதே நேரத்தில்,
நீலகேசியும் குரல்வளையைப்
பிடித்துக் கொண்டு மூச்சுத்
திணறி கீழே விழுந்து
இறக்கிறான்...
நீலகேசியின் உயிர்நிலை அந்த மிருகத்தின்
உடலில் இருந்ததால், அது இறக்கவே
அவனும் இறக்கிறான். இதை அறியாத
ஆதித்தன்
நீலகேசி தப்பிவிடுமுன் அவனைக்
கொன்றாக வேண்டும்.
என்ன விந்தை இது! இக்கொடியவன்
என் வாளுக்கு வேலை கொடுக்காமல்
தற்கொலை புரிந்து கொண்டு
விட்டானே!


அதோ பாருங்கள் - அந்தச் சிலைகளை! என் பெற்றோரும் தமையனுமே அச்சிலைகள்....
முனிவர் சொல்லியபடி நீலகேசியின் ரத்தத்தைச் சிலைகளின் மீது தெளிக்கிறான்...
என்ன விந்தை! சிலைகளாக இருந்தவர்கள் மனிதர்களாகவிட்டார்களே!
அப்பா! மறுபடி உங்களை உயிரோடு பார்க்கிறேனே!
நிர்மலாவின் தமையனைக் கண்டு பத்மினி நாணித் தலைகுனிகிறாள்...
பத்மினியின் நிலை கண்ட நிர்மலா, தன் தோழியைக் கேள்விகளால் துளைக்க, பத்மினி தன் கனவில் கண்ட மாவீரன் அவளது சகோதரன் ஆனந்தனே என்கிறாள்...


கனவில் தோன்றி உன் அன்பைப் பெற்ற இந்த மாவீரனை - என் அண்ணாவை - உன் கணவ னாக்கி வைக்கிறேன். கொண்டா உன் கரத்தை!
நிர்மலா நீ தப்பிவிடவா பார்க்கிறாய்? எங்களுக்கு வாழ்வளித்த ஆதித்தனை உன் கணவனாக்கி வைக்கிறேன்...
இந்த மகிழ்ச்சி நிறைந்த நிலை ஏற்பட, நம்மைப் பல அபாயங்களி லிருந்து காப்பாற் றிய காளி இப் போது நம்மிடையே இல்லையே...
காளி, நீ ஒரு தியாகி...
விமரிசையாக நடக்கப் போகும் எங்கள் திருமணத் துக்கு நீங்கள் எல்லாரும் வரவேண்டும்... வணக்கம்... வருகிறேன். பிறகு சந்திப்போம்.
(முற்றும்)

திருட்டுத் தீபாவளி!



வண்ணப்படம் : ஸ்ரீஹரி




திருநாளாம், திருநாளாம்,
தீபாவளித் திருநாளாம்;
வருஷத்துக் கொரு நாளாம்
வருகின்ற திருநாளாம்!

வண்ண வண்ண ஆடைகளாம்,
வகை வகையாய் உணவுகளாம்,
எண்ண எண்ண இனிக்கின்ற
இன்ப மான கனவுகளாம்!

சின்னச் சின்ன கைகளிலே
சிரிக்கிறது மத்தாப்பு;
மின்னி மின்னிப் போகிறது
மின்னல் போல ராக்கெட்டு!

இருட்டில் வந்த தீபாவளி
இதற்குள்ளேயா போனது?
திருட்டுப் போன தீபாவளி
தினம் தினம்தான் வாராதோ?

- ஆர். பி. சாரதி



GOKULAM

The monthly magazine for children

96 pages for just Rs. 5! Gokulam, Ekkaduthangal, Madras - 97.





காந்திக்கு ஒரு காட்சியகம்

அநீதிக் கொடுமைகளைக் கண்டு கொதித்து, மக்களைத் தாமாகவே தியாகம் புரியத் தயார் பண்ணி, அறப்போர் முறையில் சுதந்திரப் போரை நடத்தி, இலட்சக் கணக்கான மக்களைத் தாமாகவே சிறைபுக வைத்து உலகை வியக்க வைத்த தேச பிதா மகாத்மா காந்தியடிகளின் 125 ஆவது பிறந்த நாள் விழா, உலக நாடுகள் பலவற்றாலும் இவ்வாண்டு கொண்டாடப்பட உள்ளது. "அரைத் துண்டு சன்யாசி", 'கத்தி ஏந்தத் துணிவில்லாத கோழை' என்று காந்தியை ஒரு காலத்தில் இகழ்ந்தவர்கள் கூட, "உலகில் அமைதியை நிலைக்க வைக்க வன்முறை ஒரு போதும் பயன்படாது. மகாத்மா வலியுறுத்திய உண்மை, மனித நேயம், சகோதரத்துவம், இறையுணர்வு ஆகியவையே உலகில் அமைதியை இன்றும் என்றென்றும் நிலைக்க வைக்கும் மகத்தான சக்திகள்" என்று புகழ்ந்து கூறுகிறார்கள். தமிழ் நாட்டில் மதுரையில் அமைந்துள்ள "காந்தி அருங்காட்சியகம்", உலகப் புகழ் பெற்றது. ஸ்ரீவித்யா, ஐஸ்வர்யா, லட்சுமி, அருண், கிருஷ்ணா ஆகிய ஐந்து சிறுவர் சிறுமியர், கோகுலம் வாசகர்களை இந்தப் புகழ் பெற்ற அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். போவோம் வாருங்கள்.

"இந்த மியூசியத்திற்குப் போய் எல்லாவற்றையும் காண நீதான் எங்களுக்கு

வழிகாட்டப் போகிறாய் ஐஸ்வர்யா."

"வித்யா சொல்றது சரிதான் ஐஸ். ஏன்னா நீதான் இங்கே அடிக்கடி வந்திருப்பதாகக் கூறியிருக்கிறாயே?"

"இப்பக்கூட இங்கே போகலாம்னு கூட்டிக்கிட்டு வந்திருப்பதும் நீதானே?"

"சரியாச் சொன்னே



லட்சுமி. இந்த மியூசியத்தைப் பற்றி அதிகம் அறிந்தவள் ஐஸ்தான். அவதானே அடிக்கடி வந்திருக்கா?"

"ஏன்? அருண் கூட இங்கே வந்திருக்கறதா சொன்னானே?"

"ஐய.... நான் வந்தது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு. எனக்கு அப்பெல்லாம் காந்தியைப் பத்தி ஏதும் தெரியாது. எதுக்காக வெளியூர்க்காரங்களெல்லாம் இதைப் பார்க்க வராங்கன்னு அதிசயமா இருக்கும். அதனால இந்த மியூசியத்தைப் பற்றி எனக்கு உருப்படியா ஒன்னுமே தெரியாது."

"சரி, நானே சொல்றேன். இது எனக்குப் பெருமையே. காந்தி மகானைப் பற்றி ஒரு முறை என்ன, நூறுமுறை வேண்டுமானாலும் கூட நான் சொல்லத் தயார். பேசிக் கொண்டே நடக்கலாம்."

"இன்னும் ரொம்ப தூரம் நடக்கணுமா ஐஸ்?"

"இல்லே இல்லே. இதோ வந்துட்டோம். அங்கே உயர்ந்த பசுமையான மரங்களுக்கு இடையே கம்பீரமாகத் தலை தூக்கி நிற்குதே, அந்தக் கட்டடம்தான் காந்தி மியூசியம்."

"என்னவோ ராஜா ராணியோட அரண்மனை மாதிரி இத்தனை கொள்ளை அழகா இருக்கே!"

"நீ கேட்டது சரிதான் கிருஷ்ணா. உண்மையில் இது ஒரு புகழ் பெற்ற ராணியின் மாளிகைதான்!"

"அப்படியா?"

"ஆமாம். மதுரையை ஆண்ட நாயக்க பரம்பரை மன்னர்களைப் பற்றிப் படித்திருப்பியே? நாயக்க அரசியாரான, ராணி மங்கம்மாளின் மாளிகையேதான் இது! இதை 1670 ஆம் ஆண்டு கட்டினார்கள். ஆங்கில ஆட்சியில் மதுரை மாவட்ட ஆட்சியரின் அலுவலகம் இங்கேதான் இயங்கியது. அதனால் இன்னமும் கூட, மதுரையில் இருக்கும் வயது முதிர்ந்தவர்கள் இதை, "கலெக்டர் பங்களா" என்றே குறிப்பிடுவார்கள்."

"சரி ஐஸ். இந்த அழகான மங்கம்மாள் மாளிகையில், காந்தி மியூசியம் எப்படி வந்தது?"

• மகாத்மாவின் காலணிகள்

• சுதந்தரப் போராட்ட விளக்கம்







• அஸ்திக்கு அஞ்சலி

"நம்ம நாடு சுதந்திரம் பெற்று, மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்டதும், அவருக்கு ஐந்து இடங்களில் நினைவாலயம் அமைக்க இந்திய அரசு முடிவு செய்தது. தமிழ்நாட்டில் இந்த மதுரை தேர்வு செய்யப்பட்டது."

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன்!"



• தக்ளி நூற்றல்

"மகாத்மா, இந்த மதுரைக்கு நான்கு முறை வந்திருக்கிறார். கடைசி இரண்டுமுறை வருகை மிக முக்கியம் வாய்ந்தவை. அரைமுழத் துண்டு கூட இல்லாது என் நாட்டின் கோடிக்கணக்கான ஏழை மக்கள் அவதிப்படுகையில், எனக்கு மட்டும் பத்து முழ வேட்டி எதற்கு? என்று காந்தி மகான் இடுப்பில் முழத்துண்டு கட்ட ஆரம்பித்த புனிதமான இடம் இந்த மதுரைதான். மீனாட்சியம்மன் ஆலயத்தைத் தீண்டாதவர்களுக்காக காந்திமகான் திறந்து வைத்ததும் இந்த மதுரையில்தான். அதனால் மதுரைக்கும் மகாத்மாவுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்தது. இதனால்தான் அருங்காட்சியத்தை மதுரையில் அமைக்க நமது தலைவர்கள் முடிவு செய்தார்கள்."



"அமைதியும், அழகும் கொஞ்சும் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தவர்களை எத்தனை பாராட்டினாலும் தகும்."

"ஆமாம் ஆமாம். எத்தனை விசாலமான இடத்தில் இது அமைந்திருக்கிறது!"

"சும்மா தானா? இது அமைந்திருக்கும் இடத்தின் பரப்பு சுமார் 13 ஏக்கர் நிலமாகும். ராணி மங்கம்மாவின் மாளிகையையே அப்படியே செப்பனிட்டு அழகு கொஞ்ச வைத்திருக்காங்களே!"

"இதை அமைத்து எத்தனை ஆண்டுகளாகிறது?"

"இதுக்கு முப்பத்தாறு வயது முடிந்து போச்சு. 1959, ஏப்ரல் 19 ஆம் தேதி நேருஜி தான் இதைத் திறந்து வைத்தார்."

"தரையிலேயே முகத்தைப் பார்க்கலாம் போல இருக்கே! எத்தனை பளபளப்பு!"

"இந்த சிலையைப் பாரேன்! காந்தி மகானே நேரில் வந்து நிற்பது மாதிரி இருக்கே!"

"இந்த முதல் மாடியில்தான் நமது சுதந்திரப் போராட்டத்தின் முக்கியமான காட்சிகளை புகைப்படங்களாக வைத்திருக்காங்க."

"படங்களுக்குக் கீழேயே விளக்கக் குறிப்பும் இருக்கே!



படிச்சுக்கிட்டே போகலாம்."

"என்னவோ நமக்கு சுதந்ரம், ஒரே நாளில் கிடைச்சிட்டது என்ற நினைப்புத் தான் நமக்கு இருக்கும். ஆனா இந்தப் படங்களைப் பார்த்த பிறகுதான், இதற்கு எத்தனை ஆண்டுகாலம் போராடினோம். எத்தனை பேர் தங்கள் வளமான வாழ்க்கையைத் தியாகம் பண்ணினாங்க என்பது எல்லாம் புரியுது. உடம்பு சிலிர்க்குது. எனக்குக் கூட அந்தக் காலத்துல பிறக்காது போனோமேன்னு ஏக்கமா இருக்கு!"

"இதோ இதெல்லாம் மகாத்மாவின் வாழ்க்கை நிகழ்ச்சிப் படங்கள். இரண்டுமே கலந்திருக்கே!"

"அட இதென்னது! மூக்குக் கண்ணாடி, செருப்புகள், பால் குவளை, ஜெபமாலை எல்லாம் இந்தப் போட்டோவில் இருக்கு. கையெழுத்துக் கூட இருக்கே!"

"இதெல்லாம் மகாத்மா பயன்படுத்தியவை. இதுதான் மகாத்மா சுடப்பட்டு இறந்தபோது அவர் அணிந்திருந்த ஆடை. இரத்தகறை கூடத் தெரியுதுபார்!"

"சுதந்திரம் வாங்கித்தந்த தேசத் தந்தையை இப்படி வன்முறைக்குப் பலி கொடுத்து விட்டோமே?"

"இந்த வன்முறை இன்னும் தொடர்ந்து எத்தனை தலைவர்களைப் பலி கொண்டு விட்டது! உங்கள் காலத்திலாவது வன்முறையில் நம்பிக்கை வைக்காத உலகை அமைக்கப்பாடு படுங்கள். என்ன வியப்புடன் பார்க்கிறீர்கள்! நான்தான் திருமலை. இந்த காந்தி மியூசியத்தின் மேனேஜர். உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெரிதும் மகிழ்கிறேன்!"

"வணக்கம் சார்."

"இந்த மியூசியம், காந்தியின் சிந்தனைகளைப் பரப்பிவரும் அமைதி இல்லமாகச் செயல்படுகிறது. காந்திக்குப் பிடித்த இயற்கை வைத்தியம், யோகாசனம் எல்லாம் கற்றுத் தருகிறோம். முக்கிய நாட்களில் சிறப்புக் கூட்டம், தியானம் எல்லாம் உண்டு."

"இதென்ன சார்?"

"இதுதான் தக்ளி. கதர்த்துணி நெய்வதற்குத் தேவையான நூலிழையை இதன் உதவியால் நூற்று எடுப்பார்கள்."

"அப்போ ராட்டை என்பது?"

"ராட்டை கொஞ்சம் வசதியானவர்களிடம்தான் இருந்தது. ஆனால் இந்தத் தக்ளியை தாங்களாகவே செய்து கொண்டு நூற்கலாம். ஒரு காலத்தில் தக்ளி சுழலாத வீடுகளே இந்தியாவில் கிடையாது என்ற நிலை இருந்தது. காந்திமகானின் வேண்டுகோளுக்கு எல்லோரும் பணிந்தார்கள்.

"மகிழ்ச்சி ஐயா. காந்தியைப் பற்றி அறிந்து கொள்ள இந்த மியூசியம் பெரிதும் உதவியாக இருந்தது."

"இனிமே மதுரைன்னா மீனாட்சியம்மன் கோவிலோடு காந்தி மியூசியத்தின் நினைவும் வரும் சார்."

"போவதற்கு முன், அதோ அங்கே காந்திமகானின் புனித அஸ்தி இருக்கிறது. அதையும் பார்த்துவிட்டுச் செல்லுங்கள்!"

"பார்த்து வணங்கி விட்டுச் செல்லுகிறோம் ஐயா!"

கட்டுரை படங்கள்:
விஜயா சீனிவாசன்.


வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில், வெளியிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டிக் கதை - 1

இரும்மா இரு!

கணித ஆசிரியர் வகுப்பில் அப்படிக் கூறியதிலிருந்து வந்தனா கோபமும் ஆத்திரமுமாகப் பொங்கிக் கொண்டிருந்தாள். அதற்குப் பிறகு ஆசிரியர் நடத்திய பாடம் எதுவுமே அவள் மனத்தில் பதியவில்லை. "இரும்மா இரு!" என்று மனத்திற்குள் பொருமிக் கொண்டாள். அப்படி என்னதான் கூறி விட்டார் கணக்கு ஆசிரியர்!

புது அட்மிஷனாக அந்த வகுப்பில் ரேவதி என்ற சிறுமி சேர்ந்திருந்தாள். புது மாணவியான அந்த ரேவதியைத்தான் கணக்கு ஆசிரியர் புகழ்ந்து கூறி விட்டார். ரேவதியின் நோட்டுப் புத்தகத்தை எல்லா மாணவர்களுக்கும் தெரியும்படி எடுத்து தலைக்கு மேல் பிரித்துக் காட்டி, "எல்லோரும் இந்தக் கையெழுத்தைப் பாருங்கள். எப்படி முத்து முத்தாக இருக்கிறது! அடித்தல், திருத்தல் எதுவுமே இல்லாமல் எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறாள்! இதைப் போலவே நம் வகுப்பில் உள்ள எல்லோரும் எழுதப் பழகிக் கொள்ள வேண்டும்" என்று ரேவதியைப் பாராட்டினார்.

கடுகடுப்புக்குப் பெயர் போன கணக்கு ஆசிரியரிடம் எளிதில் கிடைக்கக்கூடிய பாராட்டா அது! வந்தனா பொறாமையால் வெந்து தவித்தாள்.



புது மாணவி ரேவதி மதுரையிலிருந்து அந்தப் பள்ளிக்கு வந்திருந்தாள். வந்த புதிதில் யாரும் அவளைக் கவனிக்கவில்லை. அவளும் தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், சில நாட்களிலேயே எல்லோருடைய கவனத்தையும் மிக எளிதாகக் கவர்ந்து கொண்டு விட்டாள். வகுப்பில் உள்ள சக மாணவ மாணவிகளிடமும் சகஜமாக, அன்பாகப் பழகினாள். படிப்பிலும் முதன்மையாக விளங்கினாள்.

அதனால் வந்தனாவிற்கு ஏன் கோபம் வர வேண்டும்? அதுநாள் வரை அந்த வகுப்பிற்கு அவள்தான் வகுப்புத் தலைவி. படிப்பிலும் முதல் இடம் அவளுடையதுதான். ரேவதியின் வரவால் எங்கே தன்னுடைய முதல் இடம் ரேவதியிடம் பறிபோய் விடுமோ என்ற பயம் அவளை விழுங்கியது. அதன் காரணமாகவே அவளுக்கு ரேவதியின் மேல் கோபமும், பொறாமையும், வெறுப்பும் ஏற்பட்டது. மற்ற மாணவர்கள் எல்லாம் எங்கே தன்னை மதிக்காமல் போய் விடுவார்களோ, தனது செல்வாக்கு பறிபோய் விடுமோ என்று அவள் பயந்தாள்.

ஏ. வி. வைஷ்ணவி

அவளுடைய பயமும் கலக்கமும் வெளிப்படையாகவே தெரிந்தது. ஆனால் இத்தனைக்கும் காரணமான ரேவதி எதையும் பொருட்படுத்தவே இல்லை. சக மாணவி என்ற முறையில் அன்பாகவும் லீடர் என்ற முறையில் வந்தனாவிற்குக் கட்டுப்பட்டும் பழகி வந்தாள்.

மூன்று மாதங்கள் முடிந்து கால் ஆண்டுத் தேர்வுகள் தொடங்க இருந்தன. எல்லா மாணவர்களும் தேர்வுக்குத் தங்களைத் தயார் செய்து கொண்டிருந்தார்கள். வந்தனா, ரேவதியைக் காட்டிலும் எப்படியும் தான் அதிக மதிப்பெண் பெற்று முதல் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டு விட வேண்டும் என்று குறியாக இருந்தாள். ரேவதி, சக மாணவிகளின் சந்தேகங்களைத் தீர்க்க அளித்த விளக்கமும், ஆசிரியர்களின் வினாக்களுக்கு அளித்த பதில்களும், தன்னால் ரேவதியை விட அதிக மதிப்பெண் வாங்க முடியுமா என்ற சந்தேகத்தை அவளுக்குக் கிளப்பி விட்டிருந்தது. ரேவதியை விட அதிக மதிப்பெண் பெறுவது நியாயமான முறையில் நடக்கக்கூடிய செயல் அல்ல என்ற முடிவுக்கு அவள் வந்தாள்.


ரேவதியைக் கவிழ்க்க சரியான வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் வந்தனா. தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது.



தேர்வுக்கு மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக, "க்ளாஸ் வொர்க் நோட்டுக்களை" எல்லோரிடமும் திருப்பிக் கொடுக்கும்படி வகுப்புத் தலைவி வந்தனாவை ஆசிரியர் பணித்தார். வகுப்பில் எழுதும் நோட்டுப் புத்தகங்களை மாணவர்கள் தினமும் வீட்டிற்குச் சுமந்து செல்ல வைக்காது அவைகளை வகுப்பிலேயே தம் வசத்தில் வைத்துக் கொண்டு விடுவார் ஆசிரியர். தேர்வு சமயத்தில் சில நாட்களுக்கு முன்புதான் மாணவர்களிடம் படிப்பதற்குக் கொடுப்பார். இதுதான் அப் பள்ளியின் வழக்கமாக இருந்து வந்தது.

வந்தனாவிற்குத் திடீரென்று ஒரு கொடுமையான ஆசை தோன்றியது. ரேவதியை மட்டம் தட்டிவிட இதைவிட நல்ல வாய்ப்புக் கிடைக்காது என்று அவள் முடிவு செய்தாள். அந்த வகுப்பில் ரேவதி என்ற பெயரில் இரண்டு மாணவிகள் படித்தனர். புது மாணவி ரேவதியைத் தவிர ஜி. ரேவதி என்றும் ஒரு மாணவி இருந்தாள். அவள் படிப்பில் மக்குதான். கையெழுத்தும் தெளிவாக இல்லாமல் கிறுக்கலாகவும், எழுத்துப் பிழையுடனும் இருக்கும். வந்தனா வேண்டுமென்றே இரண்டு பேருடைய நோட்டுப் புத்தகங்களையும் மாற்றிக் கொடுத்து விட்டாள். கையெழுத்துப் புரியாமல் சரியாகப் படிக்க முடியாமல் தவிக்கும் புது ரேவதியை தன்னால் எளிதாக தோற்கடித்து முதல் இடத்தைப் பிடித்து விட முடியும் என்று கணக்குப் போட்டாள் வந்தனா.

தொடர்ந்து நான்கு நாட்கள் பள்ளி விடுமுறை. அதற்கும் அடுத்த நாளே தேர்வுகள் தொடங்கி இருந்தன. வீட்டிற்குச் செல்லும் அவசரத்தில் நோட்டுகளைச் சரியாகக் கவனிக்காமல் வாங்கிக் கொண்டு மாணவ மாணவியர் அவரவர் வீடு திரும்பினர்.



தேர்வுகள் முடிந்து விடுமுறை தொடங்கி, அதுவும் முடிந்து மாணவர்கள் மறுபடி பள்ளி செல்லத் தொடங்கினார்கள். விடுமுறை முடிந்த முதல் நாள் வந்தனா வெற்றிக் களிப்புடன் தன் விடைத்தாள்களைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டினாள். வகுப்பாசிரியர் மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து அவர்களுடைய மதிப்பெண்களைக் கூறி விடைத்தாள்களை வழங்கிக் கொண்டு வந்தார். புதிதாகச் சேர்ந்திருந்த ரேவதியே, எல்லாப் பாடங்களிலும் முதல் மதிப்பெண்களைப் பெற்றுள்ளாள் என்று அவர் கூறியதும், எல்லோரும் வகுப்பறையே அதிரக் கரம் தட்டி வாழ்த்தும் கூறினார். எப்பொழுதும் மிகவும் பின் தங்கியிருக்கும் ரேவதி இரண்டாம் இடத்திற்கு முன்னேறியிருக்கிறாள் என்றும், எப்பொழுதும் முதல் நிலையிலிருக்கும் வந்தனாவால் மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்திருந்தது என்பதையும் ஆசிரியர் தொடர்ந்து அறிவித்தது எல்லோருக்கும் ஒரே திகைப்பாக இருந்தது.

ஆசிரியர் அறிவித்திருந்த முடிவு, எல்லா மாணவர்களுக்கும் ஆச்சர்யம் கலந்த மகிழ்ச்சியாக இருந்தது. எப்பொழுதும் பின்தங்கி இருக்கும் பழைய மக்கு ரேவதியால் படிப்பில் முன்னேறி இரண்டாம் நிலையை எப்படி எட்ட முடிந்தது? ஆசிரியர் அவளைப் பாராட்டியதும் அவள் எழுந்து நின்று அன்புடன் புது ரேவதியைப் பார்த்து நாடக பாணியில் தலைவணங்கினாள். எல்லோருக்கும் ஒரே குழப்பமாக இருந்தது. அதிகமாகக் குழம்பியிருந்தவள் வந்தனாதான். அவள் போட்ட திட்டம், நோட்டை மாற்றியது எதுவுமே

பயன்தரவில்லையே!

புது ரேவதி எழுந்து நின்றாள்.


"கடைசி பள்ளி நாளன்று என்னுடைய நோட்டும், ஜி. ரேவதியின் நோட்டும் இடம் மாறி விட்டன. ஜி. ரேவதியின் நோட்டுக்களிலிருந்து பிழைகளைப் பார்த்து, நானே திருத்தி, எல்லாவற்றையும் பிழையில்லாமல் தெளிவாக எழுதி முடித்தேன். அவளுடைய நோட்டில் தற்செயலாக அவள் வீட்டு முகவரி இருந்தது. அதைக் கொண்டு அவளைத் தேடிச் சென்று அவளுடைய பிழைகளைச் சுட்டிக்காட்டி எல்லாப் பாடங்களையும் மீண்டும் ஒருமுறை அவளுக்கு விளக்கி விட்டு நோட்டையும் தந்து விட்டு, என்னுடைய நோட்டை வாங்கிக் கொண்டு வந்தேன். முயற்சியும் ஊக்கமும் வழிகாட்டலும் இருந்ததால் ஜி. ரேவதி நான் திருத்தித் தந்த நோட்டுக்களை நன்கு பயன் படுத்திக் கொண்டு வெற்றி பெற்றாள். எல்லாப் பாடங்களையும் மறுபடியும் எழுத நேர்ந்ததில் எனக்கும் நிறையப் பயிற்சி கிடைத்தது. பாடங்களை மிக மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவியது."

வந்தனாவின் முகத்தில் ஏமாற்றம் நிறைந்தது. தானே இந்தக் குழப்பத்திற்குக் காரணம் என்பது அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. அதோடு "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டாள். இனி அவள் குறுக்கு வழியில் யாரையும் கவிழ்க்க முயல மாட்டாள்.



புவனா தேடிய புதையல்

மதிஒளி



3. காரணம் புரிந்தது!

புவனா மயங்கிச் சாய்ந்ததும் அம்மாவும் அப்பாவும் அதிர்ந்து போனார்கள். பதறிக் கொண்டு அப்படியே புவனாவிடம் ஓடி வந்தார்கள்.


விழிகள் மூடி மயக்கத்தில் ஆழ்ந்து விட்ட புவனாவை அம்மா மடியில் சாய்த்துக் கொண்டு கவலையோடு நோக்கினாள். புவனாவின் நெற்றியில் வியர்வை முத்துக்கள் பூத்திருந்தன. அம்மா தன் புடவைத் தலைப்பால் நெற்றியைத் துடைத்து விட்டாள். அப்பா, அவள் சட்டையில் இறுக்கத்தைத் தளர்த்தி விட்டார். மாமா, வீடியோவை நிறுத்தி விட்டு சோபாவுக்கு மேல் இருந்த மின்விசிறியைச் சுற்ற வைத்து விட்டு புவனாவுக்கு அருகே வந்து அமர்ந்து கொண்டார்.

"புவனா! புவனாக் கண்ணு!" என்று அம்மா அவளை அசைத்துப் பார்த்தாள். அப்பாவும் அழைத்துப் பார்த்தார். மாமாவும் கூப்பிட்டார்.

எல்லோரும் ஆவலோடும் பதைபதைப்போடும் பார்த்துக் கொண்டிருக்க புவனா மிகவும் கஷ்டப்பட்டுத் தன் கண்ணிமைகளைத் திறந்தாள். அவர்களைப் பார்த்துப் புன்னகை பூத்தாள்.

"அப்பாடி! என் வயிற்றில் பாலை வார்த்தாயே அம்மா", என்று அம்மா அமைதிப் பெருமூச்சு விட்டாள்.

"என்ன ஆச்சும்மா உனக்கு? ஏன் இப்படி "அம்மா"ன்னு கத்திக்கிட்டே நினை



விழுந்து சாய்ந்தே!"

''உடம்பு ஏதாவது பண்ணித்தா புவன்?"


அப்பாவும் மாமாவும் மாறி மாறிக் கேட்ட கேள்விகளுக்கு புவனாவால் தகுந்த பதிலைக் கூற முடியவில்லை.

''எனக்கு என்ன ஆச்சு என்பது எனக்கே தெரியலே அப்பா. நீங்களெல்லாம் கேள்வி கேட்பதில் இருந்துதான் எனக்கு மயக்கம் ஏற்பட்டது என்பதே எனக்குத் தெரிகிறது'' என்று முத்துப் பல் வரிசை தெரியச் சிரித்தாள் புவனா.

''குழந்தையை சும்மா தொந்தரவு செய்யாதீர்கள்,'' என்று அவர்களைக் கடிந்து கொண்ட அம்மா, ''இப்போ எப்படி இருக்கும்மா?'' என்று பரிவுடன் புவனாவின் கன்னத்தை வருடினாள்.

''எனக்கு இப்போ எதுவுமே இல்லைம்மா. நன்றாகத்தான் இருக்கிறேன், வீணாக நீங்களும் கலவரப்பட்டு மற்றவர்களையும் பீதி கொள்ள வைக்காதீர்கள்'' என்று சிரித்துக் கொண்டே எழுந்தாள் புவனா.

''இருக்கட்டும்மா. உனக்கு உடம்புக்கு எதுவும் இல்லாமலேயே இருக்கட்டும். எங்களுக்கு வேண்டியதும் அதுதானே? ஆனா, அதுக்காக நான் நூல் நிலையத்துக்குப் போறேன், சிநேகிதிகளைப் பார்க்கப் போறேன்னு உடனே கிளம்பிடாதே. இன்னிக்கு முழுக்க கொஞ்சம் நல்லா



ஓய்வு எடுத்துக்கோ. படுக்கையில் படுத்த படியே, புத்தகம் படி. மாமாவோட செஸ்ஸோ, கேரமோ ஆடு. வீட்டை விட்டு மட்டும் வெளியே போகாதே."

"சரிம்மா" என்று சிரித்துக் கொண்டே புவனா மாடிப்படி ஏறினாள். அம்மா கண்களைக் காட்ட, மாமா ரவியும் அவள் பின்னாலேயே படியேறினார்.

மாடிப்படி வரிசையில் பாதியில் நின்ற படி புவனா திரும்பிப் பார்த்துச் சிரித்தாள்.

"மாமா, நீங்க என் பின்னால வருவது எதுக்காகன்னு எனக்கு நல்லா புரியுது. நான் விழுந்துட்டா புடிச்சுக்கத்தானே? எனக்கா நீங்க என்ன நினைக்கறீங்கன்னு புரியாது?" என்று சிரித்தாள்.

இருவரும் சிரித்தபடி மேலே ஏறிப் போனார்கள்.

தலையணையைத் தட்டிப் போட்ட ரவி, "புவன், என்ன பண்ணப் போறே? படிக்கப் போறியா இல்லே கேரமா?" என்று கேட்டார்.

இதற்குள் கையில் ஹார்லிக்ஸுடன் வந்த அம்மா, "இதைக் குடிச்சிட்டு பேசாம ஒரு தூக்கம் போடும்மா. நேற்று ஓரே அலைச்சல் இல்லையா? அதனோட விளைவாகக் கூட இருக்கலாம்," என்றாள்.

புவனா ஹார்லிக்ஸைக் குடித்து விட்டு படுக்கையில் படுத்துக் கொண்டாள் விரைவில் தூங்கியும் போனாள்.

புவனா தூங்கி விட்டது உறுதியாகத் தெரிந்த பிறகு மாமா ரவி கீழே இறங்கி வந்தார்.

அம்மா குடும்ப டாக்டருக்கு போன் பண்ணி, அப்பாவைப் பேசச் சொன்னாள். இருந்தாலும் மூவருமே மாறி மாறி புவனாவுக்கு ஏற்பட்ட திடீர் மயக்கத்தையும், அது தானாகவே குணமாகி அவன் எழுந்து கொண்டதையும் கூறி விளக்கினான்.

“நீங்கள் கூறுவதைப் பார்த்தால் கவலைப்படும்படி எதுவுமே இருக்க வாய்ப்பு இல்லை. ஒருவேளை அலைச்சலால் கூட இப்படி ஆகியிருக்கலாம். எதற்கும் நான் நேரில் வந்து பார்க்கிறேன்'' என்றார் டாக்டர்.

“டாக்டர். நாங்கள் கூறி நீங்கள் வந்ததாக புவனாவுக்குத் தெரிய வேண்டாம்.''

“சரிம்மா. நேற்று விழாவுக்கு என்னால் வர முடியவில்லையே. அதனால் இன்னிக்கு வாழ்த்த வந்ததா சொல்லிக்கிறேன். சரிதானே?'' என்று போனிலேயே சிரித்தார் டாக்டர்.

கூறியபடியே சிறிது நேரத்தில் டாக்டர் வந்து விட்டார். அவர் வந்த போது புவனா தூங்கி எழுந்து மாமா ரவியுடன் செஸ் ஆடிக் கொண்டிருந்தான்.



“நேற்றுக் கிளம்பும் போது அவசர கேஸ் வந்து விட்டதும்மா. அதனால் என்னால் நேற்று வர முடியாமல் போயிட்டது புவனா. அதான் இப்போ வந்திருக்கேன். தாமதமான வாழ்த்துகள். இதோ என் பரிசு'' என்று ஓர் அழகிய கை கடிகாரத்தை அளித்தார் டாக்டர்.

அப்பாவும் அம்மாவும் புவனாவுக்கு மயக்கம் வந்ததை அப்பொழுதுதான் கூறுவது போல் நடித்தனர். “அப்படியா!'' என்று தன் பங்குக்கு வியந்து கொண்டார் டாக்டர். “இப்படி வாம்மா. பார்க்கலாம்'' என்று புவனாவைப் படுக்கச் சொல்லிப் பரிசோதித்தார்.

“ஒன்றுமே இல்லை. புவனா நூறு சதம் சரியாக இருக்கிறான்'' என்று டாக்டர் கூறியதும் எல்லோரும் மகிழ்ந்தனர். காப்பி, டிபன் சாப்பிட்டு விட்டு டாக்டர் கிளம்பியதும், அவரை வழியனுப்ப அப்பாவும் மாமாவும் வந்தனர்.

தன்னுடைய காரில் உட்கார்ந்து கொண்ட டாக்டர், “ஒரு முக்கியமான விஷயம். புவனாவுக்கு எதுவும் இல்லை. இருந்தாலும் அவனுடைய மனநிலை குழம்பியிருக்கு. புத்திசாலியான அவன், அதை மறைத்துக் கொண்டு, வெளியே தெரியாமல் சிரிக்கிறான். ஆனால் என்னிடம் மறைக்க முடியாதே! நானும் கண்டு பிடித்து விட்டதாகக் காட்டிக் கொள்ள வில்லை. நீங்களும் தெரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ள வேண்டாம். அவனுடைய மனக்குழப்பத்திற்கு என்ன காரணம் என்பதை உங்களால் மட்டுமே கண்டுபிடிக்க முடியும்'' என்றார்.

“புரியவில்லையே டாக்டர்!'' என்று கைகளைப் பிசைந்தார் அப்பா.

“என்ன காரணமோ புவனாவின் மனம் குழம்பியிருக்கு. குழப்பத்தின் தாக்கத்தாலேயே அவன் மயக்கம் அடைந்திருக்கிறான். இந்தக் குழப்பம் அதிகரிக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். அதிகரித்தால் மறுபடி மயக்கம் வரலாம். கொஞ்சம் விழிப்புடன் இருந்து அவனைக் கவனித்து வாருங்கள். வழக்கப்படி அவன் பள்ளிக்கூடம் போகட்டும். விளையாடட்டும். சுதந்திரமாக விட்டு விடுங்கள். ஆனால் அடிக்கடி எனக்கு போன் பண்ணுங்கள்'' என்று விடைபெற்றார் டாக்டர்.



அப்பாவும் மாமாவும் டாக்டர் கூறியதை படு இரகசியமாக வைத்துக் கொண்டு புவனாவை அவளுக்குத் தெரியாது கண்காணித்தனர். அடுத்த நாள் காலை புவனா பள்ளிக்குச் சென்று விட்டாள். அப்பா வேலைக்குப் போய் விட்டார். அம்மா, உறவினர் ஒருவரைப் பார்க்கப் போய் விட்டாள்.

மாமா, அந்த வீடியோ கேசட்டை மறுபடி போட்டுப் பார்த்தார். முழுக்க முழுக்க அது ராஜஸ்தான் மன்னர் ஒருவரது புராதன கால அரண்மனைப் பகுதிகள்தான். "இதைப் போய் எதற்கு இப்படி வீடியோ எடுத்திருக்கிறார்கள்" என்று மனத்திற்குள் வியந்தபடி தொடர்ந்து பார்த்தார் மாமா.

கலையழகு கொஞ்சும் அகன்ற தாழ்வாரங்கள், அதைத் தாண்டி பிரும்மாண்டமான கலைக்கூடம், சாய்வு ஊஞ்சல், அதன் கோடியில் கீழே இறங்கிய அழகு மிக்க மாடிப்படிகள்... மாமா பார்த்துக் கொண்டே இருந்த போது பின்னால் இருந்து "அம்மா" என்று முனகல் கேட்டது. மாமா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.


புவனாவேதான்! மயங்கிக் கீழே சாய்ந்து கொண்டிருந்தாள்! எத்தனை நேரமாக அங்கே நின்று கொண்டிருக்கிறாளோ? பள்ளிக்குப் போனவள் எப்படி வந்தாள்?

"புவன்" என்று பாய்ந்து வந்த மாமா, அவளைக் கீழே விழுந்து விடாது தாங்கிக் கொண்டு, சோபாவில் படுக்க வைத்து, மின்விசிறியைச் சுழல விட்டார். வீடியோவை நிறுத்தி விட்டு டாக்டருக்குப் போன் பண்ணினார்.

டாக்டர் வந்து, பரிசோதித்து விட்டு, ஊசியைப் போட்டார். 'மனக்குழப்பம் அதிகரித்ததன் விளைவே இது' என்று கூறிவிட்டு, இதற்குரிய காரணத்தைக் கண்டறியுமாறு கேட்டு விட்டு பயப்படத் தேவையில்லை என்று கூறிச் சென்றார்.

டாக்டர் போனதும், மாமா ரவி தனிமையில் இருந்து யோசித்துப் பார்த்தார்.

"மனக்குழப்பம் அதிகரித்ததன் காரணமாகவே மயக்கம் வருகிறது என்று டாக்டர் கூறுகிறார். அப்படியானால், அந்த வீடியோ கேசட்டின் மாளிகைக் காட்சி



கள், குறிப்பாக அந்த மாடிப்படிக்கட்டு வரும் இடத்தைப் பார்த்ததும்தான் புவனா மயக்கமடைகிறாளோ? முதலில் அதைப் பார்த்ததும், ஏற்கெனவே பார்த்த மாளிகை என்றாள். பிறகு ரவியே அவளைச் சோதித்து, அவள் கூறுவது உண்மையே என்பதைக் கண்டுபிடித்தார். பிறகு அந்த மாடிப்படிக்கட்டு காட்சி வந்ததும் அவள் மயக்கமடைகிறாள். இதிலிருந்து அவள் மனக்குழப்பம் அதிகமாகி, மயக்கமடைய அந்த மாடிப்படிக்கட்டுக் காட்சிதான் காரணமாக இருக்கிறது என்பதை ஊகித்துக் கொண்டார்.

அன்று மாலையே ரவி டாக்டரைத் தேடிக் கொண்டு வந்தார்.

நோயாளிகள் கூட்டம் தணிந்த பிறகு டாக்டர் ரவியை அழைத்தார்.

"டாக்டர்... புவனாவோட மயக்கத்துக்குக் காரணம் என்ன என்பதை நான் ஓரளவுக்கு ஊகித்து விட்டேன். அது சரியா என்பதை நீங்கதான் உறுதிபண்ணணும். அவளுடைய பிறந்த நாளுக்கு அவ அப்பா அவளுக்கு ஒரு பரிசைக் கொடுத்தார். அது ஒரு டி.வி. வீடியோ ஸ்டாண்ட். அதற்குள்ளே [illegible] பழைய ஒரு வீடியோ கேஸட் இருந்தது. அதை புவனா மிகவும் ஆசையாய்ப் போட்டுப் பார்த்தா. அதிலே வர்ற இடம், மாளிகை எல்லாம் தனக்கு முன்னாலேயே பழக்கமானது போலச் சொன்னாள். ஒரு குறிப்பிட்ட இடம் வரும் போதுதான் மயக்கமாகி விழுந்தாள். முதல் முறையா மயக்கமடைந்த போது எனக்கு அது தெரியலே. இரண்டாவது முறை அவள் பள்ளிக்குப் போயிருந்தப்போ நான் மட்டும் தனியா அதை வீடியோல போட்டுப் பார்த்தேன். அப்போ, பள்ளியிலிருந்து சீக்கிரமே வந்திருந்த புவனா, எனக்குத் தெரியாம அந்த வீடியோவை எனக்குப் பின்னால் இருந்து பார்த்துக் கொண்டிருந்திருக்கிறாள். அவள் மயக்கமடைந்த பிறகுதான் நான் கவனித்தேன். அப்போதான் இதை ஊகித்தேன். என்னவோ அந்த கேஸட்டிற்கும் குறிப்பா அந்த மாடிப்படிக்கட்டு காட்சிக்கும் அவளுடைய மயக்கத்துக்கும் ஏதோ தொடர்பு இருக்கும் போலவே தோணுது."

ரவி முடிக்கும் வரை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் தீவிர

மாகச் சிந்தனையில் ஆழ்ந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு, "சரி ரவி... உன்னுடைய இந்த ஊகம் சரின்னே வைச்சுக்கலாம். இது புவனாவின் அம்மா, அப்பாவுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"நான் இதுவரை சொல்லவில்லை டாக்டர். இது வெறும் ஊகம்தானே? நீங்க உறுதிப்படுத்தினால்தானே சொல்லலாம்? சரியாக உறுதிசெய்து கொள்ளாமல் அவங்களை இன்னும் அதிகமாகக் கவலைப்படுத்துவானேன்னுதான் எதுவுமே சொல்லலே..."

"உன் ஊகத்தை அவர்களிடம் சொல்லாத வரை நல்லதுதான். புவனாவோட மனதிலே இந்த கேசட்டும், இதில் வரும் மாளிகையும் ஆழமா ஏதோ ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கு என்பது வரை உறுதியாகிறது. உன்னுடைய இந்த ஊகம் சரியாகத்தான் இருக்கும். இது புவனாவைக் குணப்படுத்த எனக்கு ரொம்ப உதவியா இருக்கும். காரணத்தை சரியாக் கண்டுபிடிச்சாதான் புவனாவுக்கு பர்மனன்டா குணப்படுத்த முடியும்... முதலில் எல்லாவற்றையும் நான் தெரிந்து கொள்ள வேண்டும். அதுக்காக நானும் ஒரு தடவை அந்த வீடியோ கேஸட்டைப் பார்க்கிறேன்... பிறகு புவனாவின் பெற்றோரிடம் அவசியமானால் கூறலாம்" என்றார் டாக்டர்.

"புவனாவுக்கு ஏதும் ஆகி விடாதில்லையா டாக்டர்...?" – மாமா ரவி கவலையோடு கேட்டார்.

"என்ன அசட்டுத்தனமான கேள்வி ரவி! புவனாவுக்கு எதுவும் ஆகாது... சரியான சிகிச்சை செய்து அவளைப் பூரணமாகக் குணப்படுத்தி விடலாம். கவலையை விடு" என்று மாமாவின் முதுகில் தட்டிக் கொடுத்த டாக்டர், "கிளம்பலாமா?" என்றார்.

ரவி தன் மோட்டார் சைக்கிளில் அவரை ஏற்றிக் கொண்டு கிளம்பினார்.

டாக்டரிடம் ரவி பேசிக் கொண்டிருந்த எல்லாவற்றையும், அவர்கள் அறியாதபடி மறைந்திருந்து கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த இருவர் மிகவும் சுறுசுறுப்பானார்கள்.

(தொடரும்)

என்ன பொருள் என்ன தெய்வம்?

போட்டி முடிவு

இந்தப் போட்டியை வைக்கும் போதே, இதற்கு வாசகர்களிடையே மற்ற எல்லாப் போட்டிகளுக்கும் இருப்பது போல் தகுந்த வரவேற்பு இருக்குமா என்ற தயக்கம் இருந்தது. எங்கள் தயக்கத்தைத் தீர்க்கும் அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான வாசகர்கள் இதில் கலந்து கொண்டு அசத்தியிருக்கிறார்கள். ஆனால் பெரிய குறை. ஒருவர் கூட சரியான விடையை எழுதவில்லை! ஒரே ஒரு தவறு செய்தவர்கள்தான் ஏராளம். எனவே, ஒரு தவறு செய்தவர்களில் பரிசுக்கு உரியவர்களைக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தோம்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. ஜி. லட்சுமி குமாரி, விருதுநகர்
2. கே.எஸ். கார்த்திகா, அவநவஞ்சேரி அஞ்சல், கேரளா
3. குமுதா மேகலை, அந்தமான்
4. திபன் துரை, ஏகாங்கணாபுரம் அஞ்சல்
5. மதன் தாமஸ், சென்னை - 16
6. எஸ். பைரவி, முன்னங்குடி அஞ்சல்
7. எஸ். பிரசன்னா, காரைக்கால்
8. ப. மருதமணி, கரிவலம்வந்தநல்லூர்
9. பி. செந்தில், திருத்தணி
10. கே. விக்னேஷ் குமார், தஞ்சை - 4
11. ஆர்.ஜி. சுமித்ரா, கோவை - 44
12. ச.ரா. அருண், தஞ்சை - 1
13. ஜெ. காயத்ரி, மேலூர்
14. பி. மேரியா வசந்தி, கிழக்கு தராவிலை - 629 804

பரிசு பெற்றவர்களுக்கு வாசகர் சார்பில் வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

சரியான விடை :

1. திருமகள் - எருது 2. கண்ணன் - கிண்ணம் 3. முயல் - ஐயப்பன் 4. கிணறு - கணபதி 5. தவளை – சிவன் 6. காகமாலை –ஏசு 7. கிளி - மாரியம்மன் 8. தலை - கலைமகள் 9 கரும்பு - பிரும்மா 10. கஸ்தூரி - புத்தர் 11. பரி (குதிரை) - மேரிமாதா.

கனவு காண்பது நோயா?

● கே.சௌந்தர்ராஜன், கோவிந்தபுத்தூர்.

? என்னுடைய ஆசிரியர் A, AB, B, ஆகிய இரத்தப் பிரிவு உள்ளவர்களுக்கு 'O' வகை இரத்தம் கொடுக்கலாம் என்றும் 'O' வகை இரத்தம் உள்ளவர்களுக்கு A, AB, B, ஆகிய இரத்தப் பிரிவுகளில் ஒன்றைக் கொடுக்க முடியாது என்றும் கூறுகிறார். இது உண்மையா, டாக்டர்? உண்மையென்றால் என்ன காரணம்?

! உன் ஆசிரியர் சொன்னது உண்மைதான், தம்பி! 'O' இரத்தப் பிரிவு உள்ளவர்களுக்கு ஒரு செல்லப் பெயர் உண்டு. 'எல்லோருக்கும் கொடுப்பவர்' (Universal donar) என்பதே அது. A, B, AB ஆகிய மூன்று இரத்தப் பிரிவினருக்கு 'O' இரத்தத்தைச் செலுத்தலாம். ஆனால் 'O' பிரிவு இரத்தம் உள்ளவர்களுக்கு A, B, AB இரத்தத்தில் ஒன்றைச் செலுத்த முடியாது. காரணம், A, B, AB இரத்தத்தில் உள்ள 'ஆன்டிஜென்கள்' 'O' இரத்தப் பிரிவினருக்கு இல்லை. தவறாகச் செலுத்தி விட்டால் இரத்தம் சேராமல் அரிப்பு, மயக்கம் போன்ற எதிர்விளைவுகள் தோன்றும்.

● அ. ஜெயலட்சுமி, ஊட்டி.

? கனவு காண்பது ஒருவித நோய் என்கிறாள் என் தோழி. இது உண்மையா, டாக்டர்?


! இல்லை, சகோதரி! தோழியின் தகவல் தவறு. நாம் கனவு காண்பது இயற்கை. நல்ல ஆழ்ந்த தூக்கத்தின் போது ஏற்படும் நிகழ்வு. நம் அடி மனதில் அடைபட்டிருக்கும் ஆசைகளின் வெளிப்பாடு. வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத நிகழ்ச்சிகள், எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாத விஷயங்கள், மனசுக்குள்ளேயே அடைபட்டிருக்கும் எண்ணங்கள் இவையெல்லாமே நம் தூக்கத்தின் போது கனவுகளாக விரிகின்றன. இது நோயே அல்ல; தோழியிடம் கூறுங்கள்.


● ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் -1.

? டான்சில் என்பது என்ன நோய் டாக்டர்? எதனால் இந்த நோய் ஏற்படுகிறது?

! டான்சில் என்பது நோயல்ல; இது ஒரு நிணநீர்க் கட்டி. (Lymph Gland). தொண்டையில் இருபுறங்களிலும் எல்லோருக்குமே இருப்பதுதான். சிலருக்கு மட்டும் நோய்க் கிருமிகளின் பாதிப்பு காரணமாக இந்த டான்சில்கள் வீங்கிக் கொள்கின்றன. அப்பொழுது காய்ச்சல், தொண்டை வலி போன்ற தொந்தரவுகள் தலைகாட்டுகின்றன. இந்த நிலைமையை 'தொண்டைச் சதை அழற்சி' (Tonsillitis) என்கிறோம். பொதுவாக இது குடிநீர் மற்றும் உணவுகளிலிருந்து தொண்டைக்கு வரும் பாக்டீரியா கிருமி

கனால்தான் ஏற்






படுகின்றது. குறிப்பாகச் சொல்லப் போனால் குளிர்ச்சியான பானங்களையும் குளிர்ச்சியான பண்டங்களையும் (உ-ம்) குச்சி ஐஸ், ரோஸ்மில்க், ஐஸ்கிரீம், குளிர்பானங்கள்) சாப்பிடும் போது குளிர்ச்சி காரணமாகவே அழற்சி ஏற்பட்டு விடும்.

● **எஸ். ரேணுகா, நீடாமங்கலம்.**

? தலைக்கு ஷாம்பூ தேய்த்துக் கொள்ளக் கூடாது என்கிறார்களே, சரிதானா டாக்டர்?

! சரியில்லை, சகோதரி! நயமான, ஒவ்வாமை





ஏற்படுத்தாத ஷாம்பூகளை தலையில் தேய்த்துக் குளிப்பதில் தவறில்லை. வாசனைக்காக அதிக ரசாயனக் கலப்புகள் கலந்துள்ள ஷாம்பூகளைத் தேய்த்தால் முடி உதிரும் அபாயம் உள்ளது. அவ்வளவுதான்.

● **கே. உமா, சென்னை - 23.**

? ஆடு, மாடு போன்ற விலங்குகளின் கண்களை மனிதர்களுக்குப் பொருத்த முடியுமா? அப்படிப் பொருத்தினால் பார்வை தெரியுமா?

! பொருத்த முடியாது! விலங்குகளின் கண்களில் உள்ள 'கார்னியா'வுக்கும், நம் கண்களில் உள்ள 'கார்னி'யாவுக்கும் அமைப்பு வித்தியாசம் உண்டு. 'ஜீன்' (Gene) வேறுபாடு உண்டு.

டாக்டர். கு. கணேசன்

● **என். ராஜலட்சுமி, மேலப்பாதி.**

? எக்ஸ்-ரே எடுக்கும் போது ஏன் பருத்தித் துணியைப் பயன்படுத்த வேண்டும்? நைலக்ஸ் துணியை உடுத்திக் கொண்டால் என்ன பாதிப்பு ஏற்படும்?


! நைலக்ஸ் துணி எக்ஸ்ரே இயந்திரத்திலிருந்து வெளிப்படும் எக்ஸ் கதிர்களை உடம்புக்குள் நுழைய விடாமல் தடுத்துவிடும். இதனால் எக்ஸ்ரே படம் எடுக்க முடியாது. அல்லது தெளிவின்றி இருக்கும். பருத்தித் துணி அப்படியில்லை; எக்ஸ் கதிர்கள் இந்தத் துணியை ஊடுருவி உடம்புக்குள் செல்லும். இதனால் எக்ஸ்ரே படம் தெளிவாகத் தெரியும்.

● **பெரு. ஜெயலட்சுமி ரமேஷ், சர்க்கார்கொல்லப்பட்டி.**

? நாய்க் கடித்தால் அவசியம் 16 ஊசிகளையும் தொப்புளில் போட்டுக் கொள்ள வேண்டுமா, டாக்டர்?

! இப்போது அவசியமில்லை. புஜத்தில் போட்டுக் கொள்ளக்கூடிய வெறிநாய்க்கடி தடுப்பூசிகள் சில புதிதாக வந்துள்ளன. இவற்றில் மொத்தம் ஆறு ஊசிகள் மட்டும் போட்டுக் கொண்டால் போதும். அதையும் தொடர்ச்சியாகப் போட வேண்டியதில்லை. நாய் கடித்த அன்று முதல் ஊசி போட வேண்டும். பிறகு 3-ஆம் நாள், 7-ஆம் நாள், 14 ஆம் நாள், 30 வது நாள், 90 வது நாள். இதே மாதிரியாக ஆறு தடுப்பு ஊசிகளையும் போட்டுக் கொள்ள வேண்டும்.





தீப ஒளி

தீபத்தின் ஒளிமிகும் தீபாவளி
தித்திக்கும் சுவைதரும் தீபாவளி
கோபத்தின் சிதறலாய் வாணவெடி
கூடத்தில் தூள்படும் தீபாவளி!

தீமையைக் கண்டிடில் ராக்கெட்டில்
தீயிட வெடிப்பதைப் போல்வெடிப்பாய்
ஆமையைப் போலநீ வீட்டினுள்ளே
அடங்கி விடாதே தீமைவந்தால்!

பூவாய்ச் சிதறிடும் மத்தாப்பாய்
புன்னகைக்க வேண்டும் எப்போதும்
தீவாய்ப் பட்ட சக்கரம்போல்
தினமும் சுழன்று உழைத்திடுவாய்!


வெடிக்கா திருக்கும் புஸ்வாணம்
வீண்அதை வெடித்ததும் வீண்என்பாய்
துடிப்பாய் எதையும் செய்யாமல்
தூங்கிக் கிடப்பவன் புஸ்வாணம்!

வெடிப்பதில் காசு கரியென்பார்
வேண்டாம் என்பது சரியில்லை
வெடிகளைச் சுடுவதில் மகிழ்ச்சிவரும்
வேதனை தீய்ந்து பொசுங்கிவிடும்!


சாட்டை என்பது ஒளிக்கோடாய்
தானே எரிந்து ஒளியாகும்
சாட்டை மகிழ்ச்சி தருவதைப்போல்
தருவாய் உதவி பிறர்மகிழ.

— செல்லகணபதி





சாமி தின்ற லட்டு!



கணபதியின் முழுப் பெயர் கணபதி ராமன். ஆனால் அவனைச் சாப்பாட்டு ராமன் என்றுதான் அப்பா - அம்மாவும் நண்பர்களும் கேலியாகக் கூப்பிடுவது வழக்கம்.

ஒருநாள் அவன் அம்மா லட்டு செய்யலாமென நினைத்தாள்.

லட்டு தயாரிக்கும் போது அவன் வீட்டில் இருந்தால் இடைஞ்சல் செய்து கொண்டே இருப்பான். லட்டு தயாரானதும் உடனே சாப்பிடத் தர வேண்டுமென்று ரகளை செய்வான்; அழுவான். தடுத்தாலும் தானே இரண்டு - மூன்று லட்டு எடுத்துக் கொண்டு ஓடி விடுவான்.

ஆகவே, அம்மா கணபதியைக் கூப்பிட்டு, "நீ கொஞ்ச நேரம் வெளியில் போய் விளையாடிட்டு வாப்பா. அதுக்குள்ள லட்டு செஞ்சு முடிச்சிடறேன். சாமிக்கு லட்டு வச்சிட்டுக் கொஞ்ச நேரத்துக்கப்புறம் உனக்குத் தரேன்" என்று கூறி அனுப்பி விட்டாள்.

கணபதி கிரிக்கெட் விளையாடப் போனான். பாதி விளையாட்டிலேயே வீட்டிற்குக் கிளம்பி விட்டான்.

வீட்டிற்கு வரும் வழியிலும் கணபதிக்கு லட்டு ஞாபகம்தான் மேலோங்கி இருந்தது. அதன் குளிர்ச்சியான பொன் நிறம், ஆங்காங்கே வைரமணி பதித்தது போல் கல்கண்டுத் துண்டுகள், கண் சிமிட்டும் உலர்ந்த திராட்சை, ஒளிந்து கொள்ளப் பார்க்கும் முந்திரிப் பருப்பு, நெய்யும், பச்சைக் கற்பூரமும் கிராம்பும் போட்டியிட்டுக் கொண்டு எழுப்பும் வாசனை, அல்வாவைப் போல் இருக்காமலும், மைசூர்பாகைப் போல் கடினமாகவும் இல்லாமல், கெட்டியாகவும் அதே சமயம் பற்களுக்கு இதமாகவும் இருக்கும் லட்டுமணிகளின் பக்குவமான அமைப்பு ஆகியவற்றைக் கற்பனை செய்தபடியே கணபதி வீட்டிற்குள் நுழைந்தான்.

சமையலறையில் அம்மாவைக் காணோம். பக்கத்துப் போர்ஷனில் அம்மா பேசிக் கொண்டிருப்பது லேசாகக் கேட்டது. கணபதி பூஜை அறைக்குள் நுழைந்தான். வரிசையாகப் பல தெய்வங்களின் படங்கள். எதிரே ஓர் எவர்சில்வர் டப்பாவில் லட்டுகள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

கணபதியால் இதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. சாமிக்கோ படைத்தாகி விட்டது. அம்மா லட்டுகளை எண்ணிப் பார்த்து அடுக்கியிருக்க மாட்டாள்.

என். ஸ்ரீதரன்



அம்மா பேசி விட்டுத் திரும்பி வரப் பதினைந்து நிமிடங்களாவது ஆகும். ஆகவே கணபதி அவசரம் அவசரமாக இரண்டு லட்டை எடுத்துச் சாப்பிட்டு விட்டான். பிறகு வெளியே வந்து, கூடத்தில் அமர்ந்து, நல்ல பையன் போல் பாடப் புத்தகம் படிக்கத் தொடங்கினான்.

அம்மா திரும்பியதும் கணபதி வந்து விட்டதைக் கவனித்தாள். பூஜை அறைக்குள் சென்று ,விழுந்து வணங்கி விட்டு டப்பாவை வெளியே எடுத்து வந்தாள். வெளிச்சத்தில் பார்த்ததுமே லட்டு குறைந்து விட்டது தெரிந்தது. மகனருகே வந்து, "கணபதி, லட்டு கொஞ்சம் குறையுதே! நீ பார்த்தியா?" என்று கேட்டாள்.

"இல்லியேம்மா. நான் இப்பத்தான் விளையாடிட்டு வந்தேன். வந்ததும் இங்க உக்காந்து பாடம் படிக்க ஆரம்பிச்சிட்டேன்'' என்றான் கணபதி அப்பாவி போல்.

"பூஜை ரூமில் கொண்டு போய் வைக்கச்சே வழிய வழிய லட்டு இருந்திச்சு. இப்ப எப்படிக் குறைஞ்சதுன்னு தெரியலையே?"

''எலி இழுத்துக்கிட்டுப் போயிருக்கும்மா.''

"எலி இழுத்திருந்தா டப்பா கவிழ்ந்து லட்டெல்லாம் சிதறியிருக்குமே? எலியால முழு லட்டை இழுத்திட்டுப் போக முடியாது. ஆங்காங்கே குதறிப் போட்டிருக்கும். அத்தோட, ராத்திரி ஒம்பது மணிக்கு மேலேதானே எலி வர வழக்கம்.''

''அப்படியானா சாமிதாம்மா லட்டு சாப்பிட்டிருப்பார். நீதான் லட்டு செய்யறதில எக்ஸ்பர்ட் ஆச்சே?" என்று கணபதி தலையைத் தாழ்த்திக் கொண்டு கூறினான். அவனுடைய உதட்டில் புன்முறுவல் கீற்று தெரிந்தது. அம்மா அதைக் கவனித்து விட்டாள். அவளுக்கு விஷயம் புரிந்து விட்டது.

"படத்திலேயிருந்து சாமி இறங்கி வந்து சாப்பிடுமா?"

''நாம சாமி முன்னாலே எதைப் படைச்சாலும் அவர் இறங்கி வந்து சாப்பிடுவாருன்னு நீதானே அம்மா அடிக்கடி சொல்லுவே? இத்தனை நாளா மனசால மட்டும் சாப்பிட்டவர் இன்னிக்கு நிஜமாவே ரெண்டு லட்டு எடுத்துச் சாப்பிட்டிருப்பாரு. என்னா, நீ லட்டு செஞ்சா

பிரமாதமா இருக்குமே?''

அம்மா பிடித்துக் கொண்டாள். ''சாமி கரெக்டா ரெண்டு லட்டுதான் சாப்பிட்டிருப்பாருன்னு உனக்கு எப்படித் தெரியும்?''

கணபதி தடுமாறினான். பிறகு சமாளித்துக் கொண்டு, ''அம்மா, நீ எதிலேயும் ஒத்தைப் படையே கூடாதுன்னு சொல்லுவியே? ஊதுபத்தியும் ஒத்தையா வைச்சா திட்டுவியே? அதனால சாமி ஒத்தைப் படையா கூடாதுன்னு ரெண்டு லட்டு எடுத்துச் சாப்பிட்டிருப்பார்னு ஊகமா சொன்னேன்'' என்று சமாதானம் கூறினான்.

அம்மா ஒன்றும் சொல்லாமல் லட்டு டப்பாவுடன் சமையலறைக்குள் போனாள். டப்பாவை அங்கு வலை பீரோவில் வைத்து மூடிவிட்டுத் திரும்பியதும் கணபதி, ''அம்மா, இதென்ன கூத்து! எனக்கு ஒரு லட்டு கூடத் தரலியே? நேரே உள்ளே கொண்டு போய் வச்சிட்டியே! கொண்டா ஒரு லட்டு'' என்று செல்லமாக அதட்டினான்.

அம்மா சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு, ''உனக்கு இல்லாத லட்டா கணபதி. ஆனா ஒரு தப்பு ஏற்பட்டுப் போச்சு. அதனால குழப்பம். உனக்கு எந்த லட்டைக் குடுக்கறதுன்னு தெரியலை'' என்றாள்.

கணபதிக்குப் புரியவில்லை. ''எல்லா லட்டும் ஒரே மாதிரித்தானேம்மா இருக்கும்? நீ எந்த லட்டை வேணுமானாலும் கொண்டு வந்து கொடு. நான் சாப்பிட்டுக் காண்பிக்கிறேன் பார்'' என்று சவால் விட்டான்.

''அதுக்கில்லை கணபதி. சாமியை நினைச்சா பாவமா இருக்கு. அவருக்குத் தலைசுற்றப் போகுது. வாந்தி வரப் போகுது.''

''ஏம்மா, என்ன ஆச்சு?''

''லட்டு பிசைஞ்சு உருட்டச்சே ஒரு லட்டுக்குள்ள ரெண்டு ஈ புகுந்திடுச்சு. அதைத் தூக்கி எறியறதுக்காகத் தனியாப் பிரிச்சு வச்சிருந்தேன். மற்ற லட்டையெல்லாம் டப்பாவில அடுக்கிக் கொண்டிருந்த சமயம் பக்கத்துப் போர்ஷன் மாமிக்குத் தேள் கொட்டிடுச்சு. அவசரமாக் கூப்பிட்டாங்க. அந்தப் பதட்டத்தில நான் மறந்து போய் ஈ புகுந்த லட்டையும் மற்றதோடு கலந்து சாமி முன்னால வச்சிட்டுப்



போயிட்டேன். திரும்பி வந்து பார்த்தா அது எந்த லட்டுன்னு கண்டுபிடிக்க முடியலை. சாமிதான் லட்டு சாப்பிட்டிருப்பாருன்னு நீ சொல்றே. அவர் எந்த லட்டைச் சாப்பிட்டாரோ தெரியலை. ஒரு வேளை தெய்வ சக்தியினால கண்டு பிடிச்சு அவர் நல்ல லட்டைச் சாப்பிட்டிருந்தா மீதி உள்ளதில எந்த லட்டிலோ தான் ஈ இருக்கும். நாளை காலையில ஒவ்வொரு லட்டா உடைச்சுப் பார்த்தப்புறம் உனக்குத் தரேன்."

அம்மா உள்ளே போய் விட்டாள். கணபதி திடுக்கிட்டுப் போனான். அவனால் பதில் கூற முடியவில்லை. சில நிமிடங்கள் கழித்துக் கணபதிக்கு வயிற்றைப் புரட்டுவது போலிருந்தது! உடம்பிற்குள் இரண்டு ஈக்கள் தட்டாமாலை விளையாடுவது போல் சுற்றிச் சுற்றி வருவதாகத் தோன்றியது! உண்மையில் அவன் இரண்டு லட்டுகளை ஒன்றாகவும், அவசர மாகவும் சாப்பிட்டதால்தான் வயிறு கடாமுடா என்று மிரட்டியது. ஆனால் கணபதி, ஈ உள்ள லட்டைச் சாப்பிட்டு விட்டோம் என்று பயந்தான். "அம்மா" என்றழைத்தான் தீனமாக.

அம்மா வெளியே வந்தாள். கணபதியின் முகத்தில் தென்பட்ட கலவரத்தைப் பார்த்து, "என்னடா கண்ணு, என்ன வேணும்? உடனே லட்டு வேணுமா?" என்றாள்.

"லட்டு வேண்டாம்மா. டாக்டரைப் பார்க்கப் போகலாம்னு தோணுது."

"டாக்டரா! உடம்புக்கு என்ன பண்ணுது? உனக்காக ஆசையா லட்டு செஞ்சு வச்சிருக்கிற சமயம் பார்த்து உடம்புக்கு வந்திடுச்சா?"

"அம்மா, என்னை மன்னிச்சிடும்மா, நான்தான் டப்பியில மேலாக இருந்த ரெண்டு லட்டை எடுத்துச் சாப்பிட்டேன். அதில ஒண்ணுலதான் ரெண்டு ஈயும் இருந்திருக்கும். அதனால எனக்கு உடம்புக்கு வரத்தான் போகுது. இப்பவே வாந்தி வரும் போலவும் தோணுது. டாக்டர் கிட்டே போய் மருந்து வாங்கிக்கலாம். வாம்மா."

அம்மா வாய் விட்டுச் சிரித்தபடியே அவனைத் தட்டிக் கொடுத்தாள். "ஒண்ணும் பயமில்லை, கணபதி. நான் சும்மாச் சொன்னேன். ஈ சிக்கியிருந்தா நான் அந்த லட்டை உடனே தூக்கி எறிஞ்சிருக்க மாட்டேனா? உனக்காகத்தானே லட்டு செஞ்சது. அப்படியிருக்கச்சே நீ திருட்டுத்தனமா லட்டை எடுத்துச் சாப்பிடலாமா? அத்தோட, சாமிதான் லட்டு சாப்பிட்டிருப்பாருன்னு கிண்டல் வேற பண்ணினே. இந்த மாதிரி நீ ரெண்டு தப்பு செஞ்சிருக்கே. அதனாலதான் உனக்கு ஒரு பாடம் கற்பிக்கிறதுக்காக நானும் ரெண்டு ஈ லட்டில புகுந்திட்டதாக கதை விட்டேன். நீ சாப்பிட்டது நல்ல லட்டு தான்" என்று சமாதானப்படுத்தினாள்.



"பையன் என்ன பண்றான்?"
"மீன் எண்ணெய்க் கடை வெச்சிருக்கான்!"
- கே. சோமசேகர்

கணபதிக்குத் திடீரென்று வயிறு சரியாகி விட்டது போல் தோன்றியது. அவன் அம்மாவைப் பூஜை அறைக்குள் இழுத்துக் கொண்டு சென்று, கடவுள் படங்களின் முன்னால் கைகூப்பி நின்று பிரார்த்தனை செய்தான்.

"சாமி, என்னை மன்னிச்சிருங்க. இனிமே நானாக எதுவும் எடுத்துச் சாப்பிட மாட்டேன். அம்மாவுக்குத்தான் எனக்கு எது தரணும், எவ்வளவு தரணும், எப்போது தரணும்னு தெரியும். அதனால் இனிமே அம்மா எடுத்துக் கொடுத்தாத் தான் எதுவும் சாப்பிடுவேன்" என்று உருக்கமாகச் சொன்னான்.

அம்மா கணபதியை அணைத்துக் கொண்டாள். "கணபதி, இன்னிக்கு நீ சாப்பிட்ட லட்டு போதும். மீதி லட்டு தீரும் வரைக்கும், நீ சாயந்திரம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் ஒரு நாளைக்கு ஒரு லட்டு வீதம் சாப்பிட எடுத்துத் தரேன். அளவோட சாப்பிட்டா வளமாக வாழலாம்" என்று வாழ்த்தினாள்.

ஜெய்....!

கூத்தபிரான்



அந்தப் புதிய குடியிருப்பில் எத்தனையோ குழந்தைகள் அங்குமிங்குமாக ஓடி விளையாடினார்கள். ஓடும்போது விதவிதமான ஓசை கேட்கும். பலமாகக் கேட்கும். காரணம், எங்கள் வீடு கீழ்த் தளம். வீட்டு ஜன்னல் அருகே ஓடும் போது சற்று பலமாகவே குரல் ஒலி எழுப்புவார்கள். வேண்டுமென்றே... ரயில் வேகமாக ஓடி மறையும். உடனே ஆகாய விமானம் பறக்கும். தொடர்ந்து நாலைந்து மோட்டார் சைக்கிள். இத்தனையும் சின்னஞ்சிறு வாயிலிருந்து வரும் குரல் ஜாலங்கள்! போட்டி போட்டுக் கொண்டு தங்கள் முழுத்திறமையும் காட்டி விட்டு மாயமாய் மறைந்து விடுவார்கள்.

அன்றாடம் மாலையிலும், விடுமுறை நாட்களிலும் நினைத்த நேரங்களிலும் இந்நிகழ்ச்சிகள் கண்டிப்பாக நடக்கும். இந்தச் சிறுவர்களின் மத்தியில் அந்தக் கண்ணாடி சோனிப் பையன் ஒருவன் மட்டும் தனித்து மற்றவர் களுடன் சேர்ந்து விளையாடாமல் நிற்பான். எல்லோரும் விளையாடி முடித்த பிறகு தான் தன் விளையாட்டைத் துவங்குவான். அதுவும் தனியாக.

ஒரு பிளாஸ்டிக் பையில் மெல்லிய சணல் கயிற்றைக் கட்டி அதைப் பிடித்துக் கொண்டு தன் இஷ்டப்படி ஓடுவான். அவன் ஓடும்போது அந்த பையின் உள்ளே காற்று புகுந்து ஒரு பாராசூட் மாதிரி தோற்றத்தைத் தரும். அதைத்தன் முதுகில் கட்டிக் கொண்டு ஓடி வந்து, 'தடால்' என்று தரையில் விழுந்து பையிலிருந்து தீபாவளி சமயம் வாங்கிக் கொடுத்த துப்பாக்கியை வைத்துக் கொண்டு உரத்த குரலில் "பட் பட் பட்" என்று சுடுவது போல் கத்திவிட்டு "எதிரிகள் தொலைந்தார்கள், பாரதமாதாவுக்கு ஜே!" என்று கத்துவான்.

அப்படி ஒருமுறை கத்தின சமயம்தான் நான் ஓடிப் போய் அவனை அழைத்து வந்து, "உன் பெயர் என்ன?'' என்று அன் போடு கேட்டேன்.

"பாரத்."

"பரத்தா?"

'இல்லை பாரத்.'

"பாரத். நல்ல பெயர்" என்றேன். அந்தச் சோனிப் பயல் சிரித்துக் கொண்டே, ''ஜெய்ஹிந்த்'' என்று சொல்லிவிட்டு ஓடி விட்டான்.

அன்று மாலை பாரத் என்ற வித்தியாசமான சிறுவனின் தாத்தாவைச் சந்தித்தேன். பாரத்தைப் பற்றி விசாரித்தேன். அவர் சிரித்துக் கொண்டே, ''அவன் பேரு ஸ்ரீகாந்த். "பாரத்"ன்னு சும்மா விளையாட்டுக்கு சொல்லி இருக்கான்" என்றார்.

"ஏன் அப்படிச் சொன்னான்?" என்று

அவரிடம் கேட்பதை விட பாரத்தையே பார்த்துக் கேட்பது தான் சரி என்று எண்ணினேன்.

அடுத்த நாள் 'பாரத்' என்ற ஸ்ரீகாந்த், கையில் ஒரு ஜெபமாலையுடன் சுற்றிக் கொண்டிருந்தான். திடீர் என்று நிற்பான். கண்களை மூடிக் கொண்டு ஜபமாலையை உருட்டுவான். ஆகாயத்தைப் பார்ப்பான். கன்னத்தில் போட்டுக் கொள்வான். நடப்பான், நிற்பான். ஜபமாலையை உருட்டுவான். இதைக் கவனித்த என்னால் சும்மா இருக்க முடியவில்லை.

"ஆமாம், உன்பேரு ஸ்ரீகாந்த்தானே? 'பாரத்'ன்னு ஏன் பொய் சொன்னே?" - சற்று அதட்டலாகக் கேட்டேன்.

"அப்போ என்பேரு பாரத். இப்போ என் பேரு பாண்டுரங்கன்."

"பாண்டுரங்கனா?"

"ஆமாம். துப்பாக்கியைக் கொண்டு எதிரிகளைத் தாக்கும் போது என்பேரு பாரத். ஜபம் பண்ணும்போது பாண்டுரங்கன்."

"என்னடாயிது!"

'இப்படி எல்லாம் விளையாட்டுக்கு ஏத்தபடி விதம் விதமா பேரு வெச்சுக்கலாம்னு நமக்குத் தோணலையே!' என்று வியந்து கொண்டேன்.

அந்தக் கண்ணாடிச் சோனியை இரண்டு நாட்களாகக் காணவில்லை. அவன் வீட்டுக்கே போய்ப் பார்த்தேன். முகத்திலே பிளாஸ்திரி! கையிலே கட்டு! படுத்துக் கிட்டிருந்தான்.

''காம்பவுண்டுக்குள்ளே தனியா நின்னு, "ஆ, ஊ, இம்'ன்னு கராத்தே சண்டை தனக்குத்தானே போட்டுக்கிட்டு இருந்திருக்கான். சத்தம் கேட்டு தெருவிலே போறபசங்க, காம்பவுண்டு சுவத்து மேலே ஏறி வரிசையா நின்று அவங்களும் கராத்தே ஸ்டைல்லே "ஆ- ஊ- இம்'ன்னு முக்கி மொனகி பரிகாசம் பண்ணினாங்க. இவனுக்கு நிசமாவே கோபம் வந்து, அந்தப் பசங்களை எதுத்துக்கிட்டான். அதான் பிளாஸ்திரி, கட்டு, படுக்கை'' என்றாள் அவன் அம்மா. சிரித்துவிட்டு, "இப்ப உன் பேரு என்னடா?" என்று கேட்டேன்.

"குங்ஃபு சிங்கு" என்றான். அவனுக்கே சிரிப்பு வந்து விட்டது. அவனே மேலும் சொன்னான்.




"ஒரு நாளு நான் கோவில்லே சாமி கும்பிட்டுக்கிட்டு இருந்த போது, என் பேரு என்னன்னு ஒருத்தர் கேட்டாரு. அப்போ சாமி சன்னதிலே கும்பிட்டுக்கிட்டு இருந்தேன். எதிர்லே சிவலிங்கம். உடனே, "என் பேரு சிவலிங்கம்னு" சொல்லிட்டேன். நல்ல பேரு. 'சிவாய நமக'ன்னு' சொல்லிட்டு அவரு போயிட்டாருன்னு சொன்னான்.

"ஏன் அப்படிச் சொன்னே?" என்று நான் கேட்டேன். "அதான் என்னன்னு எனக்கும் தெரியல்லே'' என்றான்.

"சரி! அம்பாள் சன்னிதிலே உன் பேரு என்னன்னு கேட்டிருந்தா அப்போ என்ன சொல்லுவே?" என்று கேட்டேன். "அப்பவும் சாமி

பேரா என்ன தோணுதோ அதைச் சொல்லிடுவேன்'' என்றான். "வேடிக்கையான பயடா!" என்று அவன் தலையைத் தடவிவிட்டு அவனிடம் ''ரெஸ்ட் எடுத்துக்க.. அப்போதான் நிறைய இந்த மாதிரி விளையாடலாம்னு" சொல்லிப் புறப்பட்டேன்.

அடுத்த நாள் என்னைத் தேடிக் கொண்டு அந்தக் கண்ணாடி சோனிப் பையன் ஓடி வந்தான். "அண்ணா, அண்ணா, இந்த டாலரைப் பாருங்கன்னு கழுத்தில் அணிந் திருந்த விவேகான்ந்தர் உருவம் போட்டிருந்த டாலரைக் காட்டினான்.



மறுபடியும் ஓடி வந்து ஒரு கலர்ப் புகைப்படத்தைக் காட்டி, ''இது எப்படி இருக்கு?" என்று கேட்டான்.

"பிரமாதம். யாரு இந்த விவேகானந்தர் வேடத்தில் இருக்கிறது?'' என்று கேட்டேன்.

"நல்லாப் பாருங்க. நான்தான். இது கூடத் தெரியலியா'' என்று புகைப் படத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடி விட்டான்.

அவன் போனதும் அவன் தாத்தாவே பார்க்க வந்தார். வந்தவர் சிரித்தபடி "இந்தப்பய நேத்து கோவில்லே என்ன பண்ணினான் தெரியுங்களா'' என்று தொடங்கினார்.

''இவன் பிறந்தவுடன் ஆசையாக வீட்டில் வைத்த பெயர் ஸ்ரீகாந்த். இவன் தினமும் கோவிலுக்குப் போகும் போது, மறக்காமல்; தவறாமல் கொஞ்சம் அருகம் புல்லை அலம்பியெடுத்துக் கொண்டு பிள்ளையார் சன்னதிக்குப் போவான். அர்ச்சகரிடம் கொடுத்து, "பிள்ளையார் தலையிலே கொஞ்சம், பாதத்திலே கொஞ்சம் சாத்திவிட்டு மீதியைக் கொடுங்கன்னு" கேட்டான். அருகம்புல்லைக் கொடுத்துட்டுப் போ'ன்னு சொன்னார், அர்ச்சகர். "மாட்டேன். நான் சொன்னபடி அருகம் புல்லை வைச்சுக் கொடுங்கன்னு கெஞ்சினான்.

"முடியாதுன்னுதான் சொன்னேனே? போ'' என்று உறுதியாகச் சொல்லி விட்டார் அர்ச்சகர்.

"எப்படியும் அவரை சம்மதிக்க வைக்கிறேன்'' என்று தாத்தாவிடம் சபதம் போட்டான் ஸ்ரீகாந்த்.

அர்ச்சகரையும், பிள்ளையாரையும் ஸ்ரீ காந்த் மாறி மாறிப் பார்த்தான். கற்பூரம் காட்டி, எல்லோருக்கும் விபூதிப் பிரசாதத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கும் போது, "தடால்" என்று அர்ச்சகர் காலில் விழுந்து இறுகப் பிடித்துக் கொண்டான் ஸ்ரீகாந்த். ஐயா! நீங்க எப்படியும் இந்த அருகம்புல்லை விநாயகருக்கு சாத்திவிட்டு, எனக்குக் கொடுங்க. அப்படித் தாரேன்னு சொன்னதான் உங்களை விடுவேன்னு உருக்கமாகச் சொன்னான். இதைத் தாத்தாவும் அர்ச்சகரும் எதிர் பார்க்கவே இல்லை.

"அப்படியே செய்யறேன்'ன்னு அர்ச்சகர், சொன்னது மட்டுமில்லே. பிடியை விட்டு எழுந்தவுடன், வாழ்த்தி நெற்றியில் திருநீரும் இட்டாராம்.

உள்ளேயிருந்து பலகாரம் செய்யும் இனிய மணம் வந்தது. ஒன்று தட்டை இல்லையேல் சீடை. "இப்போ என் பெயர் கிருஷ்ணன்" என்றான் ஸ்ரீகாந்த் சிரித்தபடி.

தாத்தாவும் நானும் அசந்து நின்றோம்.

'விடுமுறையைக் கழித்தேன்' பகுதிக்கு ஏராளமான தம்பி தங்கைகள் எழுதி வருகிறார்கள். நீங்கள் இன்னும் எழுதியனுப்பவில்லை என்றால் உடனே ஒரு 'இன்லேண்ட்' உறையில் எழுதியனுப்புங்கள்.

விடுமுறையைக் கழித்தேன்

மரம் வைத்தோம்!

நான் எட்டாம் வகுப்புத் தேர்வு எழுதியிருந்தேன். எங்கள் பள்ளியில் நிறைய வேப்பங்கன்றுகள் உள்ளன. அவை எல்லாம் வெயிலினால் வாடிக் கிடந்தன.




பக்கத்தில் ஏரி இருந்தது. தினமும் நானும் நண்பர்களும் மாலை வேளையில் ஏரியில் இருந்து நீர்மொண்டு வந்து அக்கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றி வந்தோம். கன்றுகள் பிழைத்துக் கொண்டன. ஆசிரியர்களும், பெற்றோரும் எங்களைப் பாராட்டினார்கள். எங்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

— *த. சரவணன், கீழப்பெரம்பலூர்.*

ஓவியம் கற்றேன்!

எல்லாக் கோடை விடுமுறைக்கும் எதாவது புதிய இடத்திற்குச் செல்வேன். ஆனால், இம்முறை அப்படி எங்கேயும் போக முடியவில்லை. என் அக்காவிற்குத் திருமணம் நடக்க விருந்ததால், அக்காவுடனேயே இருக்க வேண்டும் என்று அப்பா தீர்மானமாகக் கூறிவிட்டார். அதனால் எங்கும் செல்ல முடியவில்லை. திருமண வயதில் உள்ள அக்காவால் என்னுடன் என்ன விளையாட முடியும்? அதனால் என்னுடன் விளையாட யாருமே இல்லையே என்று சோகத்துடன் இருந்தேன். அப்பொழுது என் சித்தியும்,




சித்தி பையன் பிரசன்னாவும் அக்கா கல்யாணத்திற்கு ஒரு மாதம் முன்னதாகவே வந்துவிட்டார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. என் சித்தி பையன் பிரசன்னா அழகாகப் படங்கள் வரைவான். ஓவியத்திற்காக வெள்ளிப் பதக்கம் வாங்கியுள்ளான். அவனுக்கு எதிர் மாறானவன் நான். எனக்கு ஒரு சூரியன் படம் கூட ஒழுங்காகப் போட வராது. அவனிடம், "எனக்கும் படம் வரையக் கத்துக் கொடுக்கிறாயா?" என்று கேட்டேன். அவன் உடனே படம் வரைய ஆரம்பிப்பதில் இருந்து, கடைசி

வரை சொல்லிக் கொடுத்தான். எனக்கு சிக்கிரத்திலேயே கற்றுக் கொடுத்து விட்டான். இப்பொழுது சுமா ராகப் படம் வரையத் தெரியும். ஓவியத் திற்கென்றே தினமும் இரண்டு மணி நேரம் ஒதுக்குகிறேன் என்பதில் மிக்க மகிழ்ச்சி ஏற்படுகிறது.

— பி.ஆர்.பி. தீபா, மன்னார்குடி.

கிரிக்கெட் பயிற்சி!

நான் விடுமுறையை மிகவும் வித்தி யாசமான முறையில் கழித்தேன். எங்கள் மாணவர் சங்கம் சேர்ந்து ஒரு கிரிக் கெட் பயிற்சி அமைப்பை ஆரம்பித் தோம். இதற்கான அறிவிப்பையும் பரவ லாக வெளியிட்டோம். ஏழை எளியவர் வீட்டுக் குழந்தைகளுக்கு கிரிக்கெட் கற் றுக் கொடுத்தோம். மிகவும் ஆர்வ முடன் அவர்கள் கற்றுக் கொண்டார் கள். கிரிக்கெட் மட்டும் அல்லாமல், கால்பந்து, மற்றும் 'கொ-கொ' ஆகிய விளையாட்டுக்களையும் கற்றுக் கொடுத் தோம். நண்பர்களும் பெரியவர்களும்




உற்சாகத்துடன் உதவினர். எங்கள் முயற் சியில் புதிய டெண்டுல்கரும், மெர டோனாவும் உருவாவர்கள் என்ற நம் பிக்கை எங்களுக்கு உள்ளது.

— வை. இரவிசங்கர், சோளிங்கர்.

நாடகம் போட்டோம்!


நானும், நண்பர்களும் வித்தியாச மாய் இந்த விடுமுறையைக் கழிக்க எண்ணினோம். ஒவ்வொருவரும் ஒவ் வொரு ஐடியா கூறினார்கள். நான், "நாடகம் போடலாம்" என்றேன். அதை எல்லோரும் வரவேற்றனர். அதன்படி நாங்களே கதை முடிவு செய்து வசனங் களை எழுதி, ப்ராக்டிஸ் பண்ணினோம். 29-4-95 அன்றும் 23-5-95 அன்றும் இரண்டு நாட்கள் நாடகத்தை நடத்தி



னோம். நண்பன் வீட்டு மாடியில்தான் போட்டோம். நல்ல வரவேற்பு. அந்தப் பகுதியிலே நாடக மேதைகள் என்று மக்கள் பெருமையாகக் குறிப்பிடும் அள வுக்கு நாடகம் நன்கு அமைந்தது. அடுத்த ஆண்டு ஷாமியானா போட்டு, எழுத்தாளர்களை அழைத்து இன்னும் சிறப்பாகச் செய்ய திட்டமிட்டிருக்கி றோம். நாங்கள் ஒன்பதாம் வகுப்பும், ஏழாம் வகுப்பும் படிப்பவர்கள். கதை, கட்டுரை, வசனம், கவிதை எழுதுபவர் கள் எங்கள் குழுவில் இருக்கிறார்கள். எல்லோருடைய திறமையையும் பயன் படுத்திக் கொண்டேன்.

— மணிவண்ணன், சென்னை - 49.





தம்பி

கந்தனின் அழுகுரல் சங்கீதம் அந்தத் தெருவையே குலுக்கியது. அம்மாதான் அடித்துக் கொண்டிருந்தாள்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஓடி வந்து, "எதுக்குங்க இப்படி அடிக்கிறீங்க? அடிக்கிறதுக்கும் அளவு வேணும்ங்க" என்று எரிச்சலோடு சொன்னார்கள்.

"நீங்களே நியாயம் சொல்லுங்க. இவனுக்குக் குடுத்த மாம்பழம் ரெண்டையும் சாப்பிட்டான். இவனோட தம்பிப் பசங்க ரெண்டு பேருக்கும் வச்சிருந்த மாம்பழங்களையும் தெரியாம எடுத்துச் சாப்பிட்டான். என்ன வாங்கிட்டு வந்தாலும் எல்லாத்தையும் தானே தின்று முழுங்கிடறான். தம்பிங்களுக்கும் வைக்கணும்கற நினைப்பே இல்லீங்க. இப் படித் தின்னப்புறம் ஒரேயடியா வாந்தி எடுக்கிறான். இந்த நீசகுணம் உள்ளவனை வச்சிட்டு அடிக்காம என்னங்க செய்யறது?" என்று புலம்பிப் பொரிந்தாள் அம்மா.

"கந்தா, இப்படியெல்லாம் செய்யாதடா. தம்பிப் பசங்களுக்குக் குடுக்க வேண்டாமா? உங்கம்மா எத்தனை கஷ்டப்பட்டு உங்களையெல்லாம் வளக்கிறாங்க? கஷ்டம் தெரிஞ்ச பிள்ளையா, தம்பிங்க இருக்காங்கற நினைப்போட விட்டுக் கொடுக்கிற பிள்ளையா இருப்பா" என்று பக்கத்து வீட்டுக்காரர் புத்திமதி கூறினார்.

கந்தன் எப்பவுமே இப்படித்தான். எல்லாம் தனக்குத்தான் என்ற எண்ணம் அவனுக்கு. கந்தனை மாற்ற அம்மா எடுத்த முயற்சிகள் எதுவும் பயன் தரவில்லை.

சிறிது நேரம் அம்மாவின் அடிதாங்காது அழுத கந்தன், குளத்திற்குக் குளிக்கச் சென்றான். போகும் போது ஒரு கல்யாண சத்திரம். சத்திரத்திற்கு வெளியே இருந்த பெரிய குப்பைத் தொட்டியில் குவிந்து கிடந்தது எச்சிலை. அவைகளில் உள்ள மீந்த எச்சில் சாதத்தைத் தின்பதில் நாய்களுக்குள் கடுமையான போட்டி. இருப்பினும் ஒரே ஒரு பழுப்பு வண்ண நாய்தான் அங்கே "பேட்டை ரௌடி" போல் உருமி உருமி மற்ற நாய்களை விரட்டித் தான் மட்டும் வயிறு முட்டத் தின்று கொண்டிருந்தது. கந்தன் திரும்பி வரும் போது எல்லா நாய்களையும் துரத்தி விட்டுத் தானே அள வுக்கு மீறித் தின்ற நாய் வயிற்று வலியால் புரண்டு புரண்டு கத்திக் கொண்டிருந்தது. இதையும் கந்தன் கவனித்தான்.

கந்தன் வீட்டினுள் நுழைந்தான். "மேலே அவிச்ச நெல்லைக் காயப் போட்டிருக்கேல. சாப்பிட்டதும் காக்கா குருவி வர்றாம பாத்துக்கடா" என்று சொல்லி விட்டுப் போனாள் அம்மா.



கந்தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மேலே வந்தான். "நீ போம்மா. நான் பாத்துக்கிறேன்" என்றான் கந்தன் கனிவாக. நெல்லைக் கிண்டி விட்டு ஓரத்தில் உட்கார்ந்தான்.

ஒரே ஒரு காகம் மட்டும் வந்தது. கந்தன் பார்த்துக் கொண்டே இருந்தான். காகம் வந்தவுடனே நெல்லைக் கொத்தாமல் தன் இனத்தைக் கரைந்து கரைந்து அழைத்தது. திரும்பத் திரும்ப இடைவெளி விட்டுக் கரைந்தது. காகத்தின் கரைந்த ஒலி கேட்டுக் குறைந்



தின்றானா?

தது இருபது காகங்களாவது விரைந்து அங்கே வந்தன. மறைந்து உட்கார்ந்திருந்த கந்தன் இதையெல்லாம் கவனிக்கத் தவறவில்லை. காகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நெல் மணிகளைக் கொத்தித் தின்ன ஆரம்பித்தன. முதலில் நெல் குவியலைக் கண்டு விட்ட தனிக் காகம், தானே அவைகளைத் தின்னாது, மற்றவைகளையும் அழைத்து எல்லாமாகத் தின்றன. அந்தக் காட்சியோடு, தான் தனது தம்பிகளிடம் நடந்து கொள்வதையும் எண்ணிப் பார்த்தான் கந்தன்.

லாலாபுரம் சுந்தரராஜன்

'இப்படி வேடிக்கை பார்க்கிறோமே! இருக்கிற நெல் பூராவையும் காகங்கள் சாப்பிட்டு விடுமே!' அம்மாவிடம் திட்டு வாங்கணுமே என்ற நினைப்பு கந்தனை உடனே செயல்பட வைத்தது. "சோசோ" வென்று காகங்களை ஓட்டினான்.


காகங்கள் போனதும் புறாக்கூட்டம் சிறகடித்து வந்து நெல்மணிகளைக் கொத்த ஆரம்பித்தன. "கூக்கூகூக்கூ"வென்ற ஒலியோடு அவைகளும் ஒற்றுமையாக ஆனந்தத்துடன் நெல்மணிகளைத் தின்றன. சண்டையிடாமல் சேர்ந்துண்ணும் அவைகளின் பரந்த மனதைக் கண்ட போது, கந்தனின் மனம் நெகிழ்ந்தது.

இப்படியே விட்டால் ஒரு நெல் கூட மிஞ்சாது என்ற நினைப்பு வர, கந்தன் இரண்டு கைகளால் ஒலியை எழுப்பிப் புறாக்களை ஓட்டினான்.

அங்குமிங்கும் சிதறிக் கிடந்த நெல்மணிகளை ஒழுங்குபடுத்தினான். பறவைகளான காகங்களுக்கும் புறாக்களுக்கும் உள்ள பகுத்துண்ணும் குணம் கூட மனிதனான எனக்கு இல் லையே என்ற எண்ணம் கந்தனை வெட்க வைத்தது. அம்மாவும் நண்பர்களும் எத்தனை முயன்றும் மாற்ற முடியாத கந்தனை காகங்களும், புறாக்களும் மாற்றி விட்டன.

அம்மா பொரி உருண்டையோடு மேலே ஏறி வந்தாள். அவனிடம் கொடுத்தாள்.

"அம்மா. தம்பிங்க தின்னாங்களா?" என்று கேட்ட கந்தனை அம்மா பெருமகிழ்ச்சியுடன் பார்த்தாள்.



அகந்தை அழிந்தது!

முத்து சிவமும் நல்லசிவமும் நண்பர்கள். முத்துசிவம் புலவரின் ஒரே மகன். அடக்கமானவன், அன்புமிக்கவன், நல்லசிவம் புகழ்மிக்க வைத்தியரின் ஒரே மகன். இவனும் அடக்கமானவன். பண்புநலம் மிக்கவன்.

முத்துசிவம் படிப்பதற்காகவும், பொருள் தேடவும் வெளிநாடுகளுக்குப் போனான். பல ஆண்டுகளைக் கழித்தான். பொன்னும் பொருளும் பெற்று பெருமையுடன் ஊருக்குத் திரும்பி வந்தான். பொன்னும், பொருளும் பெருமையும் முத்துசிவத்தின் நல்ல குணங்களை மாற்றி விட்டிருந்தன. கல்வியிலும், செல்வத்திலும் தனக்கு நிகர் யாருமில்லை என்று அவன் இறுமாப்புடன் இருந்தான்.

நல்லசிவம், தன் தந்தையாரிடமே வைத்தியம் கற்றான். மேலும் மேலும் முயன்று ஆராய்ச்சிகள் பல செய்து பிணிகளுக்குப் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்தான். அரசரே பணியும்படியான அளவுக்கு அவனுடைய வைத்திய அறிவு வளர்ந்திருந்தது. இருந்தும் செருக்கு ஏதும் இல்லாமல், பேராசையும் கொள்ளாமல் நல்லசிவம் மிகவும் எளிமையாக வாழ்ந்து வந்தான். ஏழைகளுக்கு இலவச வைத்தியம் பார்த்தான்.

ஊருக்குத் திரும்பி வந்த முத்துசிவம், தன்னை வந்து காணுமாறு நல்லசிவத்திற்குத் தகவல் அனுப்பினான். நல்லசிவம், தனக்கு நேரம் கிடைக்கும் போது வருவதாக பதில் அனுப்பினான். அவனுடைய உண்மையான நிலையும் அதுதானே? "பெரும் புலவனாகி செல்வந்தனாகி விட்ட என்னை வந்து காண நேரமில்லையா இந்த அற்பனுக்கு?" என்று முத்துசிவம் வெகுண்டான்.

அன்று மாலை, வெளியே சென்று விட்டுத் திரும்பும் போது, "ஐந்து முக நெறிஞ்சி" என்ற சப்பாத்தி முள் முத்துசிவத்தின் காலில் குத்தி ரணவலி வலித்தது. முத்துசிவம் நொண்டியபடி நல்லசிவத்தைத் தேடிக் கொண்டு வந்தான்.

"வா முத்து. என்ன ஆச்சு உனக்கு?" என்று கேட்டான் நல்லசிவம்.

இறுமாப்பின் உச்சத்தில் இருந்த முத்துசிவம், "என்னை ஐந்து தலைநாகம் தீண்டி விட்டது. வலி தாங்க முடியவில்லை. நீதான் சிறந்த வைத்தியனாயிற்றே. மருந்து கொடு" என்றான்.

"உன் கால் வலிக்கு மட்டுமல்ல உன் அகந்தைக்கும் தக்க மருந்தைத் தருகிறேன்" என்று முடிவு செய்து கொண்ட நல்லசிவம், "கால் வலிக்கு பத்து ரதன் மகன் மகனின் நண்பன், நண்பனின் விரோதி, விரோதியின் மனைவி அவளுடைய காலை வாங்கித் தேய்!" என்றான்.


முத்துசிவம் முழித்தான். பெரும்புலவன் என்று அவன் கொண்டிருந்த அகந்தை அழிந்தது. முத்துசிவம், "புரியவில்லையே! விளக்கமாகக் கூறு?" என்றான் பணிவுடன். நல்லசிவம் கூற ஆரம்பித்தான்.


"பத்து ரதன் என்பது, தசரதன் மகன் இராமன். இராமனின் நண்பன் சுக்கிரீவன். சுக்ரீவனின் விரோதி வாலி. வாலியின் மனைவி தாரை. தாரையின் காலை வாங்கித் தேய். அதாவது தரையில் தேய்" என்றான் நல்லசிவம்.


முத்துசிவத்திற்கு சவுக்கால் அடித்தது போல் ஆயிற்று. வெட்கித் தலைகுனிந்தான். அகந்தை கொண்ட முத்துசிவம் அடக்கமான முத்துசிவமானான்!


— மு. ச. சதீஷ்குமார்.


சுய உருவம்!


ஒரு நாள் - பூனை அடுப்பில் இருக்கும் பாலைக் கண்டது.
ஆ... பானை நிறையப் பால்...!
உடனே பானையினுள் தலையை விட்டுக் குடித்தது.
இதைப் பார்த்து விட்ட மூதாட்டி பூனையைக் கம்பால் அடித்தாள்.
திருட்டுப் பூனை.. பாலையா...
அடிபட்ட பூனை கழுத்தில் உடைந்த பானையோடு காட்டினுள் ஓடியது.
இந்தக் காட்டில் உணவுக்கு வழி செய்து கொள்ளணும்!
1


பூனையைக் கண்ட மற்ற விலங்குகள்-
அங்கே பார்...
உஸ்... சத்தம் போடாதே! அவர் கழுத்தை கவனித்தாயா அவர் ஒரு முனிவர், அவரை நன்கு உபசரிக்க வேண்டும்!
இவருக்கு ஏதாவது உணவு கொடுப்போம்!
இதைக் கேட்ட பூனைக்கு ஒரே மகிழ்ச்சி-
நமக்கு நல்ல யோகம் தான்.
உடனே இலை போட்டு சாப்பாடு போட்டனர்.
முனிவரே! தயவுசெய்து இதை ஏற்றுக் கொண்டு எங்களை ஆசிர்-வதியுங்கள்!


நான் எல்லாம் துறந்த முனிவர்! எப்படி இவைகளை ஏற்றுக் கொள்வது?
இல்லை.. இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!
சரி நீங்கள் கட்டாயப் படுத்துவதால் ஏற்றுக் கொள்கிறேன்!
இப்படி பூனைக்கு உபசரிப்பு செய்து வந்தன விலங்குகள்.
நீண்ட நாளா நமக்கு அரசர் இல்லையே!
இதைப் பற்றி முனிவரிடம் கேட்போம்!
நல்ல யோசனை!
இதைக் கேட்ட நரி—
அவசரப் படாதீங்க முதல்ல அவருடைய சுய ரூபத்தைப் பார்ப்போம்.
3


அவர் உண்மையான முனிவரா என்று சோதித்துப் பார்ப்போம்!
மறுநாள் எலியிடம் — நரி -
நீங்கள் அந்த முனிவர் முன் ஓடுங்கள்! நடப்பதைப் பார்...
சரி
மற்ற விலங்குகள் மறைந்து கவனித்தன. சொன்னது போலவே எலிகள் பூனை முன் ஓடின.
என்ன... எலியா...!
உடனே எலிமேல் தாவிப் பிடித்த போது பூனையின் கழுத்தில் இருந்த ஓடு உடைந்து சிதறியது.
இப்போது முனிவரின் வேஷம் கலைந்து விட்டது பார்!
ஆமாம் முனிவரின் சாய உருவம் புரிந்து விட்டது. திருட்டுப் பூனை காட்டை விட்டு விரட்டுவோம்!
தப்பிவந்த பூனை...
"பேராசை பெரு நஷ்டம்" என்பதை உணர்ந்து கொண்டேன்!



இன்றே தீபாவளி!

வாண்டுதாசன்

நாளை தீபாவளி.

பட்டாசுக் கடைகளில் கூட்டம் அலை மோதியது. வீதியெல்லாம் வெடிச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

கடைக்கு முன்னால் அந்தச் சிறுவர் கூட்டம் நெறித்துக் கொண்டிருந்தது. குமார், மகேஷ், தாமோதரன், கணபதி அவர்களுடன் கருப்புசாமி என்ற குறவர் வகுப்புச் சிறுவன்.

"சாமியோவ்! ஆயிரம் ரூபாய்க்குமா பட்டாசு வாங்கப் போறீங்க?" என்று வியப்புடன் கேட்டான் கருப்புசாமி.

"கொஞ்சம் இனிப்பு வாங்கிட்டு மீதிப் பணத்தில் பட்டாசு" என்றான் குமார்.

"காச என்கிட்ட கொடுங்க சாமி. நான் நிறைய வாங்கித்தரேன்'' என்று அவன் கூறியதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"கருப்பு, இது காய்கறிக் கடையில்லே. பட்டாசுக் கடை. விலை எவ்வளவு போட்டிருக்கோ அப்படித் தான் கொடுப்பாங்க" என்றான் கணபதி.

அப்போது பாலாஜி தனது நண்பர்களுடன் இவர்கள் இருக்கும் கடைக்கே வந்தான்.

"கடைக்காரரே! கடைக்கு முன்னாடி எருமை மாடு நிக்குதே! துரத்தாமல் சும்மா இருக்கீங்களே?" என்றான் பாலாஜி.

"பேசும் எருமைமாடுடா இது. அதான் திகைச்சுப் போய் கடைக்காரர் பார்க்கறாரு போலிருக்கு" என்றான் ஒரு நண்பன்.

"இந்த எருமையை மேய்க்க நாலு பசங்கவேற" என்றான் பாலாஜி.

தாமோதரன் கோபத்துடன் அவர்களை நோக்கிப் போக முற்பட குமார் தடுத்தான்.

"குமார், என்னை விடு. கருப்பனை என்ன சொல்றான் கேட்டேல்ல?'' எனச் சீறி னான் தாமோதரன்.

கடைக்காரர் திகைப்போடு பார்த்தார். கடைக்காரர் மட்டுமல்ல அங்கு வந்திருந்த கூட்டமே திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தது. நாகரீக உடையணிந்த சிறுவர்களுக்கு மத்தியில் கோவணம் மட்டுமே கட்டிக் கொண்டு கருப்பாய் ஒருவன் நின்றிருந்தால் யாருக்குத்தான் திகைப்பு ஏற்படாது?

அந்தச் சிறுவர்கள் எல்லோருமே நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அந்த ஊரில் உள்ள அரசு பள்ளியில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறவர்கள். அவர்களுடைய பள்ளி மைதானத்தின் ஓரமாக குறவர்கள் சில மாதங்களாகத் தங்கியுள்ளார்கள். அவர்களைச் சேர்ந்தவன்தான் கருப்புசாமி.

பள்ளிச் சிறுவர்கள் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது குறவர்களின் பிள்ளைகள் தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பார்கள். பந்தை எடுத்துத் தருவார்கள்.

குமார் ஒவ்வொரு தீபாவளியின் போதும் தன் நண்பர்களுடன் சேர்ந்து எல்லோருமாகக் கொஞ்சம் கொஞ்சம் காசு போட்டு பட்டாசுகளை வாங்குவான். பிறகு மைதானத்திற்குச் சென்று சேர்ந்து வெடிப்பார்கள்.

குமார் அடிக்கடி கருப்புசாமியோடு பேசுவான். கருப்புசாமியின் கள்ளமில்லாத பேச்சு எல்லோரையும் கவர்ந்தது. ஒருநாள் குமார் கருப்புசாமியிடம் ''நீங்க தீபாவளியெல்லாம் கொண்டாடுவீங்களா?'' எனக் கேட்டான்.

"சாப்பாட்டுக்கே தவிக்கறோம். தீபாவளியை எங்கே சாமி கொண்டாடறது? மிஞ்சிப் போனா ஒரு பத்து ரூபாய்க்கு பட்டாசு வாங்கிக் கொளுத்துவோம்'' என்றான்.

குமாருக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்த வருடம் இவர்களையும் சேர்த்துக் கொண்டால் என்ன என்று யோசித்தான். அவனது கருத்தை நண்பர்களும் ஏற்றார்கள்.

பாலாஜியும் இவர்கள் வகுப்பில் படிப்பவன்தான். ஆனால் இவர்களுக்கு நேரெதிர். தன்னைப் பெரிய ஆளாக நினைத்துக் கொள்வான். எல்லோரையும் கிண்டலாகப் பேசுவான். கருப்புசாமியையும், அவன் கூட்டத்தையும் எந்நேரமும் கிண்டல் செய்வான். மைதானத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர்களைத் துரத்துவான். கற்களை எடுத்து வீசுவான். ஆனாலும் கருப்புசாமி பதில் தாக்குதல் எதையும் செய்ய மாட்டான். அமைதியாக பாலாஜியின் செயல்களைப் பொறுத்துக் கொள்வான். இப்போதும் வழக்கம் போலவே பாலாஜி கடை வாசலில் கிண்டல் செய்கிறான்.

குமார் கோஷ்டி என்ன பட்டாசுகள் வாங்குகிறதோ அதற்கு இரு மடங்காக பாலாஜி பட்டாசுகளை வாங்கினான். அடிக்கடி நண்பர்களுடன் சேர்ந்து கிண்டல் செய்து, கொண்டிருந்தான்.

குமார் கோஷ்டி கடன் வாங்கிய பட்டாசுடன் புறப்பட்டது.

''குமார் அந்த பாலாஜியை ஒரு அறையாவது அறைந்திருக்கணும். சரியான



திமிர் பிடிச்சவன்" என்றான் தாமோதரன்.

"வேணாம் சாமி. தப்பு செய்யறவங்களை அன்பாலதான் திருத்தணும். நாமும் திருப்பித் தப்பு செய்யலாமா?" என்றான் கருப்புசாமி.

"கருப்பா! படிக்காத உனக்குத் தெரிந்த இந்த சாதாரண விஷயம் கூட படிச்ச அவனுக்குத் தெரியலியே!" என்று வருந்தினான் குமார்.

திடீரென்று பின்னால் ஏதோ சத்தம். எல்லோரும் கத்தினார்கள். ஓடினார்கள்.

குமாரும் நண்பர்களும் திரும்பிப் பார்த்து அதிர்ந்தார்கள். பாலாஜி நடுச் சாலையில் மல்லாந்து கிடந்தான். அவன் மேல் ஒரு கார் மோதி விட்டிருந்தது.

எல்லோரும் பாலாஜியை நோக்கி ஓடினார்கள். காரிலிருந்து இறங்கியவர் "என் மேல் தவறில்லை. இவன் தான் திடீரென சாலையைக் கடக்கப் பார்த்தான். சீக்கிரம் இவனைத் தூக்குங்கள்" என்றார்.

யாருக்கும் எதுவும் ஓடவில்லை. கருப்பு



சாமிதான் பாய்ந்து சென்று பாலாஜியைத் தூக்கிக் கொண்டு காரில் ஏறினான். பாலாஜியின் தலையை மடிமேல் சாய்த்துக் கொண்டான். கார் விரைந்தது.

மருத்துவமனை.

பாலாஜிக்கு நினைவு வந்தது. மெல்ல கண்களைத் திறந்து பார்த்தான். அவன் பெற்றோர்கள் கண்ணீருடன் நின்றிருந்தனர். அருகே குமார் கோஷ்டி. அறை வாசலில் கருப்புசாமி இருந்தான்.

''பாலாஜி கண்ணைத் திறந்துட்டியாப்பா! இப்பத்தான் எங்களுக்கு மூச்சே வந்தது. இந்த பிள்ளைங்க மட்டும் ஓடியாடி உதவி செய்து உன்னை இங்கே உடனே கொண்டு வரவிலைன்னா...'' முடிக்க இயலாது அழுதாள் அம்மா.

''அப்படியெல்லாம் பேசாதீங்கம்மா. நாங்க என்ன பெரிசா செய்துட்டோம்?. மருந்து வாங்கி வரவும், சின்ன சின்ன வேலைகளும்தானே செய்தோம்?'' என்றான் குமார்.

''பாலாஜி, உன்னைச் சுற்றியிருந்த பணக்காரப் பசங்களெல்லாம் உனக்கு அடிபட்டதும் திரும்பி பார்க்காம ஓடிட்டாங்க. உண்மையான நண்பர்கள் உருவத்தினால் இல்லைன்னு புரிஞ்சுக்கோ'' என்றான் தாமோதரன்.

பாலாஜியின் கண்கள் கலங்கின கருப்புசாமியை சைகையால் அழைத்து அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''என்னை மன்னிச்சுடு கருப்பு'' என்றான்.

"என்ன சாமி, இதுக்குபோய் அழுறே? கண்களைத் துடை... நீ நல்லா குணமாகி வந்தப் பின்னால்தான் தீபாவளியே கொண்டாடப்போறோம். சரிதானே சாமிங்களே?'' எனக் கேட்டான் கருப்புசாமி.

"எல்லாம் சரி. நீ இனிமே எங்களை பெயர் சொல்லியே கூப்பிடு. சாமி சாமின்னு பணக்காரங்களைக் கூப்பிடற மாதிரி இருக்கு" என்றான் கணபதி.

''பழக்கமாய்டுத்து சாமி. சரி சாமி இனிமே பெயர் சொல்லியே கூப்பிடறேன் சாமி. சரிதானே சாமி'' எனக் கூற எல்லோரும் கலகலவெனச் சிரித்தார்கள்.

நரகாசூரனைக் கொன்றதால் நாளை தீபாவளி. பாலாஜியின் மனதில் இருந்த தீய அரக்கன் இன்றே இறந்துவிட்டதால் இவர்களுக்கு இன்றே தீபாவளி!

பந்தயம்!

ராமுவும், சோமுவும் நண்பர்கள். எமகாதகர்கள். அவர்களிடையே ஒரு பந்தயம். ராமு கூறினான் "நான் 5 ரூபாயில் ஒரு சிப்பு வாழைப்பழம் வாங்குவேன்."

''அது முடியாது'' என்று சோமு கூறினான். ராமு சோமுவைக் கடைக்கு அழைத்துச் சென்று ஒரே ஓர் தலை வாரும் சிப்பும் ஒரே ஓர் வாழைப்பழமும் வாங்கினான். ''இதோ ஒரு சிப்பு வாழைப்பழம்'' என்றான். அனைவரும் வியந்து சிரித்தோம்.

க. அருட்செல்வி, செஞ்சி.

சட்டைப்பையில்

எங்கள் தோட்டக்கல்வி ஆசிரியர் மிகவும் நகைச்சுவை உணர்ச்சி மிக்கவர். ஒரு நாள் ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைந்து, '' ஒரு தாளை எடுத்துக் கொண்டு, உங்கள் சட்டைப்பையில் இருப்பதை எழுதுங்கள்'' என்றார். எல்லா மாணவர்களும் எழுதிக்காண்பித்தனர். சிவா என்ற மாணவன் எழுதி இருந்ததைக் கண்ட ஆசிரியர் சிரித்துவிட்டு, அதை உரக்கப் படித் துக்காட்டினார். அதைக் கேட்டு எல்லா மாண வர்களும் சிரித்துவிட்டோம். காரணம், அவன் எழுதியிருந்தது "பொத்தல்கள்."

கு. ஆசைத்தம்பி, கும்பகோணம்.

அழுக்காயிடாதா?

நாங்கள் திருச்சிக்கு ஜவுளி எடுப்பதற்காக பேருந்துக்காகக் காத்திருந்தோம். திருத்துரைப்பூண்டி, மன்னார்குடி மற்றும் தஞ்சாவூரைக் கடந்து தான் திருச்சிக்குப் போக வேண்டும். எனவே திருச்சி பஸ்ஸுக்காகக் காத்திருந்தோம். திருச்சிக்கு இடையிலுள்ள திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி, தஞ்சாவூர் ஆகிய ஊர் களுக்கு பஸ் வந்த போது நாங்கள் ஏறவில்லை. திருச்சி பஸ்ஸில் ஏறிவிட்டால் இடையில் இறங்கி இறங்கி ஏறவேண்டிய அவசியம் இருக் காது என்பதற்காக நின்றபோது, தம்பி "பஸ் தான் போகுதே? ஏன் ஏறவில்லை?" என்றான். நான் "துரு பஸ்ஸில் போவோம்" என்றேன்.


அதற்கு அவன் "துரு பஸ்ஸில் போனால் வேட்டியெல்லாம் அழுக்கா போயிடாதா?" என்ற போது எங்களால் சிரிப்பை அடக்க இயலவில்லை.

- வசந்தா காந்த், கருப்பம்புலம்.

எங்கள்

மந்திரிகள்

எங்கள் வகுப்பில் தமிழ் ஆசிரியர் பாடம் நடத்தி கொண்டிருந்தார் அப்



ஊரில் நடந்தது

போது ஓர் விளக்கத்திற்காக "எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்'' என்றார். கருப்பையன் என்ற ஓர் குறும்புக்கார மாணவன் எழுந்து ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்றால், அப்ப மந்திரிங்க யார் சார்?'' என்றான். உடனே வகுப்பறையே சிரிக்கலானது.

ஆ. சுந்தர்ராஜன், கும்பகோணம்.


மெத்தை


எனது தம்பி அறிவொளி முதலாம் வகுப்பில் படிக்கிறான். ஒரு நாள் நானும் தம்பியும் தோட்டத்தில் இருக்கும் போது ஒரு நத்தையைக் கண்டோம். தம்பி அதைப் பார்த்து "அது என்ன அண்ணா?" என்று கேட்டான். நான் "அதன் பெயர் நத்தை'' என்று சொன்னேன், இரண்டு தினங்கள் கழித்து தோட்டத்திலிருந்து தம்பியின் குரல் கேட்டது " மெத்தை வருது! அண்ணா மெத்தை வருது!" என்று கத்தினான். அதைக் கேட்டு, நான் பதறியபடி தோட்டத்திற்கு ஓடிப் பார்த்தேன். அங்கே தம்பி கை காட்டிய இடத்தில் ஒரு நத்தை! தம்பி நத்தையைத் தான் 'மெத்தை' என்று சொல்லி இருக்கிறான். விஷயம் புரிந்து வாய் விட்டுச் சிரித்தேன்.

-கவிதா வீராசுவாமி, முடிகொண்டான்.

சீட்லெஸ்

மூன்றாம் வகுப்புப் படிக்கும் மணிகண்டன் சுட்டியோ சுட்டி! அம்மா அவனுக்காக பிஸ்கெட், பேரீச்சம் பழம் போன்ற சத்து மிக்கவைகளையே வாங்கித் தருவார்கள். ஒரு சமயம் பேரீச்சம் பழத்தின் கொட்டையை எடுக்க முடியாமல் மணிகண்டன் முழித்தான். அதிலிருந்து அம்மா, "சீட்லெஸ் பேரீச்சை'' கொட்டை நீக்கிய பேரீச்சம்பழம் வாங்கித் தர ஆரம்பித்தார்கள். வாரா வாரம் சனிக்கிழமையன்று சந்தை. வழக்கம் போல் சந்தைக்குப் போன அம்மா தின்பண்டங்களோடு பலாச்சுளைகளையும் வாங்கி வந்தார்கள். மணிகண்டன் பலாக் கொட்டையை எடுத்துச் சாப்பிடத் தடுமாறிவிட்டு. ஏம்மா 'சீட்லெஸ் பேரீச்சை' போல 'சீட்லெஸ் பலாப்பழம்





கிடைக்கலியா?'' என்று கேட்க 'குபீர்' சிரிப்புதான்!''

- சச்சிதானந்தம், நாமக்கல்.

பஞ்சர்

எனக்கு மூன்று நண்பர்கள். ஒரு நாள் அவர்கள் மூவரும் பள்ளிக்கு லேட்டாக வந் தார்கள். ஆசிரியர் முதல் நண்பனை "ஏன் லேட்?" என்று கேட்டார். "சைக் கிள் பஞ்சர்" என்று கூறினான் அவன். இரண்டாவது நண்பனை "நீ ஏன் லேட்?" என்று கேட்டார்." சைக்கிள் பஞ்சர் சார்" என்று அவனும் கூறினான். மூன்றாவது நண்பனைப் பார்த்து "நீ ஏன் லேட்?" எனக் கேட்டார். அவனும் "சைக்கிள் பஞ்சர் சார்" என்று கூறினான். ஆசிரியர் திகைத்தார். "என்னடா மூன்று பேருக்கு மாடா ஒரே சமயத்துல சைக்கிள் பஞ்சர்!" என்று வியப்புடன் கேட்டார்.

அந்த மூன்று பேரில் ஒருவன் கூறினான் "சார் நாங்க மூன்றுபேரும் ஒரே சைக்கிள்ள தான் வந்தோம்". அங்கு உள்ள மாணவார்கள் அனைவருக்கும் ஒரே சிரிப்பு.

ஹாஜா நஜ்முதீன், மகிக்கூர், தஞ்சை மாவட்டம்.

மாத்திரை

எங்கள் பள்ளியில் ஆசிரியர் இலக்கண வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து, "மாத்திரை என்றால் என்ன?". என்று கேள்வி கேட்டார். உடனே அவன் "மாத்திரையென்றால் வண்டிச் சக்கரம் போல் ரவுண்டாக இருக்கும். சிலது சிறியதாக இருக்கும்" என்று சொன்னான். ஆசிரியர் உள்பட நாங்களும் சிரித்து மகிழ்ந்தோம்.

ச. அருள்வாசகன், தேத்தாகுடி.

ஓவர்


ஊரிலிருந்து என் மாமா பையன் வந்திருந்தான். அவனுடன் டி.வி.யில் கிரிக்கெட் மேட்ச் பார்த்துக் கொண்டிருந் தோம். அவனுக்கு கிரிக்கெட் பற்றித் தெரியாததால் ஏராளமாகக் கேள்வி கேட்டான். விளக்கினேன். "ஒரு ஓவருக்கு ஆறு பந்துகள்" என்று கூறினேன்.

''ஒரு ஓவருக்கு ஆறு பந்துகன்னு சொன்னியே! ஆனா ஒரே பந்தைத்தானே திருப்பித் திருப்பி வீசிக்கிட்டிருக்காங்க?" என்றான் அவன். அவனுடைய அப்பாவித் தனத்தை எண்ணிச் சிரித்தேன்.

- பா. ஜெயக்குமார், வந்தவாசி.

ஒத்திவைப்பு

எங்கள் வகுப்பில் ஒரு ரூபாய் நாணயம் ஒன்று கிடைத்தது. ஒருவன் அது



தன்னுடையது என்று கேட்டான். இன்னொருவன் தனதுதான் அது என்று கொடுக்கச் சொன்னான். இரு கட்சிகளாக வகுப்பு பிரிந்தது. ஒரே சலசலப்பு. அம்பிகா என்ற சிறுமி எழுந்து "நண்பர்களே இந்த வழக்கை ஆசிரியர் வரும்வரை ஒத்தி வைக்கிறேன்" என்று உரக்கக் கூறியதும் வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது.

வி. ப்ரியதர்ஷினி, சேலம் - 1

படிப்பு

எங்கள் ஊரில் எட்டாம் வகுப்பு வரைதான் உள்ளது. ஒன்பதாம் வகுப்புப் படிக்க வேண்டுமானால் அண்டை ஊரான அனந்தபுரத்திற்கு வந்துதான் படிக்க வேண்டும். நானும் இந்த வருடம் ஒன்பதாம் வகுப்பு தான். ஜூனில் தான் சேர்ந்தேன். சேர்ந்த புதிதில் எல்லா மாணவர்களும் ஒன்றாக இருக்க, புதியவனான நான் மட்டும் தனியாக இருந்தது எனக்கே பிடிக்கவில்லை. எப்படி அவர்களை நண்பர்களாகக்கிக் கொள்வது என்று யோசித்தேன். அந்த வாய்ப்பு தானாகவே எனக்குக் கிட்டியது. எங்கள் வகுப்பாசிரியர் பத்து வினாக்களுக்குரிய பதில்களைப் படித்து வரச் சொன்னார். நான் அவற்றைக் காட்டிலும் அதிகமாகவே படித்து வந்தேன். எதிர்பாராத விதமாக ஆசிரியரும் தான் சொன்னதை விடவும் அதிகக் கேள்விகளைக் கேட்டார். வகுப்பு லீடரே விடைகூறமுடியாது திணறி நிற்க மற்ற மாணவர்களும் விழிக்க நான் ஒருவன் மட்டும் பதில் சொன்னேன். ஆசிரியர் வியந்து போனார். "நீ என்ன ஊர், உன் பேரென்ன?" என்று பரிவுடன் கேட்கத் தொடங்கினார். இப்போது ஆசிரியர் எனக்கு மிகவும் பழக்கமானவராகிவிட்டார். அதன் பிறகு பத்து நிமிட இடவேளையின் போது மற்ற மாணவர்களும் என்னிடம் வந்து தாங்களாகவே பழகினர். இனி ஆசிரியரும் மற்ற மாணவர்களும் எனது நண்பர்கள். இதைச் செய்யக் காரணமாக இருந்த படிப்புக்கு என் நன்றி.

இராம. ஜெயகாந்தன், அனந்தபுரம்.

ஆ(ஹா)ம்லெட்!

நானும் எனது நண்பனும் பேருந்தில் சென்று கொண்டிருந்தோம். நான் ஷேக்ஸ்பியர் எழுதிய 'ஹாம்லெட்' டைப் படித்துக் கொண்டு இருந்தேன். என் நண்பன் பாடப் புத்தகம் தவிர வேறு புத்தகம் எதையும் படிக்கமாட்டான். அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான். என் அருகில் அமர்ந்திருந்த ஒருவர் என் நண்பனிடம் 'ஹா(ஆம்லெட்' யாரால் உருவாக்கப்பட்டது?'' என்று கேட்டார் அதற்கு அவன் வேடிக்கையாக ''எங்கள் ஊர் ஓட்டல்காரரால்' என்றான். உடனே நானும் என் அருகில் இருந்தவர்களும் சிரிப்பைக்கட்டுப்படுத்த முடியாமல் சிரித்துவிட்டோம்.

சித்தம்பூண்டி புதூர்செல்வராசு,சேலம்.

நகைப் பொட்டலம்

அப்பா, அம்மா மற்றும் தங்கை மூவரையும் வழியனுப்பி விட்டு பிரதீப் தாத்தாவுடன் அத்தை வீட்டிலேயே தங்கிக் கொண்டான். ஒரு வாரம் முழுவதும் ஆடிப்பாடி மகிழ்ந்தான். ஒரு வாரத்தை இன்பமாகப் போக்கிய பிறகு தாத்தாவும், பிரதீப்பும் புறப்படத் தயாரானார்கள். பிரதீப்பிற்கு செல்லவே மனமில்லை. மறுநாள் பள்ளிக்கூடம் திறக்கிறார்கள் என்ற காரணத்தினால்தான் வேறு வழியில்லாமல் புறப்படச் சம்மதித்தான். புறப்படும் போது ஊருக்குச் சென்று வெடிக்கலாம் என்று, திருவிழாவில் வெடித்தது போக மீதியிருந்த பட்டாசுகளையும் எடுத்துக் கொண்டான்.

வெயில் அதிகமாக இருந்ததால் மாலை நேரத்தில் மாட்டு வண்டி ஏறிப் புறப்பட்டார்கள். அத்தை இரவுச் சாப்பாட்டுக்காக புளியஞ்சாதம் செய்து கொடுத்துனுப்பினாள்.

பிரதீப் தாத்தாவிடம், "தாத்தா, நாம போற வழியில காடு இருக்குல்ல. இந்த வழியா வரும்போது அந்தக் காட்டுல இருக்கிற இயற்கைக் காட்சியைப் பார்த்து ரசிக்கிறதுன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்று ஆவலாகச் சொன்னான்.

"வழக்கமா நாம அதிகாலையில் புறப்பட்டு வருவோம். அதனால எல்லாத்தையும் ரசிக்க முடிஞ்சது. இந்த ராத்திரியில் எதை ரசிக்கிறது? அதிகாலையிலேயே புறப்பட்டிருக்கலாம். நீதான் மாட்டேன்னுட்ட" என்று சொல்லிவிட்டு தாத்தா வண்டி ஓட்டுபவரிடம் பேச ஆரம்பித்தார்.

"வண்டிக்காரரே இந்தக் காட்டுல திருட்டு பயமெல்லாம் ஒண்ணும் இல்லயே?"

"தெரியல பெரியவரே. அப்படியே இருந்தாலும் நம்ம கிட்ட என்னங்க இருக்கு கொள்ளையடிக்கிறதுக்கு?" வண்டிக்காரர் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டார்.

"தாத்தா, இந்தக் காட்டு வழியில் போகாம சுற்றிப் போக முடியாதா"— பிரதீப் தாத்தாவிடம் தன் சந்தேகததைக் கேட்டான்.

"போகலாம். ஆனா அதுக்கு ரொம்ப நேரம் ஆகும். அப்புறம் நாளைக்கு உன்னால் பள்ளிக்குப் போக முடியாது."

வானம் நன்றாக இருட்டி விட்டது. அவர்கள் சொல்லிக் கொண்டிருந்த அந்தக் காடும் வந்தது.



"தாத்தா. பசிக்குது தாத்தா," என்றான் பிரதீப் பசிபொறுக்காமல்.

"சரி சாப்பிடலாம்." என்று சொல்லி விட்டுத் தாத்தா லாந்தர் விளக்கின் வெளிச்சத்தில் பையில் இருந்த புளியஞ்சாதப் பொட்டலத்தைத் தேடலானார். கையில் தட்டுப்பட்ட ஒரு பொட்டலத்தை எடுத்து அதைச் சுற்றியிருந்த பாலித்தின் கவரை நீக்கிவிட்டு பொட்டலத்தைப் பிரித்தார். பிரித்தவுடனே மூக்கைச் சுளித்தார் நாற்றம் தாங்க முடியாமல்!

"என்ன தாத்தா அது நாற்றம்?" என்று கேட்டான் பிரதீப்.

"நாம ஒரு மாதத்திற்கு முன்பு வந்தபோது கொண்டு வந்த



புளியஞ்சாதம். நான் சாப்பிடாமல் பையிலேயே வைத்து விட்டேன். அதை எடுத்து எறிய மறந்ததே போய் விட்டது. அதுதான் இப்படி நாற்றம் அடிக்குது'' என்று சொல்லிவிட்டுத் தாத்தா அந்தப் பொட்டலத்தைக் கொடுத்து கீழே போட்டுவிடச் சொன்னார். பிரதீப் அதை வாங்கிக் கொண்டான்.

தாத்தா மீண்டும் புளியஞ்சாதப் பொட்டலத்தைத் தேடலானார்.

அப்போது திடீரென இரண்டு முரட்டு மனிதர்கள் வழியை மறித்து நின்றனர். கையில் கத்தியுடன் அவர்கள் நிற்பதைக் கண்டு வண்டிக்காரர் வண்டியை நிறுத்தி விட்டார்.

''ஏய். இருக்கிறதையெல்லாம் எடு'' என்று அதட்டியபடியே அவர்கள் இருவரும் அருகில் வந்தனர்.

''எங்ககிட்ட என்னப்பா இருக்கு, கொடுக்கிறதுக்கு?'' பயந்தபடியே சொன்னார் தாத்தா.


அப்போது திடீரென்று எதிர்பாராத விதமாக பிரதீப் எதையோ தூக்கியெறிந்து விட்டு, ''ஐயையோ, தாத்தா நகைப் பொட்டலத்தைத் தூக்கி எறிஞ்சிட்டீங்களே!'' என்று அலறினான். இதைக் கேட்ட இரண்டு கொள்ளையர்களும் ஆவலாக அந்தப் பொட்டலத்தை எடுக்க ஓடினார்கள். கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வண்டிக்காரர் வேகம் பிடித்தார்.

பிரதீப் வீசியெறிந்த பொட்டலம் ஒரு புதருக்குள்

கமுதி. மு. ரியாசுல்லா

சென்று விழுந்து விட்டது. திருடர்கள் இருவரும் அதைத் தேடிப் பிடிக்கவே சிரமப் பட்டனர்.

மாட்டு வண்டி முக்கால்வாசிக் காட்டைக் கடந்து விட்டது. இந்நிலையில் கூட அந்தக் கொள்ளையர்கள் வேகமாக ஓடிவந்தால் வண்டியைப் பிடித்து விட முடியும் என்பதை உணர்ந்து கொண்ட பிரதீப் தன் பையிலிருந்த பட்டாசுகளில் அணுகுண்டு ஒன்றை எடுத்து, லாந்தர் விளக்கின் சுடரில் அணுகுண்டைப் பற்ற வைத்துத் தூக்கியெறிந்தான்.



“அப்பா! டிரெயின்ல நாம போகும் போது எத்தனாவது படிக்கிறதா சொல்லணும்? என்ன வயசுன்னு சொல்லணும்..? எல்லாத்தையும் இப்பவே சொல்லிடுங்க அப்புறம் என்னைத் திட்டக்கூடாது!

- சீர்காழி வி.ரேவதி

இதற்குள் அந்தப் பொட்டலத்தை ஒரு வழியாக கொள்ளையர்கள் இருவரும் பிரித்துப் பார்த்து அதில் ஊசிப்போன புளியஞ்சாதம் இருப்பதைக் கண்டு ஏமாந்து போனார்கள். ஆத்திரத்தோடு அவர்கள் வண்டியை விரட்டத் தொடங்கிய நேரத்தில் 'டமார்' என்ற வெடிச் சத்தம் கேட்கவே, என்னமோ, ஏதோ என்று பயந்து கொண்டு வண்டியைப் பின் தொடராமல் விட்டுவிட்டனர்.

மீதியிருந்த கொஞ்சம் பட்டாசுகளையும் பிரதீப் வழி முழுவதும் வெடித்துத் தீர்த்துக் கொண்டே வந்தான்.

வண்டி பிரதான சாலைக்கு வந்ததும் தான் அவர்கள் மூவருக்கும் உயிரே வந்தது போலருந்தது. இனி பயமில்லை என்பதை உணர்ந்து வண்டிக்காரர் வேகத்தைக் குறைந்தார். வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

எல்லாரும் பிரதீப்பின் சமயோசதத்தை மாறி மாறிப் புகழ்ந்து கொண்டிருந்தா... பிரதீப் பள்ளிக்குப் புறப்படத் தயாரன...

நேரு



நேரு நமது நேரு!
நல்ல தியாக நேரு!
கூறு இவரைப் போல
கொள்கை வீரர் உண்டோ!

சினர் துரோகம் செய்ததும்
சீறி அடக்கி வைத்தவர்
வீணர் கூட்டம் அடக்கியே
நல்ல தொண்டு செய்தவர்!

- தி.தென்றலரசு, அனந்தபுரம்.

விவேகானந்தர்



கல்கத்தாவில் பிறந்த வராம்
கல்வி நன்கு கற்றவராம்
எல்லை இல்லா இறைவனையே
எதிரே கண்டிட விழைந்தவராம்

நரேந்திரன் என்றதுமே
நல்லவர் இவரை அறிவாரே
பரம ஹம்சரைப் பணிந்தவராம்
பணிவின் பெருமையை அறிந்தவராம்

பாரோர் வியக்க வெளிநாட்டில்
பாரதப் பெருமையை நாட்டியவராம்
வீரத் துறவி இவரேதான்
விவேகானந்தர் இவரேதான்!

- வெ.இளங்குமரன், திருவில்லிபுத்தூர்

நடப்போம்!

அன்பு வழியில் நடந்திடுவோம்
ஆணவத்தை அழித்திடுவோம்
இருப்பதை வைத்தே இன்புறுவோம்
ஈயா குணத்தைக் களைந்திடுவோம்
உண்மை செயல்பட வைத்திடுவோம்
ஊனம் கண்டு உதவிடுவோம்



எவர்க்கும் உழைக்க வழிதருவோம்
ஏய்ப்போர் கூட்டத்தை எதிர்த்திடுவோம்
ஐயம் இன்றிக் கற்றிடுவோம்
ஒன்றுபட்டே வாழ்ந்திடுவோம்
ஓய்வே இன்றி உழைத்திடுவோம்
ஔவை வழியிலே நடந்திடுவோம்
அஃதே நல்வழி முழங்கிடுவோம்

- சாம்ராஜ், உளுந்தூர்

நிலா!

நீல வண்ண வானிலே
நீந்துகின்ற வெண்ணிலா
பாலை போன்ற ஒளியினை
பாரில் கொட்டும் வெண்ணிலா





மேகக் கூட்டம் வந்ததும்
மூடி மறைந்து ஓடுமாம்
வேகமாக வந்திடும்
வந்து காட்சி தந்திடும்

ஒளிரும் இதை வானத்தில்
ஒட்ட வைத்த மர்மத்தை
களிப்புடனே கூறுங்கள்
காத்து நானும் இருக்கிறேன்

- சூரா. பரமேஷ் குமார்

புத்தகமாம்...!

நல்ல அழகுப் புத்தகம்,
நான் விரும்பும் புத்தகம்
நல்ல நல்ல கதைகளும்
நன்கு நிறைந்த புத்தகம்!

சிறுவர் விரும்பும் புத்தகம்
சிறந்த ஆசான் புத்தகம்.
விரும்பி மகிழ்ந்து பாடவே
நல்ல நண்பன் புத்தகம்.

வாழ்க்கை உயர்த்தும் புத்தகம்
வாங்க ஏற்ற புத்தகம்
வாழ்வில் தவறு தவிர்க்கவே
வழியைக் காட்டும் புத்தகம்

-வி.பிரபாகர், விருத்தாசலம்.



பந்து

பந்து நல்ல பந்து
பாலர் ஆடும் பந்து
நந்து சுந்து என்றே
நண்பர் ஆடும் பந்து

வட்ட வடிவப் பந்து
வண்ண நிறப் பந்து
மட்டை கொண்டு அடித்தால்
மேலே போகும் பந்து

சிறுவர் கூடி ஆட
சிறந்த நண்பன் பந்து
மறுத்துப் பேச வேண்டாம்
மகிழ்ந்து ஆட வாரீர்!

- தின.அன்புதேவன்



வாவா!



அழகிய முயலே
அருகே வா!
பழகிடும் தோழா
பக்கம் வா!
நெட்டைக் காதை
நீட்டியே வா!
குட்டை வாலை
குலுக்கியே வா!
இலைகள் தருவேன்
இங்கே வா!
வலையே இல்லை
விரைந்து வா!

- எம். சேக் உசேன், தென்காசி

பூனைக்குட்டி



சின்ன அழகுப் பூனைக்குட்டி
சொக்க வைக்கும் பூனைக்குட்டி
வெள்ளை வண்ணப் பூனைக்குட்டி
வேவு பார்க்கும் பூனைக்குட்டி

பாலைக் குடிக்கும் பூனைக்குட்டி
பதுங்கிப் பாயும் பூனைக்குட்டி
வாலைச் சுழற்றும் பூனைக்குட்டி
வம்புக் கழைக்கும் பூனைக்குட்டி

குறும்புக்காரப் பூனைக்குட்டி
குச்சி மீசைப் பூனைக்குட்டி
விருப்ப மாகப் பாலையே
வேட்டை ஆடும் பூனைக்குட்டி!

- சி.கோகுலன்

எங்கள் கோழி!

எங்கள் வீட்டு கோழிக்கு
எழிலாய் எட்டு குஞ்சுகள்
துள்ளும் குஞ்சுக் கோழிகளை
அள்ளி எடுத்தால் ஆனந்தம்

பட்டுப்போல ஒரு குஞ்சு
பறக்க முயலும் ஒரு குஞ்சு
பஞ்சு போல் ஒரு குஞ்சு
பாலின் வண்ணம் ஒரு குஞ்சு



பொன்னின் நிறத்தில் ஒரு குஞ்சு
பூவைப் போன்று ஒரு குஞ்சு
சாம்பல் நிறத்தில் ஒரு குஞ்சு
சதா தூங்கும் ஒரு குஞ்சு

எட்டுக் குஞ்சும் நிஜந்தான்
தொட்டுத் தூக்க ஆசைதான்
கிட்டேப் போனால் சுத்துது
குஞ்சைக் கோழி மறைக்குது!

- பி.சுந்தரி, விருதுநகர்.



அடர்ந்த காடு ஒன்றில் ஓர் சிங்கம் வசித்து வந்தது. சிங்கம் காட்டுக்கு ராஜாதானே? அதனால் சிங்கம் எங்கே சென்றாலும் பயபக்தியுடனும் மரியாதையுடனும் எல்லா மிருகங்களும் ஒடி ஒளிந்து கொள்ளும். எதுவுமேகிட்டே வந்து பேசாது.

சிங்கராஜா, தனக்கு யாராவது நண்பர்கள் கிடைக்க மாட்டார்களா என்று ஏங்கினார்.

ஒருநாள் சிங்கராஜா இரை தேடப் போன போது ஒரு காட்டுக் கழுதை சிக்கிக் கொண்டது.


சிங்கம் கழுதையைத் தனது குகைக்கு அழைத்துக் கொண்டு வந்தது. இதே போல், காலில் காயம் பட்டு ஓட முடியாது தவித்து சிக்கிக் கொண்ட நரி ஒன்றையும் தனக்கு நண்பனாக இருக்க அழைத்துக் கொண்டு வந்தது. மூன்றும் சிங்கத்தின் குகையில் தங்கின.

மறுநாள் பொழுது புலர்ந்தது. "நீங்கள் இருவரும் இங்கேயே இருங்கள், நான் போய் இரை ஏதாவது தேடிக் கொண்டு வருகிறேன்" என்று கிளம்பியது சிங்கம். அது வேட்டையாடித் திரும்பி வந்த போது ஒரு புள்ளி மானைக் கொண்டு வந்தது.

"நண்பனே, இந்த மானைப் பங்கு போடுங்கள்" என்று கழுதையிடம் கேட்டுக் கொண்டது சிங்கம்.

சிங்கம் அளித்திருந்த உரிமையில் தனது நிலையை

கழுதை மதி!



றந்திருந்த கழுதை, மானை மூன்று பங்காகப் பாட்டது. பிறகு ''நண்பரே, எந்தப் பங்கை வண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று ங்கத்திடம் கேட்டுக் கொண்டது.

சிங்கத்திற்குக் கோபமான கோபம். "வேட்டை தேடி இரை கொண்டு வந்த எனக்கு இதுதானா பங்கு?" ன்று ஆத்திரத்துடன் கேட்ட சிங்கம், கழுதையை ங்கி அறைந்தது. உடனே கழுதை செத்து விட்டது.

"நண்பரே, நீங்களாவது சரியாகப் பங்கு போடுங்கள்" ன்று நரியைக் கேட்டுக் கொண்டது சிங்கம்.

பயந்து நடுநடுங்கிய நரி, தனக்கு மிகவும் காஞ்சமாக வைத்துக் கொண்டு மீதியை ங்கத்திற்கு ஒதுக்கி எடுத்துக் கொள்ளும்படி வண்டியது. சிங்கத்திற்கு ஒரே மகிழ்ச்சி.

''இவ்வளவு புத்திசாலியாக இருக்க எங்கே ற்றீர்கள்?" என்று கேட்டது சிங்கம்.

"நண்பர் கழுதையாரின் முடிவில் இருந்து!" என்றது ரி அமைதியாக.

அடுத்தவருக்கு ஏற்படும் முடிவில் இருந்து பாடம் ற்பவன் தான் மகிழ்ச்சியாக இருப்பான்.

சார் தபால்

கண் விழித்துப் பாருங்கள்!

★ இரண்டு இதழ்களுக்குப் பிறகு வெளி வந்திருந்த பிருந்தாவனக் கவியரங்கம் தலையசைத்துப் பாட வைத்தது - திருப்புகழூர் வா. ஞானவேல், தாழையூத்து மு. சந்திரமணி, எலவாழைப்பட்டி மு. இருளாண்டி, தின்னனூர் வா. செண்பகவல்லி, கருணாகரனூர் வா. செல்லியப்பன், விருத்தாசலம் வி. பிரபாகர், ஆரணி கே. யுவராஜ் மற்றும் பலர்.

★ 'மு.ஜா. மகேஷ்! - நாடகம் எத்தனை அழுத்தமாகத் திருகுறள் கருத்துக்களைத் தெரிய வைக்கின்றது! யாருமே செய்யாத தொண்டுசார் இது! எழுதியவர் பெயரைப் போடக் கூடாதா? - கிணத்துப்பாளையம் மா. அரசாட்சி, திருமங்கை வி. பால சுப்ரமணியன், வேப்பம்பட்டி கி. தெய்வயானை, ஆரணி, ப. ஞானமூர்த்தி, விருத்தாசலம் வி. பிரபாகர், ஏழு கிணறு எஸ். பாலாஜி, வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம், விசனூர் வி.ஜி. கிருஷ்ணன், மற்றும் பலர்.

★ பரிசு பெற்ற கதை, ''தண்ணீரில் போடாதே!'' என் போன்ற சிறுமியின் படைப்பா! பிரமிப்பாக இருக்கிறது சார்! - சின்னாளப்பட்டி வா. பரசுராமன், இராஜபாளையம் கா. தீனராஜு, செட்டியார்பட்டி கா. அழகப்பன், கோவிலூர் மா. திருமலை ராஜா, உசிலம்பட்டி கு. கண்ணப்பன், ஆரணி, ப. ஞானமூர்த்தி, சோழன் மாளிகை கு. கருணாநிதி, கடலூர் கி. கணேஷ்ராம், மற்றும் பலர்.

★ வாண்டுமாமாவுக்கு ஒரு சபாஷ்! மரகதச் சிலைக்குப் படம் போடும் ரமணிக்கு இரண்டு சபாஷ்! - தாராபுரம் கி. செல்வமணி, சம்பாமணியூர் வா. சரளா, எட்டுக்குடி மா. செங்குட்டுவன், தணிகை மா. சின்னப்பையன், வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம், ஆரணி கே. யுவராஜ், மற்றும் பலர்.

★ பாரதியார் பாடல்களை ஊன்றிப் படிக்க வைத்து விட்டீர்களே! பெரிய ஆள்தான் நீங்க! - எட்டயபுரம் வி. சுந்தரமூர்த்தி, திருப்புகலூர் வா. தஞ்சுண்டன், மோகனூர் தா. குங்குமமணி, பாளையம்கோட்டை செல்ல. தங்கப்பன், துவாக்குடி மா. முருகப்பன், சோடசாட்சியூர் வா. கக்கூர், விருத்தாசலம், இர. பிரசன்ன குமார், மற்றும் பலர்.

★ என்னிடம் நல்ல தொடர்கதை இருக்கிறது. அனுப்பி வைக்கலாமா? - புதுகை. மா. செல்லப்பன். கதைகள் பாடல்களை நான் எழுதி அனுப்பலாமா? - சூரியனார்கோயில், மா. திரிபாலா. முதலில் கதைகளை எழுதி அனுபவம் பெற்ற பிறகு தொடர்கதை எழுதுவதே முறை. கதை கட்டுரைகளை தாராளமாக அனுப்பலாமே! சிறந்தவற்றை வெளியிடக் காத்திருக்கிறோமே!'' - ஆசிரியர்.

★ புவனா தேடிய புதையல்' ஒரே சஸ்பென்ஸ் சார். இப்பவே முழுக்கப் படிச்சுடணும் போல இருக்குது. ம.செவின் படங்கள் பிரமிக்கும்படி இருந்தன. - சாத்தூர் மி. நாராயணசாமி, பள்ளிபாளையம் தா. பாலாஜி, காஞ்சி ஏ. நித்திலன், மேட்டூர் வா. முகமது ஷெரிப், ஆரணி ப. ஞானமூர்த்தி, விருத்தாசலம் வி. பிரபாகர், சோழன் மாளிகை கு. கருணாநிதி, மற்றும் பலர்.

★ வரவர ஆசிரியர் சுத்தமாகத் தூங்கியே விடுகிறார் என்று சந்தேகப்படுகிறோம். என்ன சார் ஏற்கெனவே வந்த ஜோக், வந்த சம்பவங்கள்! கண்ணை முழுச்சுப் பாருங்க சார்! - மதுரவாயில் கி. சொக்கலிங்கம், திருநகர் வா. பெரியநாயகி, புதூர் தா. பாண்டியராஜன், சின்ன மொரப்பூர் கி. கனிமொழி, திருத்துறைப்பூண்டி எ. சத்தியநாராயணன், அரக்கோணம் எல். கோபால கிருஷ்ணன், விருத்தாசலம் இரா. பிரசன்னகுமார், நாகூர் இ.தமீம் அன்சா, மற்றும் பலர்.

★ கேளுங்கள் சொல்லப்படும் பகுதியில் தேசிய அளவில் அதிக நேரம் ஓடிய திரைப்படம் ''மேரா நாம் ஜோக்கர்'' என்று சேரநம்பி பதிலளித்திருக்கிறார். எங்கள் தாத்தா சிவாஜி கணேசன் நடித்த 'அந்த நாள்' என்கிறார் - ஜாகீர் அம்மாபாளையம் முது சுப்ரமணி. ஆர்.கே. பிலிம்ஸ் ''சங்கம்'' தானே சரியான பதில்? - செம்பனார்கோவில் ஐ. ஜெம்மு. (''சங்கம்'' என்பதே சரியான விடை. இதுவும் ஆர்.கே. பிலிம்ஸ் தயாரித்ததே - ஆசிரியர்.)

★ ''சிங்கம் ராஜாதானா?'' - சிங்கத்தைப் பற்றி இத்தனை செய்திகள் நமக்குத் தெரியாதா என்று அயர வைத்தது. - பவித்ரமாணிக்கம் டி. முருகேசன், விருத்தாசலம் வி. பிரபாகர், சிதம்பரம் கி. சார்லி, திருவள்ளூர் தா. ஞானதேசிகன், இடைக்காட்டுப் பள்ளி கரு. மௌலானா, ஆரணி ப. ஞானமூர்த்தி, சென்னை கி. சிவா, மற்றும் பலர்.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

க்வாக் க்வாக் பட்டாளம்!
குள்ள வாத்துப் பட்டாளம்!

